# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No. 3 of 2004**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா
**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www. biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

தமிழ் கிறிஸ்தவ உலகில் பிரசங்கம் அது வகிக்க வேண்டிய இடத்தை வகிக்க முடியாமல் தரமிழந்து கீழானநிலையில் இருப்பதை இன்று அறியாதவர்கள் இருக்க முடியாது. இந்நிலமைக்கு நம் மக்கள் மத்தியில் இருக்கும் ஒரு குறைபாடும் காரணமாக உள்ளது. அதாவது, வேத அறிவில் நம் மக்கள் மிகவும் தாழ்ந்த நிலையில் இருப்பதும் பிரசங்கம் தரமிழந்து காணப்படுவதற்கு ஒரு முக்கிய காரணமாக உள்ளது. வரலாற்றில் ரோமன் கத்தோலிக்க மதம் பல நூற்றாண்டுகளாக கொடுங்கோலாட்சி செய்ய முடிந்ததற்கு காரணம் அவர்கள் மக்கள் வேதத்தை வாசிக்க முடியாதபடி செய்திருந்ததுதான். இலத்தீன் மொழியில் மட்டுமே இருந்த வேதத்தை மக்களால் வாசிக்க முடியவில்லை. அதை வாசித்து விளங்கிக் கொள்வதற்கும், மொழி பெயர்ப்பதற்கும் அன்று கடுந்தடையிருந்தது. அதை மொழிபெயர்ப்பவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அந்தவகையில்தான் கிறிஸ்தவத்தை வளரவிடாமல் தடுத்து வைத்திருந்தது ரோமன் கத்தோலிக்க மதம்.

இன்று, அன்று ரோமன் கத்தோலிக்க மதம் செய்தது போன்ற தடைகள் நம்மத்தியில் இல்லாமலிருந்தாலும் அதைவிடக் கொடுமையாக திருச்சபைப் போதகர்களும், வேதத்தைப் பிரசங்கிக்கிறவர்களும் ஆத்துமாக்களை இருண்ட உலகத்தில் வைத்திருக்கின்றனர். வேதப் பிரசங்கப் பஞ்சம் நம்மத்தியில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. அத்தோடு அனேகர் உப்புச்சப்பில்லாத "தியானச் செய்திகளை" கொடுத்தும், "தியான நூல்களை" எழுதியும் ஆத்துமாக்களை சோம்பேரிகளாக வைத்திருக்கின்றனர். அன்றாடம் வேதத்தை வாசிப்பதை விட்டுவிட்டு ஆத்துமாக்கள் தங்களுடைய ஆத்தும தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுவதற்கு இந்தத் தியான நூல்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். தியான நூல்களை எழுதி விற்காத ஒரு ஊழியக்காரனை தமிழ் நாட்டில் பார்ப்பது அரிது. இந்தத் தியான நூல்களும், வேத வியாக்கியானம் அறவே இல்லாத தியானச் செய்திகளும் இன்று தமிழ் கிறிஸ்தவர்களை 16ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்ததுபோன்ற இருண்டகாலத்தில் வைத்திருக்கின்றன. இருதயமிருந்தும் சிந்திக்க முடியாமலும், வேத அறிவில்லாமலும், ஆத்மீக பலவீனத்தோடு தள்ளாடிக் கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ்தவத்திற்கு விடுதலை வேண்டுமானால் நம் மக்கள் வேதத்தைக் கையில் எடுத்து, வாசித்து, தியானித்து அதன் மூலம் கர்த்தர் தருகின்ற செய்தியை நேரடியாகக் கேட்கத் தயாராக வேண்டும். இது நம்மினம் வாழ, வளர ஒரு அவசியமான சிறு ஆரம்பமாக இருக்கும். - ஆசிரியர்

# உப்புச்சப்பில்லாத தியானச் செய்திகள்

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் காணப்படும் கிறிஸ்தவம் வேதபூர்வமான இறையியல் பஞ்சத்தால் வாடிவருவதை திருமறைத்தீபத்தின் மூலம் அடிக்கடி வாசகர்களுக்கு நினைவுறுத்தி வருகிறோம். பிரசங்கம் என்ற பெயரில் ஆவியும் அனலுமில்லாத சுருக்கமான பேச்சுக்களும், தனிமனித அனுபவங்களும், அரைவேட்காட்டு சாட்சிகளும் சபைகளை அலங்கரித்து ஆத்துமாக்களை ஆத்மீக பஞ்சத்தில் அலைய விட்டுக் கொண்டிருக்கின்றன. சத்தான, வேதபூர்வமான இறையியல் கோட்பாடுகளை அறிந்து கொள்ள முடியாத நிலையில் பெந்தகொஸ்தே/ கெரிஸ்மெடிக் ஆக்கிரமிப்பில் இருண்ட காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் நம்மக்கள். கருத்துள்ள, பொருளுள்ள கிறிஸ்தவ இலக்கியம் என்பது தமிழுலகம் பெருமளவில் அறியாததொன்றாக இன்றும் இருந்து வருகிறது. மொத்தத்தில் இந்தக் கணினி யுகத்தில் நாமே நம்மைப் பார்த்து வெட்கப்பட்டு நிற்க வேண்டிய நிலையில் தமிழ் கிறிஸ்தவம் இருந்து வருகிறது.

சில நாட்களுக்கு முன்பு நான் தமிழகத்தில் இருந்து எங்கள் நாட்டுக்கு வந்த ஒரு விசுவாசக் குடும்பத்தை சந்திக்க நேர்ந்தது. சென்னையில் ஒரு “பெரிய” பெந்தகொஸ்தே சபையைச் சேர்ந்தவர்கள் அவர்கள். அவர்களோடு பேசிப்பார்த்தபோது விசுவாசத்தைக்குறித்தும், மனந்திரும்புதலைக் குறித்தும் வேத அறிவில்லாதவர்களாகக் காணப்பட்டனர். கத்தோலிக்க மதத்திற்கும், கிறிஸ்தவத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகூட அவர்களுக்குத் தெரியாதிருந்தது. வேதப்பகுதிகளை எப்படி வாசித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையே அறியாதவர்களாக இருந்தார்கள். சபை வரலாற்றை அவர்கள் தங்கள் வாழ்நாளில் கேள்விப்பட்டதில்லை. ஐந்து வயது குழந்தைப் பிள்ளைகளைப்போல அறிவில் வளராது, சிந்திக்கும் சக்தியிழந்து இருந்த அவர்களைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. தன்னிலை மறந்து அல்லேலூயா சொல்லி சத்தமாக ஜெபிக்கவும், துதி என்ற பெயரில் ஒருசில வார்த்தைகளை மட்டும் நூறுதடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லி சத்தமிடவும் மட்டுமே அவர்களுக்குத் தெரிந்திருந்தது. மெய்யான ஊழியக்காரர் யார்? போலிகள் யார்? என்று இனங்காணும் பக்குவமே இல்லாது இருந்தார்கள் அவர்கள். எல்லா நாடுகளிலும் தமிழ் கிறிஸ்தவம் இந்த நிலையில்தான் இருக்கிறது என்று நீங்கள் சொல்லுவது எனக்குக் கேட்கிறது. நம்மக்கள் இப்படித் தொடர்ந்து எத்தனைக் காலத்துக்கு அறியாமையில் வாடப்போகிறார்கள்? விசுவாசிகள் என்ற பெயரில் விசுவாசமே இல்லாது வேதத்தைப் புறக்கணித்து உணர்ச்சி வெள்ளத்தில் நீச்சலடித்து தொடர்ந்தும் உயிரற்று இருக்கப் போகிறார்களா? இந்தக் கேள்விகளைக் கேட்காமல் மானமுள்ள எந்த விசுவாசியும் இருக்க முடியுமா? கேள்விகள் மட்டும் பதில்களாக அமைந்துவிடாது என்பது எனக்குத் தெரியும். இந்த நிலைமாற நம்மக்கள் அறிவுபூர்வமாக சிந்திக்க நாம் என்ன செய்ய வேண்டும்? சிந்திக்கும் பக்கு

வமே இல்லாது, மூளையை வீட்டில் வைத்துவிட்டு, திருச்சபை ஆராதனை வேளைகளில் அல்லேலூயா கோஷமெழுப்பி வாழும் தமிழ் மகனைத் திருத்த ஊழியக்காரர்கள் இன்று செய்ய வேண்டியதென்ன? இந்தக் கேள்விகளுக்கு பதிலளிப்பதுதான் என்னுடைய நோக்கமாக இருக்கின்றது.

கடந்த இருபத்தி ஐந்து வருடங்களாக தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரும் பிரசங்க ஊழியத்தை நான் அக்கறையோடு கவனித்து வந்திருக்கிறேன். அதேவேளை தமிழில் வெளிவரும் கிறிஸ்தவ இலக்கியங்களையும், இதழ் களையும், பத்திரிகைகளையும் பார்த்தும் படித்தும் வந்திருக்கிறேன். நூற்றுக் கணக்கில் அவை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. பிரசங்கங் களும் சரி, இலக்கியங்களும் சரி, இதழ்களில் வெளிவரும் செய்திகளிலும் சரி, ஒரு முக்கியமான அம்சத்தை என்னால் கவனிக்காமல் இருக்க முடிய வில்லை. இவை எல்லாமே வேத கொள்கைகள், கோட்பாடுகளற்ற (Doctrinal teaching) உப்புச்சப்பில்லாத தியானச் செய்திகளாகவே இருந் திருக்கின்றன, தொடர்ந்தும் இருந்து வருகின்றன. அதுவும் இவற்றை வெளிப் படையாக "தியானச் செய்திகள்" (Devotional messages) என்ற பெயரிலும் அழைத்து வருவது வழக்கில் இருக்கிறது. இந்தத் தியானச் செய்திகளில் எந்தவித வேதக் கோட்பாடுகளுக்கும் இடமிருக்காது. இந்த வகையில் பிரசங் கிக்கிறவர்களும், எழுதுகிறவர்களும் நிர்த்தாட்சன்யமாக வேதக் கோட் பாடுகளைப் புறக்கணிக்கிறார்கள். இதை நியாயப்படுத்திப் பேசும் இவர்கள், "ஆத்துமாக்களுக்கு அறிவென்பதே இல்லை, அவர்களுக்கு சிந்திக்கும் வழக்க மும் இல்லை, அதனால், அவர்கள் சிந்திக்க அவசியமில்லாமல், உணர்ச்சி வசப்படுகிறமாதிரி ஒரு சிறுசெய்தியை உதாரணத்தோடு கொடுத்தால் மட்டும் போதும்" என்று சொல்லுவார்கள். இன்றைக்கு தியானச் செய்திகள் என்ற பெயரில், "அன்றன்றுள்ள அப்பம்", "அனுதின மன்னா", "தின தியானம்", "தினசரி தியான நூல்" என்று பல்வேறு பெயர்களில் நூற்றுக் கணக்கில் இந்தத் தியானச் செய்தி நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வேதமறிந்தவர்கள் மத்தியில் "தியான நூல்கள்" (Devotional writings) என்ற வார்த்தைகளுக்கு பொருளே வேறு. தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் கருத்தை விட அது பொருளில் வேறுபட்டது. வேத மறிந்தவர்கள் உதாரணமாக, ஜோன் பனியன் எழுதிய மோட்ச பிரயாணம் (Pilgrims Progress), பரிசுத்த யுத்தம் (Holy War) போன்ற நூல்களை "தியான எழுத்துக்கள்" என்பார்கள். ஏனெனில், இவை வேதக் கோட்பாட்டு விளக்கங்களை நேரடியாக அளிக்காமல், அந்தக் கோட்பாடு களை உருவகங்களின் மூலம் அளிக்கின்றன. இந்த நூல்களை வாசிப்பதன் மூலம் வேதக் கோட்பாடுகளை அனுபவரீதியாக நாம் விளங்கிக் கொள்கிறோம். இந்த நூல்களில் வேதக் கோட்பாடுகள் நிச்சயமாக நிறைந்து வழிகின்றன, ஆனால், அவை விளக்கப்பட் டிருக்கும் விதம்தான் வித்தியாசமானது. தமிழ்

**தமிழகத்தில் வெளிவரும் சில "தியான நூல்கள்"**

அன்றன்றுள்ள அப்பம்
அனுதின மன்னா
தின தியானம்
தினசரி தியான நூல்
ஜீவ அப்பம்
லெந்து கால தியானம்
மேலறை
தேவனின் பாதையில்
அனுதின வாழ்வில் தேவன்
இன்று நான் இயேசுவுடன்

*கிறிஸ்தவர்கள் மத்தியில் "தியான நூல்கள்" இந்த வகையில் அமையவில்லை. அவை வேதக் கோட்பாடுகளையே குழிதோண்டிப் புதைத்துவிடுகின்றன. சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும் எழுதிய, அனுபவரீதியாக வேதபோதனைகளைத் தரும் "தியான நூல்களை" கரும்புச் சாறுக்கு ஒப்பிட்டால், தமிழில் இன்றிருக்கும் பெரும்பாலான "தியான நூல்களை" கரும்புச் சக்கைக்கு ஒப் பிடலாம். வேத சத்தையெல்லாம் உறிஞ்சித் தள்ளிவிட்டு வெறும் சக்கையாக இருக்கும் பயனற்ற எழுத்துக்களே இன்று தமிழில் இருக்கும் அநேக "தியான நூல்கள்".*

**தியானச் செய்திகள் என்னைப் பொறுத்த வரை நகர்ப்புறங்களில் இன்றைக்கு விற்கப்படும் வேக உணவு (fast food) வகையைப் போன்றதே. வீட்டில் இருந்து அதே வேக உணவை நாம் தயாரிப்பதானால் அதற்கு நேரம் வேண்டும், பக்குவமாக அதைச் செய்யத்தெரிய வேண்டும், செய்வதற்கான எல்லாப் பொருட்களும் தேவை. இந்தக் கஷ்டமெல்லாம் இல்லாமல் போகிற வழியில் வண்டியை நிறுத்தி ஒரு சில நிமிடங்களில் பணத் தைக் கொடுத்து அந்த வேக உணவை வாங்கிச் சாப்பிட்டு விடலாம். நேரமும், மிஞ்சும், உழைப்பும் மிஞ்சும், விலையும் குறைவு. இதேபோல்தான் "தியானச் செய்திகளும்" விசுவாசிகளுக்கு உதவி வருகின்றன.**

*நம் மக்களை அறிவுபூர்வமாக சிந்திக்க வைக்க வேண்டுமானால் இந்தத் "தியானச் செய்திகளை" மட்டும் வாசிக்கும் சோம் பேரித்தனத்தை நாம் முதலில் ஒழித்துக்கட்ட வேண்டும். ஆம்! இது சோம்பேறித்தனத்தின் அடையாளம்தான். ஒருவன் வேதத்தைத் தன் கையில் எடுத்து அதை வாசித்து, வாசித்த பகுதியை கவனமாக ஆராய்ந்து, கேட்க வேண்டிய கேள்விகளையெல்லாம் கேட்டு அந்தப் பகுதி தரும் விளக்கத்தைப் புரிந்து கொண்டு, அதன் அடிப்படையில் நாம் எதைச் செய்ய வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு முதலில் எத்தனை நேரம் தேவை? நேரத்தைத் தவிர எத்தனை உழைப்பு தேவை? அதுமட்டு மல்லாமல் மூளைக்கும் வேலை கொடுக்க வேண்டும். இந்த வம்பெல்லாம் எதற்கு என்று உதறி விட்டு சாம் ஜெபத்துரையின் "அன்றன்றுள்ள அப்பத்திற்கு" மாத சந்தா கட்டிவிட்டால் ஒவ்வொரு நாளுக்கும் தேவையான தியானச் செய்தியை வேக உணவு மாதிரி சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைப் பதற்குப் பெயர்தான் சோம்பேரித்தனம். தோசை செய்வதற்கு உழுந்து வாங்கி, அதை ஊர வைத்து, உரலில் போட்டு ஆட்டி பின்னால் கஷ்டப்பட்டு தோசை செய்வதைவிட "திடீர் தோசை" மாவை வாங்கி சுலமாக எந்தக் கஷ்டமும் இல்லாமல் தோசை செய்து சாப்பிடுவதைப் போலத்தான் "தியானச் செய்திகளும்" பலருக்கும் பயன்படுகின்றன. அதனால்தான் இன்றைக்கு தியானச் செய்தி எழுதுகிறவர்களும், தியான நூல்கள் விற்பவர் களும் அதிகம். மற்ற எல்லாவற்றையும்விட இவைதான் இன்று விசுவாசிகள் மத்தியில் அதிகம் விலை போகின்றன. விலை போகாமல் என்ன செய்யும்? கஷ்டப்படாமல், உழைக்காமல் ஓசியில் யாரோ செய்திருக்கும் அசட்டுத்*

*தியானத்தின் பலனை ஒரு சில ரூபாய்களைக் கொடுத்து வாசித்துப் பலனடைய கசக்கவா செய்யும்! இது தெரியாமலா சாம் ஜெபத்துரை நூற்றுக் கணக்கில் உப்புச்சப்பில்லாத தியான நூல்களை எழுதித் தள்ளிக் கொண் டிருக்கிறார். இது போதாதென்று போதகர்களையும், பிரசங்கிகளையும் சோம் பேறிகளாக்க, "365 நாட்களுக்கான செய்திகள்", "52 வாரங்களுக்கான செய்திகள்" என்று சோம்பேரிப் பிரசங்கிகளின் சோம்பேறித்தனத்தை மேலும் வளர்க்க அவர்களுக்கு உப்புச்சப்பில்லாத "திடீர் செய்தி" தயாரித்தளிக்கும் பணியையும் இவர் செய்துவருகிறார்.*

*இந்தத் தியானச் செய்திகளால் வரும் ஆபத்தைப் பற்றி விளக்காமல் இருக்க முடியாது.*

**(1) முதலில், இவை விசுவாசிகளை சோம்பேறிகளாக வைத்திருக்கின்றன.**

*ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய தியானவேளைகளில் வேதப் புத் தகத்தைத் தானே வாசித்து விளங்கி அதன்படி நடக்க வேண்டும் என்றுதான் கர்த்தர் சொன்னாரே தவிர, தான் செய்ய வேண்டிய கடமையைச் செய்யா மல் வேறொருவருடைய உழைப்பில் சுகம் காணச் சொல்லவில்லை. நான் இங்கே சொல்லுவது கர்த்தருக்கும் நமக்கும் இடையில் மட்டும் தனிமையில் நடக்கும் தனித்தியான வேளையைப்பற்றித்தான். அந்தத் தனித் தியானத்தில் நாம் நேரடியாக வேதத்தின் ஒருபகுதியை வாசித்து தியானித்து ஜெபம் செய்வதையே கர்த்தர் விரும்புகிறார். அதைச் செய்வதற்கு ஒரு விசுவாசி இறையியல் அறிஞனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. நேரத்தைக் கொடுத்து கவனத்தோடு ஒரு வேதப்பகுதியை ஒவ்வொரு விசுவாசியும் வாசிக்க வேண்டுமென்பது கர்த்தரின் எதிர்பார்ப்பு. அதைக்கூடச் செய்ய சோம்பேறித்தனம் கொண்டவர்கள் உண்மையிலேயே கர்த்தரின் விசுவாசிகளா? என்ற சந்தேகம் எழுவதில் தப்பில்லை. இந்தத் தியான வேளையில் "தியான நூல்கள்" நுழையக்கூடாது. இந்தத் தனிப்பட்ட வேத தியானத்தில் சோம்பேறித்தனம் கொண்டவர்கள் ஆத்மீக வாழ்வில் வளர்வது கஷ்டம். இந்த விஷயத்தில் சோம்பேறித்தனத்தைத்தான் "தியான நூல்கள்" வளர்த்துக் கொண்டிருக்கின்றன. ஸ்கொட்லாந்தில் போதகராக இருக்கும் மொரிஸ் ரொபட்ஸ் "ஒரு விசுவாசியினுடைய தனிப்பட்ட தியான நேரங் களில் ஸ்பர்ஜனுடைய பெயரில் வரும் தியான நூல்களை* (Morning and Evening[1]) *வாசிப்பதைக்கூட நான் அங்கீகரிப்பதில்லை" என்று தன்னுடைய பிரசங்கத்தில் ஒருமுறை கூறியிருக்கிறார். அதற்குக் காரணம் கூறிய அவர் "நாம் தியான வேளையில் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய அது ஆபத் தாக முடிகிறது" என்றார். ஸ்பர்ஜன் தன்னுடைய செய்திகளும், பிரசங்கங்களும் தியான நூல்களாக வெளிவருவதற்காக எழுதவில்லை. அவருடைய பிரசங் கங்களை நாம் தியானவேளை தவிர்ந்த வேறு நேரங்களில் வாசிப்பதே நல்லது. தியான நூல்களை எழுதி விற்கின்ற, இதை வாசிக்கின்ற அன்பர்களே! தயவு செய்து கர்த்தருடைய பிள்ளைகளின் சோம்பேறித்தனத்திற்குத் துணை போய் அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு இடையூராய் இருக்காதீர்கள்.*

**(2) யாரோ ஒருவர் எழுதுகிற தியானச் செய்தி, தனித்தியானத்தில் கர்த்தரோடு நமக்கிருக்க வேண்டிய உறவுக்கு இடையூராக அமையும்**

*ஒரு மனிதர் எத்தனை பெரிய அறிஞராக இருந்தாலும், ஏன்! லூதராக இருந்தாலும், ஸ்பர்ஜனாக இருந்தாலும் சரி, அவர்களுடைய தியான*

*சிந்தனைகள் அவர்கள் கிறிஸ்துவில் அடைந்த அனுபவங்களே தவிர நம் முடைய அனுபவங்கள் ஆகிவிடாது. நமது தனிப்பட்ட தியானவேளையில் வேறு யாரையும் அல்லது "தியான நூல்களையும்" நுழையவிடுவது நாம் நேரடியாக கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்குத் தடையாக இருந்துவிடும். அத்தோடு நமது சிந்தனைகளைக் கர்த்தருக்கு முன் வைப்பதற் கும் தடையாக இருந்துவிடும். எப்படி என்று கேட்கிறீர்களா? நாமே ஒரு வேதப்பகுதியைத் தெரிவு செய்து வாசிக்காமல் யாரோ ஒருவருடைய தியானச் செய்தியை வைத்துத் தியானிக்கும்போது அது நாம் நேரடியாக செய்கிற தியானமாகாது. கர்த்தர் அதை விரும்பவில்லை. அவர் நாமே ஒவ்வொரு நாளும் சொந்தமாகத் தெரிந்துகொண்ட ஒரு வேதப்பகுதியைத் தெரிவுசெய்து வாசிக்கும்படி சொல்லுகிறார். அத்தோடு அந்தப்பகுதியில் கர்த்தர் சொல்லி யிருப்பதை யாருடைய தலையீடும் இல்லாமல் நாமே நமது மனதைப் பயன் படுத்தி சிந்திக்கும்படியும் கர்த்தர் எதிர்பார்க்கிறார். அப்படி சிந்தித்து ஆராய்கிற போதுதான் கர்த்தர் தம்முடைய ஆவியின் மூலம் நம்மை வழிநடத்தி தன்னுடைய வார்த்தையில் எழுதியிருப்பதை நாம் விளங்கிக் கொள்ளச் செய்கிறார். அது மட்டுமல்ல, அந்த வசனங்களின் போதனைகளின்படி நாம் நடக்க வேண்டும் என்ற உந்துதலையும் நாம் நேரடியாக அடைகிறோம். வேறு மனிதர்களுடைய தியானச் செய்திகள் இந்த ஆத்மீகக் காரியங்கள் நம்மில் நடக்காதபடி தடையாக இருந்துவிடுகின்றன. அந்தத் தியானச் செய்தி களில் இருப்பவை வேறு மனிதர்களுடைய சிந்தனைகள் என்பது கர்த்தருக்குத் தெரியாதா, என்ன! இதற்காக நாம் பிரசங்கங்கள் கேட்கக்கூடாது, நல்ல கிறிஸ்தவ இலக்கியங்களை, ஏன்! இந்தப் பத்திரிகையைக்கூட வாசிக்கக் கூடாது என்று சொல்ல வரவில்லை. கர்த்தரே அவற்றையும் அனுமதித்திருக் கிறார். நம்முடைய ஆத்மீக வளர்ச்சிக்கு அவையெல்லாம் நிச்சயம் அவசியம். ஆனால், அவற்றை* **நாம் வாசிக்க வேண்டிய நேரமும் சந்தர்ப்பமும் வேறு**. *அவற்றை நாம் நம்முடைய தனிப்பட்ட தியான நேரத்தில் வாசிக்காமல் வேறு சமயங்களில் வாசிக்க வேண்டும். நம்முடைய தனித் தியானவேளை கர்த்தருக்கும் நமக்கும் மட்டும் சொந்தமான நேரம். அந்த நேரத்தைத் "தியான நூல்கள்" ஆக்கிரமிக்க இடந்தரக்கூடாது.*

**(3) பெரும்பாலான "தியான நூல்கள்" உப்புச்சப்பில்லாத சம்பவத் தொகுப்பு களாகவும், தனிமனித அனுபவங்களையுமே உள்ளடக்கியிருக்கின்றன**

*உதாரணத்திற்கு சாம் ஜெபத்துரையின் "அன்றன்றுள்ள அப்பத்தின்" சில பக்கங்களை வாசித்துப் பார்த்தால் இது புரியும். ஒரு வேத வசனத்தை எடுத்துக் கொண்டு அந்த வசனத்தின் கருத்தே தெரியாமல் இதைத்தான் அந்த வசனம் சொல்லுகிறதென்ற அனுமானத்தோடு மனித வாழ்க்கையிலும், உலகத்திலும் நடந்த அன்றாட சம்பவங்களை உதாரணம் காட்டி உணர்ச்சி ததும்ப எழுதப்பட்டதாக அவை இருக்கும். இவற்றை வாசிப்பதால் விசுவாசி வேத ஞானத்தை பெற்றுக் கொள்ள முடியாது. அந்தப் பக்கங்களில் சொல் லப்பட்டவை மனதுக்கு இதமானவையாக இருக்கலாம். ஆனால், கர்த்தரின் சத்தமாக நிச்சயம் இருக்காது. இந்த உப்புச்சப்பில்லாத "தியானச் செய்திகள்" எப்போதும் ஒரு பக்கத்துக்கு குறைந்ததாக சீக்கிரமாக வாசித்து முடிக்கக் கூடியதாக இருக்கும். உடல் நலத்துக்காக நாம் சாப்பிடும் வைட்டமின் மாத்திரைகளைப் போல ஆத்மீக நலத்துக்கான வைட்டமின் மாத்திரைகளாக சிறிய வடிவத்தில் இவை அமைந்திருக்கும். ஆனால், இந்த ஆத்மீக வைட்ட*

*மின் மாத்திரைகளில் இருதயத்துக்கு நலத்தைக் கொடுக்கும் எந்தச் சத்தும் இருக்காது. இவற்றை வாங்கப் பயன்படுத்தும் நம் பணம் மட்டும்தான் விரயமாகும்.*

**(4) தமிழிலிருக்கும் "தியான நூல்களும்" "தியானச் செய்திகளும்" வேதக் கோட்பாடுகளுக்கு ஒருபோதும் இடங்கொடுப்பதில்லை**

*மிக முக்கியமாக இந்தத் "தியான நூல்களில்" வேதக்கோட்பாடுகளையே பார்க்க முடியாது. இவற்றை வாசிக்கிறவர்கள் சிந்திப்பதற்கு அவசியமில்லாதபடி குறுகிய நேரத்தில் இருதயத்தில் சாந்தத்தை அடைவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பதால் இவற்றில் வேதக்கோட்பாடுகள் தலை நீட்டியும் பார்க்காது. வேதக்கோட்பாடுகள் நம் இருதயத்துக்கு சாந்தமளிக்க முடியாது என்ற தவறான ஊகத்தின் அடிப்படையிலேயே இவை எழுதப்பட்டிருக்கும். ஐந்து வருடங்களுக்கு தன்னுடைய வாழ்க்கையில் இந்தத் "தியான நூல்களை" மட்டும் வைத்துத் தியானம் செய்திருக்கும் ஒரு ஆத்துமாவை நாம் ஆராய்ந்து பார்த்தால் அங்கே வேத ஞானமோ, கர்த்தருக்குள் ஆழமான, நிச்சயமுள்ள ஒரு உறவோ இல்லாமலிருப்பதை உடனடியாகக் கண்டுகொள்ளலாம். கர்த்தரின் இறையாண்மை பற்றியோ, அவருடைய பராமரிப்பு பற்றியோ, திரித்துவப் போதனைகளையோ, இயேசு கிறிஸ்துவின் கல்வாரிப்பலியின் மகிமையையோ இந்தத் "தியான நூல்களில்" காண முடியாது. கோழியை உரிப்பதுபோல வேத வசனங்களில் இருக்கும் வேத போதனைகளை யெல்லாம் உரித்தெடுத்துவிட்டு நம் இருதயத்தில் போலியான ஒரு சாந்தத்தை ஏற்படுத்தும் சந்தன வாசனையைத் தடவி எழுதப்பட்டதாகத்தான் இந்தத் "தியான நூல்கள்" இருக்கும்.*

*இந்த ஆக்கம் முழுவதும் பெரும்பாலும் தியான நூல்களினால் ஏற்படும் ஆபத்தையே நாம் சுட்டிக்காட்டுகின்றபோதும் இதேவகையில் தான் சபைகளில் கொடுக்கப்படும் தியானச் செய்திகளும் அமைந்திருக்கின்றன. கோட்பாடுகளே இல்லாது ஒரு சில வேத வசனங்களைப் பயன்படுத்தி, அவற்றை விளக்கிப் பிரசங்கிக்காது, ஆத்மீகக் கருத்து என்ற பெயரில் தாம் நினைத்ததை உருவகப் படுத்தி சொல்லும் செய்திகளை அளிப்பவர்களாகத் தான் பெரும்பான்மையான பிரசங்கிகள் இருக்கிறார்கள். உப்புச்சப்பில்லாத போலிச் சந்தன வாசனை தடவிய "தியானச் செய்திகளே" இவை. தனிமனித வாழ்க்கை சம்பவங்களும், ஊர் விவகாரங்களும், கதைகளும் நிரம்பிய உணர்ச்சிவசப்பட வைக்கும் சிறு செய்திகளாவே இந்தத் தியானச் செய்திகள் இருக்கும். இச்செய்திகளை அளிப்பவர்கள் நிச்சயம் ஏதாவதொரு வேத வசனத்தை வசதிக்காகப் பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால், நாம் கேட்ட செய்தியின் மூலம் எந்தக் கருத்தைப் புரிந்து கொண்டோம் என்று சிந்தித்துப் பார்த்தால் அங்கே ஒன்றுமே இருக்காது. சிந்திப்பதையே மூட்டை கட்டி வைத்துவிட்டு அனுபவங்களை மட்டும் நாடி அலைந்து கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ்தவ சமுதாயத்துக்கு இன்று நொருக்குத் தீனியாய் இருக்கின்றன இத்தகைய "தியானச் செய்திகள்". வேதக்கோட்பாடுகள் இல்லாமல் வேத வசனங்களைப் பயன்படுத்தி பிரசங்கம் என்ற பெயரில் கொடுக்கப்படும் "போலிமருந்துகளால்" ஆத்துமாக்கள் ஆத்மீக ஞானத்தையும், பெலத்தையும் பெற முடியாது. இன்று கிறிஸ்தவம் தமிழர்கள் மத்தியில் சீர்பெறத் தேவையாய் இருப்பது வேத போதனைகள் நிறைந்து வழியும் சத்துள்ள பிரசங்கங்கள் - உயிரில்லாத "தியானச் செய்திகள்" அல்ல.*

**(5) பெரும்பாலும் தமிழிலில் "தியான நூல்கள்" எழுதுகிறவர்கள் முறையான கிறிஸ்தவ இறை யியல் அறிவைப் பெற்றுக்கொள்ளாதவர்கள்.**

வேத இறையியலின் (Biblical Doctrine) அடிப் படையில் எழுதப்படாத எதுவும் சுவிசேஷ கிறிஸ் தவத்தோடு (Evangelical Christianity) தொடர்பில் லாதவை. வேத இறையியலே தெரியாமல் வெறும் அனுபவத்தை மட்டும் நாடி, சமயசமர சக் கோட்பாட்டைப் பின்பற்றும் நூற்றுக்குத் தொன்னூற்றியொன்பது வீதமானோரே இன்று "தியான நூல்களின்" ஆசிரியர்களாக இருக்கிறார் கள். அவற்றில் காணப்படும் போதனைகளும், அனுபவங்களும் வேதம் சார்ந்தவையாக இருக்க முடியாது. அத்தோடு "தியான நூல்" எழுதுகிற அனேகர் கத்தோலிக்க மதத்தை கிறிஸ்தவமாக எண்ணுபவர்கள்; கத்தோலிக்க மதப்போதனை களைக் கிறிஸ்தவப் போதனைகளாக "தியான நூல்கள்" மூலம் வழங்குகிறவர்கள். வேத இறை யியல் கோட்பாட்டைக் கொண்டிராத இவர் களுடைய எழுத்துக்களை நாம் வாசிப்பதற்கு தயங்க வேண்டும். ஏனெனில், அவற்றில் கர்த்த ரின் போதனைகளை மீறிய அனுபவங்களே (Mysticism) விளக்கப்பட்டிருக்கும். கிறிஸ்தவ அனுபவங்கள் எப்போதும் வேதத்தில் இருந்து புறப்படுவதாயும், வேதத்தை அடித்தளமாய்க் கொண்டதாயும் இருக்க வேண்டும். கிறிஸ்தவ இறையியல் பஞ்சத்தாலேயே வேதம் அனுமதிக் காத அனுபவங்களை விளக்கும் தியானச் செய்தி களும், தியான நூல்களும் தமிழ் கிறிஸ்தவ உலகத்தை தொடர்ந்து ஆன்மீகச் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றன. வரலாற்றில் இருண்ட காலத்தில் இருந்த நிலையே இன்று தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் தொடர்ந்து இருக்கிறது. வேதம் நம் சொந்த மொழியில் இருந் தும் கர்த்தரின் சத்தத்தைக் கேட்க முடியாது காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ்தவத்திற்கு மெய்யான ஆத்மீக விடுதலை என்று கிடைக்கும்? என்ற ஏக்கமே இதை எழுதத் தூண்டியது.

**குறிப்பு 1: ஸ்பர்ஜனுடைய பிரசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறு சிறு பகுதிகளை அன்றாட வாசிப்புக் காக சில வெளியீட்டாளர்கள் தொகுத்து வெளியிட்டுள் ளார்கள். இவற்றை ஸ்பர்ஜன் வெளியிடவில்லை.**

*"ஒரு மனிதன் பணமில்லாமலும், படிப்பு இல்லாமலும், உடல் நலம் இல்லாமலும் ஏன்! நண்பர்கள் இல்லாமலும் கூட பரலோகம் போய்விடலாம். ஆனால், அவன் ஒருபோதும் வேத ஞானம் இல்லாமல் பரலோகத்தை அடைய முடியாது. அவனுக்கு அற்புதமான மனமிருந்து, அந்த மனம் சேகரித்து வைக்கக்கூடிய அதியற்புத ஞாபக சக்தி இருந்தும், வேதம் போதிக்கும் சத்தியங்களை அவன் அறியாதவனாக இருந்தால் கடலில் மூழ்கும் கப்பலைப்போல தன்னுடைய இருதயத்தைத் தானே அழித்துக் கொள்கிறவனாவான். வேத ஞானம் இல்லாமல் இறக்கின்ற மனிதனுக்கு ஐயோ! ஐயோ! ஐயோ!"*

✷

*பிசப் ஜே. சீ. ரைல்*

# என் ஆத்மீக பயணத்தின் சில அத்தியாயங்கள் . . .

என்னுடைய ஆத்மீக பயணத்தின் சில அத்தியாயங்களை இந்தப் பகுதிகளில் உங்களோடு முதன் முறையாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 1970களில் என்று நினைக்கிறேன். அது என்னுடைய விசுவாச வாழ்க்கையின் ஆரம்பகாலம். பெந்தகொஸ்தே/கெரிஸ் மெடிக்* இயக்கங்கள் தலைதூக்கி பாரம்பரிய கிறிஸ்தவ சபைகளையும் ஏனையோரையும் பாதிக்க ஆரம்பித்திருந்த காலமது. கிறிஸ்தவர்கள் மத்தியில் அந்நியபாஷையும், தீர்க்கதரிசனமும், அற்புதங்களும் அன்றாட சம்பாஷனையில் அடிக்கடித் தவழ்ந்து வந்த காலம். அன்று புதிய விசுவாசியாக இருந்த என்னையும் அது விட்டுவைக்கவில்லை. கர்த்தரின் கிருபையால் வேதத்தை விசுவாசத்தோடு போதிக்கின்ற ஓர் சபையில் அப்போது நான் அங்கத்தவராக இருந்தேன். இருந்தபோதும் அந்நியபாஷை பற்றியும், தீர்க்கதரிசனம்பற்றியும், அற்புதங்கள்பற்றியும் சரியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வாஞ்சையுடையவனாக இருந்தேன். அவைபற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆர்வத்தில் கையில் கிடைத்த ஆங்கில நூல்களையெல்லாம் வாங்கி வாசிக்க ஆரம்பித்தேன். நான் வாசித்த ஒன்றும் எனக்குக் கைகொடுக்கவில்லை. வரங்கள் இன்றும் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம் என்று நழுவிவிடுகிறவர்கள் எழுதிய நூல்களாகவே அவை இருந்தன. என் மனதைத் துளைத்துக் கொண்டிருந்த விஷயங்களைப் பற்றி ஆழமாக அறிந்துகொள்ள வேதத்தை ஆராய்ந்து, கிரேக்க மூல வார்த்தைகளில் கவனம் செலுத்திப் படிக்க ஆரம்பித்தேன். இந்த ஆராய்ச்சி பல வருடங்கள் தொடர்ந்தது. நான் பல்கலைக் கழகப் படிப்பை முடித்து இறையியல் கல்லூரிப் படிப்பை ஆரம்பித்த பின்பும் இது தொடர்ந்தது.

### மார்டின் லொயிட் ஜோன்சும், அப்போஸ்தல வரங்களும்

இந்தக்காலத்தில் நான் சீர்திருத்த விசுவாசத்தில் அதிக நாட்டம் காட்டி டாக்டர் மார்டின் லொயிட் ஜோன்ஸ் (Dr. Martin Lloyd Jones) அவர்களுடைய நூல்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக வாசிக்க ஆரம்பித்தேன். தமிழ் வாசகர்களில் அவரை அறியாதவர்களுக்கு அவரைப் பற்றிய சிறு விளக்கத்தை அளிப்பது அவசியம். லொயிட் ஜோன்ஸ் இங்கிலாந்தில் ஆரம்பத்தில் பிரபல்யமான வைத்தியராக இருந்து அந்நாட்டு அரசருக்கு வைத்தியராகப் பதவி பெறும் தருவாயில் அதைத் துறந்து கர்த்தருடைய ஊழியத்துக்கு வந்தவர். பிரசங்கம் மிகவும் கீழான நிலையில் இருந்த அந்தக்காலத்தில் மெய்ப்பிரசங்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக இருந்து வேல்ஸ் தேசத்தில் தன்னுடைய பிரசங்க ஊழியத்தை ஆரம்பித்தார். இதனால் அவர் புகழ் எங்கும் பரவி லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் செப்பலில் (Westminster Chapel) டாக்டர் கெம்பல் மோகனுடன் (Dr. Campbel Morgan) இணைந்து போதகராக

*இருக்கும் அழைப்பை 1938ல் பெற்றார். கெம்பல் மோகனுக்குப்பின் அவர் அங்கு போதகராக இருந்து 1938–1968 வரை ஊழியம் செய்தார். அவருடைய பணிகளால் சீர்திருத்த பிரசங்கமும், சீர்திருத்த இலக்கியங்களும், சீர்திருத்த மகாநாடுகளும் இங்கிலாந்திலும், இங்கிலாந்துக்கு வெளியிலும் பெருகி வளர ஆரம்பித்தன. லொயிட் ஜோன்ஸ் இங்கிலாந்திலும், இங்கிலாந்திற்கு வெளியிலும் கிறிஸ்தவர்கள் மத்தியில் அதிகம் மதிப்புப் பெற்றிருந்தவர். இவரது எழுத்துக்களாலும், போதனைகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அனேகர்.*

*இருந்தபோதும் மார்டின் லொயிட் ஜோன்ஸ் பெந்தகொஸ்தே போதனைகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவில்லை. அற்புதங்கள் நிச்சயம் நிகழ்கின்றன என்றும், கர்த்தரே அத்தகைய அற்புதங்களை நடப்பிக்கிறார் என்றும் போதித்த லொயிட் ஜோன்ஸ் பிசாசும் அற்புதங்கள் போலத் தோற்றமளிக்கும் செயல்களை நடத்தும் வல்லமையுள்ளது என்றும் விளக்கியிருக்கிறார். ஆகவே, நாம் பிசாசின் செயல்களுக்கு இடங்கொடுக்கக் கூடாதென்றும், நமது ஊழியங்களின் வெற்றிக்கு அற்புதங்களை ஒருபோதும் அடையாளமாகக் கருதக்கூடாது என்றும் எச்சரித்தார். கெத்தரின் கூல்மன்* (Katheryn Kulman) *போன்ற பல குணப்படுத்தும் அற்புதங்கள் செய்யும் பெந்தகொஸ்தேகாரர்களின் செயல்களை நிராகரித்து அத்தகைய அற்புதங்கள் போலத் தோற்றமளிக்கும் செயல்கள் உளவியல் மற்றும் பிசாசின் செயல்களாலும் ஏற்படலாம் என்றும் அவர் விளக்கினார். இதையெல்லாம் அவருடைய பிரசங்கங்களின் தொகுப்பான* *The Doctor Himself and the Human Condition* *என்ற நூலில் வாசிக்கலாம். இருந்தபோதும் கர்த்தருடைய கிரியை எது? பிசாசின் கிரியை எது? என்று நாம் எவ்வாறு தீர்மானிப்பது என்ற கேள்விக்கு "அது மிகவும் கஷ்டமான காரியம்" என்பது மட்டுமே லொயிட் ஜோன்சின் பதிலாக இருந்தது. லொயிட் ஜோன்ஸ் அப்போஸ்தலருடைய காலத்திற்குப் பிறகும் அற்புதங்கள் தொடர்ந்தும் நிகழ்ந்தன, நிகழ்கின்றன என்று நம்பினார். இந்த விஷயத்தில் பென்ஜமின் வார்பீல்டின்* (Benjamin Warfield) *கருத்துக்களை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார். பென்ஜமின் வார்பீல்ட், அற்புதங்கள் அப்போஸ்தலருடைய காலத்துக்குப் பிறகு நடக்கவில்லை என்று தனது நூலான* *Miracles: Yesterday and Today* *ல் எழுதியிருந்தார். ஆனால், உண்மையான கர்த்தருடைய கிரியை எது? போலியானது எது? என்று கேட்டு பெந்தகொஸ்தே, போதனைகளால் மனக்கிலேசம் அடைந்திருந்த என்னைப் போன்றவர்களுக்கு லொயிட் ஜோன்சினால் சரியான விளக்கத்தை அளிக்க முடியவில்லை. எழுப்புதல் ஏற்பட்ட காலங்களில் அற்புதங்கள் வரலாற்றில் நிகழ்ந்திருந்தன என்றும், சீனா, கொரியா போன்ற நாடுகளில் அத்தகைய உண்மையான அற்புதங்களை கர்த்தர் நிகழ்த்தியுள்ளார் என்றும் பாஸ்டர் சீ* (Pastor Chi) *போன்ற சீனப் போதகர்களின் உழியங்களை லொயிட் ஜோன்ஸ் உதாரணம் காட்டினார். ஹென்றி புரொஸ்ட்* (Henry Frost) *என்பவர் 1951ம் ஆண்டில் எழுதிய* *Miraculous Healing* *என்ற நூலை மறுபடியும் வெளியிடும்படி வெளியீட்டாளர்களுக்கு ஆலோசனை கூறி 1971ல் மறுபடியும் வெளிவந்த அந்நூலுக்குப் பரிந்துரை எழுதிய லொயிட் ஜோன்ஸ், "இந்த விஷயத்தைப்*

*பற்றி எழுதப்பட்ட நூல்களில் இதுவே மிகவும் சிறந்தது. அனேக தடவைகள் அற்புதக் குணமாக்குதல் பற்றி எழுதும்படி என்னைப் பலர் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஹென்றி புரொஸ்ட் இந்நூலில் எழுதியிருப்பதே என்னுடைய கருத்தும், இந்த விஷயத்தில் அதுவே என்னுடைய இறுதி முடிவும் என்று நான் அவர்களுக்கு பதிலளித்திருக்கிறேன்" என்று எழுதி யிருக்கிறார். இந்த நூலில் புரொஸ்ட் தந்துள்ள கருத்துக்களை சுருக்கமாக உங்கள் முன் வைக்கிறேன்:*

> *1. அற்புதங்கள் தொடர்ந்தும் நிகழ்கின்றன. இருந்தாலும் அப்போஸ்தலரின் காலத்தைப்போல இன்று பெருமளவுக்கு நிகழவில்லை.*
> *3. கிறிஸ்தவ சுவிசேஷம் இதுவரை போய்ச்சேராத உலகின் பெரும்பாகங்களில் தேவனின் வார்த்தையை உறுதிப்படுத்தி மக்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க அற்புதங்கள் இன்று நிச்சயம் தேவை. ஆகவே, கர்த்தருடைய வார்த்தை மட்டுமே போது மானது என்று நாம் கூற முடியாது.*
> *4. இந்த அடிப்படையில் கர்த்தர் புது இடங்களில் ஊழியம் செய்யும் தன்னுடைய ஊழியக்காரரை மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டு மனந்திரும்புவதற்காக அற்புதங்கள் செய்யும்படி இன்று ஆசீர்வதிக்கிறார்.*

*இக்கருத்துக்களை புரொஸ்டின் நூலில் 106–113 பக்கங்களில் பார்க்கலாம். புரொஸ்டின் நூலுக்கு நிபந்தனையற்ற அங்கீகாரம் வழங்கி, அந்நூலின் கருத்துக்களே தன்னுடைய கருத்துக்களும் என்று அறிவித்ததன் மூலம் மார்டின் லொயிட் ஜோன்ஸ் அற்புதங்கள் தொடர்ந்தும் நடக்கும் என்று மட்டுமல்ல, கிறிஸ்தவ சுவிசேஷம் புதிதாகப் போகுமிடங்களி லெல்லாம் தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்துவதற்காக அற்புதங் கள், பிணிதீர்த்தல் போன்ற கிரியைகள் ஊழியக்காரர் மூலம் நடக்கும் என்று நம்பியிருந்திருப்பதைத் தெளிவாக அறிந்து கொள்கிறோம். இது எனக்கு பெருங்குழப்பத்தை ஏற்படுத்தியது.*

*அற்புதங்களின் தேவனாகிய கர்த்தர் வரலாற்றில் அற்புதங்களைத் தொடர்ந்தும் நிகழ்த்துகிறார் என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கவில்லை. கர்த்தர் தன்னுடைய இறையாண்மையின்படி அற்புதங்களை செய்கிறவர். அத்தோடு, சிறப்பாக கர்த்தரின் கிரியையான எழுப்புதல் காலங்களில் வரலாற்றில் சில வேளைகளில் அற்புதங்கள் நடக்கும் என்பதிலும் எனக்கு சந்தேகமிருக்கவில்லை. எழுப்புதல்கள் அன்றாடம் நடப்பவையல்ல. சார்ள்ஸ் பினி நம்பியதுபோல் எழுப்புதல்களை மனிதனால் ஒருநாளும் உருவாக்க முடியாது, அவற்றைக் கர்த்தர் தன்னுடைய சித்தத்தின்படி வரலாற்றில் எப்போதாவது நடத்துவார் என்பதும் எனக்குத் தெரிந்திருந்தது. எழுப்புதல் காலங்களில் சில வேளைகளில் அற்புதங்களைக் கர்த்தர் செய்தாலும் போலியான செயல்களும் பிசாசினால் நடக்கும் என்பதற்கு வேல்ஸில் நடந்த 1904–1905ல் நிகழ்ந்த எழுப்புதல் உதாரணமாக இருக்கின் றது. அமெரிக்காவில் எழுப்புதல் காலத்தில் பிசாசின் விளையாட்டுக்களும் நிகழ்ந்து மக்கள் உணர்ச்சிவசப்பட்டபோது ஜொனத்தன் எட்வர்ட்ஸ்* (Jonathan Edwards) *அவற்றை நிராகரித்து மெய்க்கிறிஸ்தவ அனுபவத்திற்*

*கான அடையாளங்கள் குறித்து முக்கியமான நூலொன்றை வெளியிட்டிருந் தார்* (*The Distinguishing Traits of a Christian*). *இதே கருத்தையே ஜோர்ஜ் விட்பீல்டும்* (George Whitefield), *கார்டினர் ஸ்பிரிங்சும்* (Gardiner Springs), *ஸ்பர்ஜனும்* (Spurgeon) *தாங்கள் எழுதிய நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே, எழுப்புதல் காலங்களில் நடக்கும் எல்லாவற்றையும் கர்த்தரின் கிரியைகளாக ஏற்றுக்கொள்ள முடியாதென்பதற்கு வரலாறு சான்றாக இருக்கின்றது. இயன் மரே* (Iain Murray) *தான் எழுதியுள்ள Pentecost - Today? என்ற நூலில் ஒருவித அற்புதங்களையும் காணாமலேயே அனேக எழுப்புதல்கள் வரலாற்றில் நிகழ்ந்திருப்பதாகக் கூறியிருக்கிறார். அத்தோடு, "புரட்டஸ்தாந்து கோட்பாடுகளைப் பின்பற்றியவர்கள் நிச்சயம் அற்புதங்கள் நிகழ்ந்திருப்பதாக பேசியிருக்கிறார்கள். ஆனால், அப்படிப் பேசியவர்கள் எல்லாம் மனித உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த மதவெறியர் களாக மட்டும்தான்* (fanatics) *இருந்திருக்கிறார்கள்" என்றும் குறிப்பிட் டுள்ளார். இவ்வாறான தீவிரவாதிகளை சீர்திருத்தவாத காலத்திலும் அதற்குப்பின்பும் வரலாறு சந்தித்திருப்பதாகவும், அதற்கு உதாரணமாக பிரெஞ்சு தீர்க்கதரிசிகளைப் பின்பற்றியவர்களையும்* (French Prophets), *அன்டனட் போரிக்னனைப் பின்பற்றியவர்களையும்* (Antoinette Bourignon), *பிலிப் ஜேக்கப் ஸ்பேனரைப் பின்பற்றியவர்களையும்* (Philipp Jakob Spener), *எட்வர்ட் இர்விங்கையும்* (Edward Irving) *சுட்டிக்காட்டுகிறார் இயன் மரே.*

*ஆனால், என் கேள்வி எழுப்புதல் பற்றியதல்ல, அன்றாட சபை வாழ்க்கையில் இன்று அற்புதங்கள் செய்பவர்களும், அந்நியபாஷையும், தீர்க்கதரிசனமும் அவசியமா? என்பதுதான். இதற்கு பதிலளிக்கும் லொயிட் ஜோன்ஸ் புதிதாக ஊழியங்கள் நடக்கும் இடங்களில் கர்த்தரை அறியாத மக்கள் சுவிசேஷத்தை நம்பும்படியாக அற்புதங்களைக் கர்த்தர் ஊழியக் காரர்களைப் பயன்படுத்தி நடத்துவார் என்று புரொஸ்டின் நூலை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்திருந்தார். அத்தோடு, ஏற்கனவே கர்த்தரை அறிந்து கொண்டுள்ளவர்கள் மத்தியில் சபைகளில் அற்புதங்கள் என்ற பெயரில் நடப்பவைகளை நாம் உடனடியாக நிராகரித்துவிடாமல் ஆராய்ந்து ஆவியின் செயல்களாக இருப்பவற்றை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் மார்டின் லொயிட் ஜோன்சின் விளக்கமாக இருந்தது. இக்கருத்துக்களை அவருடைய பேச்சுக்களின் தொகுப்பைக் கொண்டுள்ள நூலான The Doctor Himself and the Human Condition-ல் வாசிக்கலாம். லொயிட் ஜோன்சின் இக்கருத்துக்கள் எனக்கு ஏற்புடையதாக இருக்க வில்லை. இரண்டு முக்கிய கேள்விகளுக்கு லொயிட் ஜோன்சின் போதனை கள் பதிலளிக்கவில்லை.*

*(1) சாதாரண விசுவாசிகள் எந்த அடிப்படையில் அற்புதங்களை ஆராய்ந்து அவை கர்த்தருடையனவா? அல்லது பிசாசினுடையனவா? அல்லது உளவியல்ரீதியில் ஏற்பட்டவையா? என்று தெரிந்து கொள்வது? ஆவியின் மூலமாக இவை சோதிக்கப்பட வேண்டும் என்று பதிலளிக்கிறார் லொயிட் ஜோன்ஸ். ஆவியின் மூலமாக இவற்றை எவ்வாறு சோதிப்பது? என்று அவர் எங்குமே விளக்கமளிக்கவில்லை. ஆவியின் செயல்களை வேதத்தைக் கொண்டு மட்டுமே சோதிக்க முடியும். ஆனால், இன்று*

*அந்நியபாஷைகள், தீர்க்கதரிசனங்கள், அற்புத வரங்கள் நடைமுறையில் இருக்கின்றனவா? இல்லையா? என்பதை வேத அடிப்படையில் தீர்மானிக் காவிட்டால், வேதம் இவை குறித்து எதைப் போதிக்கின்றது என்பதில் நமக்குக் குழப்பம் இருந்தால், ஆவியின் செயல்களை நாம் எப்படித் தீர்மானிப்பது? ஆவியின் கிரியைகளைச் சோதிக்க இரண்டு வழிகள் உண்டு. இந்த இரண்டு வழிகளின் ஒன்று மட்டுமே சரியானது. (அ) வேத போதனைகளின் அடிப்படையில் ஒரு செயலை ஆவியின் செயலா? இல்லையா? என்று ஆராய்ந்து உறுதியானதொரு முடிவுக்கு வரலாம் அல்லது, (ஆ) ஒரு விசுவாசி தன்னுடைய மனச்சாட்சியில் ஏற்படும் அழுத்தமான நம்பிக்கைகளின் மூலம் ஒன்றை ஆவியின் செயலா? இல் லையா? என்பதைத் தீர்மானிக்கலாம். இந்த இரண்டில் முதலாவது மட்டுமே சரியானது. ஏனெனில், வேதத்தைக் கொண்டே எதைப்பற்றியும் ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்க வேண்டும். இயன் மரே சொல்லுகிறார்: "நாம் எப்போதும் வேதத்தைக் கொண்டே எதையும் ஆராய வேண்டும். அனுபவத்தைக் கொண்டல்ல. நம்முடைய சொந்த அனுபவங்களை, (அவை உண்மையானவையா இல்லையா என்று) ஆராய்வதற்கு நம்முடைய மனச்சாட்சி கூட நம்பக்கூடிய சாதனமல்ல. நம்வாழ்க்கையிலும், மற்றவர் களுடைய வாழ்க்கையிலும் நடந்திருப்பவைகளை நாம் பூரணமாக விளக்கக் கூடிய சக்தி படைத்தவர்களல்ல. வேதம் மட்டுமே அவற்றை ஆராய்வதற்கு பாதுகாப்பானதும் நம்பகமானதுமாகும்."* (Pentecost - Today? pg, 106). *தொடர்ந்து மரே, "அனுபவங்களுக்கு விளக்கம் கொடுக்க முயன்ற பல நல்ல மனிதர்கள் தவறு செய்திருக்கிறார்கள். உண்மையான அனுபவங் கள்கூட தவறான விதத்தில் விளக்கப்படுகின்றபோது அவை பிழையான போதனைகளுக்கு மூலகாரணமாகின்றன." என்கிறார்* (Pentecost - Today? pg, 107). *ஆகவே, லொயிட் ஜோன்சின் பதில் இந்த விஷயத்தில் எற்றுக் கொள்ளக்கூடியதல்ல.*

*(2) இரண்டாவது கேள்வி, சுவிசேஷம் இதுவரை அறிவிக்கப்படாத இடங்களில் அற்புதங்கள் அவசியம், ஊழியக்காரர்கள் அற்புதங்களைத் தொடர்ந்து நடத்த முடியும் என்று வேதம் எங்கே விளக்குகின்றது? இந்தக் கேள்விக்கு லொயிட் ஜோன்சும், புரொஸ்டும் தகுந்த வேத ஆதாரங்களை அளிக்கவில்லை. கர்த்தர் அற்புதங்கள் செய்கிறவராக இருக் கிறார் என்ற பொதுவான போதனையின் அடிப்படையிலும், சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களில் கர்த்தரை அறியாத மக்கள் அற்புதங்களை எதிர்பார்ப்பார்கள், அவர்களுக்கு வேதம் மட்டுமே போதுமானதாக இருக்காது என்ற அனுமானங்களினால் மட்டுமே அவர்கள் அத்தகைய பிரதேசங்களில் இன்று அற்புதங்களை ஊழியக்காரர்கள் செய்ய முடியும் என்று சொன்னார்களே தவிர புதிய ஏற்பாட்டில் இருந்து தகுந்த வேத சான்றுகளைக் கொடுக்கவில்லை. வெறும் அனுமானங்கள் ஒருபோதும் வேத சான்றுகளாகிவிடாது. ஆகவும் கூடாது.*

*ஆகவே, அற்புதங்கள் பற்றிய மார்டின் லொயிட் ஜோன்சின் நிலை தவறானது என்பதை நான் உணர்ந்தேன். லொயிட் ஜோன்சின் எழுத்துக் களில் நான் இன்றும் பெருமதிப்பு வைத்திருந்தபோதும் அற்புத வரங்கள் பற்றிய அவருடைய கருத்துக்கள் சரியான, வேதபூர்வமான பதிலை*

*அளிக்கவில்லை என்பது அன்றே எனக்குத் தெளிவாக விளங்கியது. அதுமட்டுமல்லாது லொயிட் ஜோன்ஸ், அற்புதங்களை ஊழியக்காரர்கள் இன்றும் செய்யமுடியும் என்று போதித்தது சீர்திருத்த போதனைகளை நம்பியவர்கள் சுவிசேஷ ஊழியத்தின் பலனுக்கு வேதத்திலும், ஆவியின் கிரியைகளிலும் மட்டும் நம்பிக்கை வைக்காமல் அற்புதங்களையும் நாடி நிற்கவேண்டுமோ? என்று மனங்குழம்ப வேண்டிய நிலையை உருவாக்கியது. அத்தோடு அவரது கருத்துக்கள் அற்புதங்களை நாடி ஓடிக்கொண்டிருக்கும் கூட்டத்திற்கும் பால்வார்த்தது போலாயிற்று.*

## மார்டின் லொயிட் ஜோன்சும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும்

*அத்தோடு மார்டின் லொயிட் ஜோன்ஸ், விசுவாசி தன்னுடைய வாழ்க்கையில் ஆவியின் அனுக்கிரகத்தை ஆழமாகவும், தீவிரமாகவும் அனுபவிக்க முடியும் என்று போதித்தார். இந்த அனுபவத்தை விசுவாசி தான் கிறிஸ்துவை விசுவாசித்த ஆரம்ப காலத்தில் அடையாதிருந்தாலும் தன்னுடைய விசுவாச வாழ்க்கையில் எப்போதாவது பெற்றுக்கொள்ளலாம் என்று விளக்கினார். இந்த அனுபவத்தின் மூலம் கிறிஸ்துவின் அன்பினை அதிகளவுக்கு தன்னுடைய வாழ்க்கையில் விசுவாசி அனுபவிக்க முடியும் என்றும் கூறினார். இந்த அனுபவத்திற்கும் பரிசுத்தமாக்குதலுக்கும் நிச்சயம் தொடர்பு இருந்தபோதும் இது பரிசுத்தமாக்குதலின் ஒருபகுதியோ அல்லது பரிசுத்தமாக்குதலின் உச்சகட்ட அனுபவமோ இல்லையென்றும் அதைவிட வேறுபட்டதொரு தனித்துவம் வாய்ந்த ஆவிக்குரிய அனுபவமென்றும் விளக்கினார். ஒருதடவை பெற்றுக்கொண்ட இந்த அனுபவத்தை விசுவாசி இழந்துபோய் மறுபடியும் வேறொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறிய லொயிட் ஜோன்ஸ் இந்த அனுபவத்திற்கு அடையாளமாக அந்நியபாஷை போன்றவை விசுவாசியின் வாழ்க்கையில் இருக்கத்தேவையில்லை என்றும் கூறியிருந்தார். லொயிட் ஜோன்ஸ் இந்தப் போதனையை "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்" என்ற பெயரில் அழைத் தார். அப்போஸ்தல நடபடிகள் 8:17; 9:17; 19:6 பகுதிகளில் இந்த அனுபவமே கைவைத்து ஜெபிப்பதன் மூலம் கொடுக்கப்பட்டது என்று விளக்கினார். லொயிட் ஜோன்ஸ் அப்போஸ்தல நடபடிகளில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட நான்கு அதிகாரங்களையும் (அப்போஸ் தலர் 2; 8; 10; 17) பெந்தகொஸ்தேகாரர்கள் விளக்குவதுபோல் விளக்கி அவை ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கையிலும் வரலாற்றில் தொடர்ந்து நடக்கக்கூடிய நிகழ்ச்சி என்றார்* (*Joy Unspeakable*, Kingsway). *இதன் அடிப் படையில் ரோமர் 8:15, 16க்கும், எபேசியர் 1:13 க்கும் அவர் விளக்கமளித் தார். இந்த அதிகாரங்களை அனைத்தையும் அவர் புதிய ஏற்பாடு முழு வதையும் ஒருசேரப்பார்த்து வரலாற்று, இறையியல் அடிப்படையில் விளக் கம் கொடுக்கத் தவறினார். இதைவிட ஆர்மீனிய, டிஸ்பென்சேஷனலிஸ்டுக் கோட்பாடுகளைப் பின்பற்றிய டீ. எல். மூடியும்* (D. L. Moody), *ஆர். ஏ. டோரியும்* (R. A. Torrey) *இந்த அனுபவத்தைப் பெற்றுக்கொண்டிருந்தாக அவர் உதாரணங்காட்டியிருப்பது ஆச்சரியமளிக்கிறது.*

*மார்டின் லொயிட் ஜோன்ஸ், பெந்தகொஸ்தேகாரர்களைப்போல விசுவாசி இரண்டாம் தடவை ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வேண்டு மென்று போதிக்கவில்லை. கிறிஸ்துவை விசுவாசித்த உடனேயே விசுவாசி*

*ஆவியானவருக்குள் நிரந்தரமாக குடிகொள்கிறார் என்றும், விசுவாசி ஆவியானவரை ஒருபோதும் இழந்துபோக மாட்டான் என்றும் விசுவாசித்த மார்டின் லொயிட் ஜோன்ஸ், விசுவாசி பெற்றுக்கொண்டுள்ள ஆவியான வரே இந்த ஆழமான, தனித்துவமான, ஆவிக்குரிய ஆத்மீக அனுபவத்தை யும் விசுவாசிக்குக் கொடுப்பதாக விளக்கினார். லொயிட் ஜோன்சின் இந்தப் போதனையை அவர் எபேசியருக்கு பவுல் எழுதிய நிருபத்தின் முதலாம் அதிகாரத்திற்குக் கொடுத்த வியாக்கியானத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். அத்தோடு, அவருடைய பேரன் கிரிஸ்டோபர் கெத்தர்வுட்* (Christopher Catherwood) *தொகுத்து வெளியிட்ட அவருடைய பிரசங்கத் தொகுப்பான* Joy Unspeakable *என்ற நூலிலும் வாசிக்கலாம். இந்தப் போதனை பெந்தகொஸ்தே இயக்கத்தாரின் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்" என்ற "இரண்டாம் ஆசிர்வாதப்" போதனையைப் போலத் தோற்றமளித்ததால் பலர் லொயிட் ஜோன்ஸ் பெந்தகொஸ்தே போதனை களை ஏற்றுக் கொண்டுள்ளதாக நம்பினர். பெந்தகொஸ்தேகாரர்கள்கூட அவர் தங்கள் போதனைகளை ஏற்றுக்கொண்டதாக எண்ணினர். அவரு டைய எழுத்துக்களில் ஒருசிலவற்றை மட்டும் வாசித்திருந்த ஒரு பிரபல மான அமெரிக்கப் போதகர் மார்டின் லொயிட் ஜோன்ஸினுடைய போதனைகளும் ஜோன் விம்பர் என்ற அமெரிக்க பெந்தகொஸ்தே ஊழிய ருடைய போதனைகளும் நூற்றுக்கு நூறு வீதம் ஒத்திருந்ததாக பேசினார். இரண்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை சிலர் விளங்கிக் கொண்ட போதும் இங்கிலாந்திலும், வேல்ஸிலும் மார்டின் லொயிட் ஜோன்சின் ஆதரவாளர்களில் பலர் அவர் பெந்தகொஸ்தே போதனைகளை ஆதரிப்ப தாகத்தான் கருதினர். உதாரணமாக,* The Genius of Puritanism *என்ற நூலை எழுதிய பீட்டர் லூயிஸ்* (Peter Lewis) *இந்த வழியில் போக ஆரம்பித்தார். இது சீர்திருத்தவாதத்தில் ஆர்வம் கொண்டிருந்த பல போதகர்களைப் பாதித்து அவர்கள் பெந்தகொஸ்தே போதனைகளைப் பற்றித் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரமுடியாதபடி தடுத்தது. இதனாலேயே இன்றும்கூட கல்வினிசப் போதனைகளை விசுவாசிக்கின்ற சில சபைகளும், போதகர் களும் அற்புத வரங்களும், அந்நியபாஷையும், தீர்க்கதரிசனமும் தொடர்ந் தும் இருப்பதாக நம்புகிறார்கள். இவர்கள் மார்டின் லொயிட் ஜோன்சின் போதனைகளில் அதிதீவிரம் காட்டியதால் அவருடைய இந்தப் போதனை களை ஆராயாமல் ஏற்றுக்கொண்டனர். இங்கிலாந்தில் லொயிட் ஜோன்ஸ் மீது தீவிரமான பற்றுடையவர்களாக அவருடைய "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்" என்ற போதனையை வேதபோதனையாக நம்பி வரும் சீர்திருத்த போதகர்களை இன்றும் பார்க்கலாம். உதாரணமாக கிரெகம் ஹெரிசன்* (Graham Harrison) *லொயிட் ஜோன்சின் இந்தப் போதனையை ஆதரித்து கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இறையடி சேர்ந்துவிட்ட ஹேர்பட் கார்சன்* (Herbert Carson) *போன்றோர் சீர்திருத்தவாதப் போதனை களைத் தழுவிய பின்னும் பெந்தகொஸ்தே போதனைகளில் ஆர்வம் செலுத்திவந்ததற்கு லொயிட் ஜோன்சின் போதனைகளும் காரணமாக இருந்திருக்கின்றன. 1980களின் ஆரம்பத்தில்* Reformed Pentecostal/Charismatic *என்ற பதம் உருவாவதற்கு லொயிட் ஜோன்சின் போதனைகளும் ஓரளவுக்குக் காரணமாக இருந்திருப்பதை எவராலும் நிராகரிக்க முடியாது. உண்மையில் இந்தப்பதம் முரண்பாடான பதம்* (contradiction of terms).

சீர்திருத்தவாதமும், பெந்தகொஸ்தே போதனைகளும் என்றுமே ஒன்று சேரமுடியாது. அவை ஒன்றுக்கொன்று முரணானவை. அதேவேளை கிரிஸ்டோபர் கெத்தர்வுட் வெளியிட்ட லொயிட் ஜோன்சின் பிரசங்கங் களான Joy Unspeakable, Prove All Things ஆகிய நூல்களால் சீர்திருத்தவாத கிறிஸ்தவத்திற்கும், பெந்தகொஸ்தே இயக்கத்திற்கும் பாலம் அமைக்கும் ஒரு புது முயற்சியும் ஆரம்பமானது. இங்கிலாந்தில் நடைபெற்ற சில கிறிஸ்தவ மகாநாடுகள் இந்தப்பாதையில் செல்ல ஆரம்பித்தன. Reformed Charismatics என்ற பெயரில்கூட ஒரு கிறிஸ்தவ மகாநாடு நடைபெற்று வந்தது. இந்த முயற்சி லொயிட் ஜோன்சின் ஊழியத்தையும், பெந்த கொஸ்தே இயக்கத்தின் போதனைகளையும் சரியாக விளங்கிக் கொள்ளாத தால் ஏற்பட்ட தவறான முயற்சி. இதனால் பாதிக்கப்பட்டு இரண்டும் ஒன்று சேர முடியும் என்று பகல் கனவு கண்டவர்களும் உண்டு.

## மார்டின் லொயிட் ஜோன்ஸ் பெந்தகொஸ்தேகாரரா?

மார்டின் லொயிட் ஜோன்சின் ஆவிக்குரிய வரங்கள், அற்புதங்கள், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் போன்ற போதனைகளின் குறைபாடு களை நான் சுட்டிக்காட்டியதால் அவர் ஒரு முழுப் பெந்தகொஸ்தேவாதி என்று கூறவரவில்லை. தன்னுடைய ஊழிய காலங்களில் வேல்ஸில் இருந்தபோதும் சரி, இலண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் செப்பலில் இருந்த போதும் சரி சபையில் அற்புத வரங்களுக்கு அவர் இடம் கொடுக்கவே இல்லை. சபை ஆராதனையும் வேத அடிப்படையில் பிரசங்கத்திற்கு முக்கியம் கொடுப்பதாகவே இருக்கும்படியும் பார்த்துக் கொண்டார். 1964ல் அவரளித்த “பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்” பற்றிய போதனைகள் அவருடைய ஊழியத்தின் முக்கிய அம்சமாக ஒருபோதும் இருக்கவில்லை கல்வினிசப் போதனைகள் இங்கிலாந்திலும் இங்கிலாந்திற்கு வெளியிலும் பரவுவதற்கு லொயிட் ஜோன்ஸ் **1930–1980** வரை செய்துள்ள பணிகளுக்கு ஈடு இணையில்லை. அற்புதமான பிரசங்கியாக இருந்து பிரசங்க ஊழியத் திற்கு அவர் அளித்துள்ள பங்கை எவரும் அலட்சியப்படுத்திவிட முடியாது. 45 நிமிடங்களுக்கு குறைவாக அவர் பிரசங்கித்ததே இல்லை. அதுவும் அவருடைய பிரசங்கங்கள் தெளிவான வேத வியாக்கியானப் பிரசங் கங்களாகவே இருந்தன. இருந்தபோதும் பெந்தகொஸ்தே இயக்கம் பற்றியும், ஆவிக்குரிய வரங்கள், அற்புத வரங்கள் பற்றியும் அவர் தெளிவானதும், உறுதியானதுமான போதனைகளை அளிக்காததால் சீர்த்திருத்த போதனை களைப் பின்பற்றுவதில் ஆர்வம் காட்டிய அனேகர் குழப்பத்திற்குள்ளா கியதை 1970–1990 வரை நான் கவனித்து வந்திருக்கிறேன். அதேவேளை மார்டின் லொயிட் ஜோன்சின் மீது பெருமரியாதை வைத்திருந்த அனேக சீர்திருத்தவாத போதகர்கள் அவருடைய குறைகளை இக்காலத்தில் சுட்டிக் காட்டவும் தவறில்லை. உதாரணமாக இங்கிலாந்தில் பீட்டர் மாஸ்டர்ஸ் (Peter Masters), டேவிட் பவுன்டன் (David Fountain) போன்றோரையும் அமெரிக்காவில் பல சீர்திருத்த போதகர்களையும் உதாரணங்காட்டலாம். மார்டின் லொயிட் ஜோன்ஸின் அதிகாரபூர்வமான வாழ்க்கை சரிதத்தை எழுதிய இயன் மரே அதில் லொயிட் ஜோன்சின் இந்தக் கருத்துக்களைப் பற்றிக் கூறும்போது, “இதுபற்றிய விஷயங்களில் அவருடைய கருத்துகள் தெளிவானதாக இருக்கவில்லை” என்று அடக்கி வாசித்திருக்கிறார் (D.

*M. Lloyd Jones, The fight of Faith*, Vol 2, pg, 491). *இயன் மரேயினுடைய இவ்வார்த்தைகள் லொயிட் ஜோன்ஸின் பாரதூரமான கருத்துக்களை குறைத்து மதிப்பிடுவதாகவே உள்ளன.*

## சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும்

*கர்த்தரின் வேதம் எழுதி முடிக்கப்பட்ட பின்பு அற்புத வரங்களுக்கு வேலையில்லை என்ற போதனையை மார்டின் லொயிட் ஜோன்ஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. வேதத்தின் அதிகாரத்தை பெரிதும் நம்பிய அவர் இந்த விஷயத்தில் வேதம் போதுமானது என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், சபை வரலாற்றில் ஜோன் கிரிசொஸ்டம்* (John Chrysostom 347-407), *அகஸ்தீன் (*Augustine *354-430)*, *ஜோன் கல்வின்* (John Calvin), *தொமஸ் வாட்சன்* (Thomas Watson), *ஜோன் ஒவன்* (John Owen), *ஜோன் பிளேவல்* (John Flavel), *மெத்யூ ஹென்றி* (Matthew Henry), *ஜொனத்தன் எட்வர்ட்ஸ்* (Jonathan Edwards), *ஜோர்ஸ் விட்பீல்ட்* (George Whitefield), *ஜேம்ஸ் புக்கனன்* (James Buchanan) *போன்ற சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும் வேதம் எழுத்தில் வடிப்பது நிறைவேறிய பின்னர் அந்த வரங்களுக்கு வேலை இல்லை என்றே நம்பினர். சார்ள்ஸ் ஸ்பர்ஜன்* (Charles Spurgeon), *ரொபட் எல். டெப்னி* (Robert L. Dabney), *ஜோர்ஜ் ஸ்மீட்டன்* (George Smeaten), *ஆபிரகாம் கைப்பர்* (Abraham Kyper), *பென்ஜமின் வார்பீல்ட்* (Benjamin Warfield), *ஏ. டபிள்யூ. பின்க்* (A. W. Pink) *ஆகிய சீர்திருத்தவாத அறிஞர்களும் வேதம் எழுத்தில் தரப்பட்டபின்பு அற்புத வரங்களுக்கு தொடர்ந்து வரலாற்றில் இடமில்லை என்றே நம்பினர்* (*Signs of the Apostles by Walter Chantry, pg, 95-101*). *ஆகவே, லொயிட் ஜோன்சின் கருத்து சீர்திருத்தவாதிகள் மத்தியிலும், தூய்மைவாதிகள் மத்தியிலும் பெரும்பாலும் காணப்படவில்லை. லொயிட் ஜோன்சின் ஊழியத்தினால் பயனடைந்த சீர்திருத்த போதகர்களில் அனேகர் அவருடைய, அற்புத வரங்கள் தொடர்ந்தும் இக்காலத்தில் இருக்கும் என்ற போதனையை ஆதரிக்கவில்லை. லொயிட் ஜோன்சின் உதவிப் போதகராக ஒரு காலத்தில் வெஸ்ட்மின்ஸ்டர் செப்பலில் கடமைபுரிந்த இயன் மரே அற்புத வரங்கள் அப்போஸ்தலர்களுடைய காலத்தோடு முடிவடைந்து விட்டது என்றே நம்பினார்* (*Pentecost - Today?*, Iain Murray, pg, 197-199). *இதுபற்றி தூம்மைவாதியான ஜோன் ஒவன் பின்வருமாறு எழுதியுள்ளார், "அப்போஸ்தலப் பணியோடு தொடர்புடைய வரங்கள் அப்போஸ்தலர்களுடைய காலம் முழுவதும் இருந்தன. அவர்களுடைய வாழ்நாட்களுக்குப் பிறகு அந்தப் பணியும் அதோடு தொடர்புடைய வரங்களும் சபை வரலாற்றில் எவருக்கும் அளிக்கப்படவில்லை. அற்புத வரங்களும், அற்புதங்கள் செய்வதும் (அப்போஸ்தலர் காலத்துக்குப்பின்) நின்று போய்விட்டன."* (*The Spirit and the Church*, John Owen, Abridged and made easy to read by R. J. K. Law, pg, 184)

## மார்டின் லொயிட் ஜோன்சின் போதனைகளும், நானும்

*அற்புதங்களுக்கு இயற்கை ரீதியாக விளக்கம் கொடுத்து கர்த்தருடைய வேதம் போதித்த அற்புதங்களை நிராகரித்த லிபரல் இறையியலாளர்களும், பிரசங்கிகளும் நிறைந்திருந்த காலத்தில் ஊழியத்தை ஆரம்பித்த லொயிட்*

*ஜோன்ஸ் அற்புதங்களை வற்புறுத்திப் போதிக்க வேண்டிய நிலையில் இருந்தார். அத்தோடு, அவர் காலத்தில் கிறிஸ்தவ சபைகள் ஆவியின் வல்லமையையும், சந்தோஷத்தையும் இழந்த நிலையில் இருந்தபடியால் பரிசுத்த ஆவியின் வல்லமை சபையில் காணப்பட வேண்டுமென்பதற்காக "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்" பற்றிய போதனையை 1960களில் அவர் உருவாக்கியிருந்திருக்கலாம். அவர் இந்தப்போதனையைக் கொடுத்த காலத்தில் (1964) கெரிஸ்மெடிக் இயக்கம் இங்கிலாந்தில் இன்னும் ஆரம்பமாகாமல் இருந்தது. இதை இயன் மரே* (*D. Martyn Lloyd Jones, The fight of Faith 1931-1981* by Iain H. Murray) *எழுதிய லொயிட் ஜோன்சின் வாழ்க்கை வரலாற்றில் வாசிக்கலாம். ஆனால், அந்தப்போதனையை உருவாக்க அவர் பயன்படுத்திய வேதவசனங்களும், வேதப்பகுதிகளும் அப்படியான போதனைக்கு அடித்தளமாக அமையவில்லை என்பதே உண்மை. அப்போஸ்தல நடபடிகளையும், எபேசியருக்கு பவுல் எழுதிய நிருபத்தின் 1:13ஐயும், யோவான் சுவிசேஷத்தின் சில பகுதிகளையும், வேறு சில பகுதிகளையும் அவர் இந்தப்போதனையை அளிக்க பயன் படுத்தினார். அனுபவத்தின் அடிப்படையிலும், வரலாற்று சம்பவங்களின் அடிப்படையிலும் ஒருசில வேதப்பகுதிகளையும் மட்டும் பயன்படுத்தி கோட்பாடுகளை உருவாக்கக் கூடாது என்று எச்சரித்த லொயிட் ஜோன்ஸ் இந்த விஷயத்தில் மட்டும் அதைக் கோட்டைவிட்டுவிட்டது ஆச்சரியமே.*

*என்னுடைய ஆத்மீக வாழ்க்கையின் ஆரம்ப காலப்பகுதியில் லொயிட் ஜோன்சின் நூல்களை ஆர்வத்துடன் வாசித்து, அவற்றால் வசீகரிக்கப்பட்டு சீர்திருத்தக் கோட்பாடுகளில் தீவிர ஆர்வம் காட்டிய நான், அவருடைய அற்புத வரங்கள், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் போன்றவை பற்றிய கருத்துக்களால் சிறிது குழம்ப நேர்ந்தது. இந்தக் குழப்பம் ஆபத்தில் முடியாமல் மேலும் ஆழமாக வேதத்தை ஆராய்ந்து படிப்பதிலும், பெந்தகொஸ்தே இயக்கத்தின் போதனைகளை ஆராயவும் தூண்டியது. வெகுசீக்கிரத்திலேயே மார்டின் லொயிட் ஜோன்ஸ் தனது "பரிசுத்த ஆவியின் ஞாஸ்நானம்" பற்றிய போதனைக்கு அளித்த விளக்கங்களுக்கு பயன்படுத்துகிற வசனங்களுக்கான மெய்யான விளக்கத்தை நான் விளங்கிக் கொண்டேன். இந்த விஷயங்களைப் பொறுத்தவரையில் அவருடைய விளக்கங்கள் தெளிவான வேத வசனங் களை ஆதாரமாகக் கொள்ளாமல், அக்காலத்தில் சபை இருந்த நிலையின் அடிப்படையிலும், வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையிலும், எழுப்புதல்மீது அவர் கொண்டிருந்த தீவிரமான ஆர்வத்தின் அடிப்படை யிலும், தனிநபர்களின் அனுபவத்தின் அடிப்படையிலும் அமைந்திருந்ததை என்னால் தெளிவாக உணரமுடிந்தது. லொயிட் ஜோன்ஸ் இப்படி சொல்லியிருக்கிறாரே என்று அவர் எழுதியதை ஆராய்ந்து பார்க்காமல் போயிருந்தால் எத்தனையோ பேரைப் போல நானும் கூட இந்த விஷயத் தில் தவறியிருக்கலாம். இதிலிருந்து வரலாற்றுச் சிறப்புப்பெற்ற எத்தனைப் பெரிய அறிஞர்களாக இருந்தாலும் அவர்கள் சொல்லுவதெல்லாம் சரியாகத்தான் இருக்கும் என்று ஆராய்ந்து பார்த்து சிந்திக்காமல் ஏற்றுக் கொள்ளுவதன் ஆபத்தையும் நான் உணர்ந்தேன். இதற்காக மார்டின் லொயிட் ஜோன்சின் மீதிருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்துவிட வில்லை. லூதரையும், கல்வினையும், எட்வர்ட்ஸையும், ஜோன் மரேயையும்*

மரியாதையுடன் எண்ணிப் பார்க்கும் நாம் ஞானஸ்நானம் பற்றிய அவர்களுடைய போதனைகளை ஏற்றுக்கொள்ளவா செய்கிறோம்? அதுபோல் லொயிட் ஜோன்சின் கருத்துக்களை இந்த விஷயத்தில் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

என்னுடைய விசுவாச வாழ்க்கையின் ஆரம்ப காலங்களில் அற்புதங்கள் பற்றியும், ஆவிக்குரிய வரங்கள்பற்றியும், பெந்தகொஸ்தே இயக்கம் பற்றியதுமான எனது ஆய்வுகள் தொடர்ந்தபோது இக்காரியங்கள் பற்றி நான் ஏற்கனவே கொண்டிருந்த நம்பிக்கைகள் உறுதிபெற துணையாயிருந்தவர்கள் என்று இரண்டுபேரை என்னால் கூறமுடியும். இவர்களுடைய வியாக்கியானங்கள் எனக்குக் கைகோடுத்தன. விக்டர் பட்ஜனும் (Victor Budgen), ஸ்டுவர்ட் ஒலியட்டும்தான் (Stuart Olyott) இந்த இருவரும். விக்டர் பட்ஜன் இப்போது இறையடி சேர்ந்துவிட்டார். அவரை இங்கிலாந்தில் ஒரு முறை மட்டும் சந்தித்திருக்கிறேன். அவர் எழுதிய *Charismatics and the Word of God* என்ற நூல் எனக்கு மிகவும் துணையாக இருந்தது. ஸ்டுவர்ட் ஒலியட், 1 கொரிந்தியர் வேதப்பகுதிகளுக்கு ஒரு முறை அளித்த விளக்கம் எனக்கு மேலும் உதவியது. இந்த இருவரின் வியாக்கியானங்கள், பெந்தகொஸ்தே போதனைகள் வேத அடிப்படையில் அமையாமல் தனி மனித அனுபவங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை என்ற உண்மையையும், வேதம் எழுத்தில் வடிக்கப்பட்டபின்பு அற்புதவரங்கள் அவசியமற்றுப் போயின என்ற உண்மையையும் உணர்த்தின. வேதம் மட்டுமே இன்று எல்லாக்காரியங்களையும் பரிசோதித்து முடிவெடுப்பதற்கு கர்த்தர் நமக்களித்திருக்கும் ஒரே ஆயுதம், கருவி என்ற சத்தியம் எனக்கு பேராறுதல் அளித்தது. வேதத்தின் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் நம்புவதன் மூலம் நாம் ஆவியானவர் வேதரீதியில் அளிக்கக் கூடிய எந்த நியாயமான ஆத்மீக அனுபவத்தையும் நிராகரிக்கவில்லை; அவரே அவசியமற்றவை என்று நிறுத்திக்கொண்ட வரங்களை மட்டுமே இல்லாமல் போய்விட்டன என்பதை உணர்கிறோம். வேதம் போதிக்கின்ற, நாம் கிறிஸ்துவில் அனுபவிக்கக்கூடிய ஆவியின் வல்லமை, கனிகள், சந்தோஷம், சபைக்குத் தேவையான தொடர்ந்திருக்கும் வரங்கள் எல்லாவற்றையும் நாம் அனுபவிக்கலாம் என்றும் அறிந்தேன். இதற்கு முன் அறிந்திராத அமைதியையும், சமாதானத்தையும் அடைந்தேன். இவர்களுடைய கருத்துக்களின் அடிப்படையில் மேலும் பல சீர்திருத்தவாதிகளுடையதும், தூய்மைவாதிகளினுடையதும் நூல்களை வாசித்து வேதத்தை ஆராய்ந்து பார்த்து இந்த விஷயங்களில் நான் தெளிவடைந்தேன். என்னுடைய விசுவாச வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலேயே இந்த விஷயத்தில் தெளிவு பெற்றது பலவகையான ஆத்மீகப் பாதிப்புகளில் இருந்து நான் தப்ப வழிவகுத்தது.

## சீர்திருத்தவாதமும், பெந்தகொஸ்தே இயக்கமும்

இதையெல்லாம் நான் விளக்குவதற்கு முக்கிய காரணம் உண்டு. இன்று தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் சீர்திருத்த, கல்வினிசப் போதனைகளை அறிந்து கொண்டு ஊழியம் செய்கிற சிலர் பெந்தகொஸ்தே போதனைகளும் சீர்திருத்தவாதமும் பொருந்திப்போகும் என்றவிதத்தில் சபை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்நியபாஷையும், தீர்க்கதரிசனமும்,

அற்புத வரங்களும் இன்றும் உண்டு என்று இவர்கள் நம்புவதுமட்டு மல்லாமல் சபை ஆராதனையைக்கூட பெந்தகொஸ்தே சபை ஆராதனை போல் நடத்திவருகிறார்கள். கர்த்தரைத் துதிக்கிறோம் என்ற பெயரில் எல்லோரும் ஒரே சமயத்தில் சத்தமாக, ஒருவர் சொல்லுவது மற்றவர் களுக்கு விளங்காதவகையில் ஜெபிப்பதும், ஆராதனைவேளையில் எல்லோரையும் ஏதாவது செய்யும்படி அனுமதிப்பதும், கலாச்சாரம் என்ற பெயரில் கைகளைத்தட்டிப் பாடி ஆரவாரிப்பதும் கொரிந்துசபைக் குழப் பத்திற்கே வழிவகுக்கும். சீர்திருத்தவாதமும், பெந்தகொஸ்தே போதனை களும் அடிப்படையிலேயே ஒன்றுக்கொன்று முரணானவை. இரண்டும் ஒருபோதும் சேர்ந்து வாழ முடியாது. வேதத்தின் அதிகாரத்தைக்குறித்தும், மனந்திரும்புதலைக்குறித்தும், இரட்சிப்பைக்குறித்தும், பரிசுத்தமாக்குதலைக் குறித்தும் வேறுபல முக்கியமான இறையியல் போதனைகளைக்குறித்தும் வேதத்திற்கு முரணாண போதனைகளைப் பின்பற்றிவருகிறது பெந்த கொஸ்தே இயக்கம். வேதத்திற்கு தலைமுழுகிவிட்டு ஊழியம் செய்கிறார்கள் பெனிஹின்னும், தினகரனும். கர்த்தருடைய வேதம் நிர்தாட்சன்யமாக நிராகரிக்கப்பட்டு, பிசாசின் தந்திரங்களுக்கு இடங்கொடுத்து வரும் பெந்தகொஸ்தே இயக்கமும், கர்த்தருடைய இறையாண்மையை நம்பி, வேதத்தை விட்டால் வேறுவழியில்லை என்று வளர்ந்துவரும் சீர்திருத்த வாதமும் எப்படிப் பொருந்திப் போகமுடியும்? வேத சத்தியங்களில் முறை யான ஞானமில்லாத பெந்தகொஸ்தே அன்பர்களுக்கு நாம் நட்புக் கரம் நீட்டி வேதவிளக்கமளித்து உதவுகின்ற அதேவேளை சீர்திருத்தவாதிகளாக வேஷம் போடும் பெந்தகொஸ்தே பச்சோந்திகளை இனங்கண்டு தூரத்தில் தள்ளி வைக்கவேண்டிய கடமையும் நமக்குண்டு.

அற்புதவரங்களைப் பொறுத்தவரையில் அவை இன்றும் இருக்கலாம் என்று நம்புகிற கல்வினிச விசுவாசிகள் நிச்சயமாக கர்த்தரின் வேதத்தின் அடிப்படை அதிகாரத்தில் கைவைக்கிறவர்களாகத்தான் இருக்க முடியும். வேதத்தின் அதிகாரத்தையும், போதுமான தன்மையையும் நம்புகிறவர்கள் அற்புதவரங்கள் (அந்நியபாஷை, தீர்க்கதரிசனம், அற்புதங்கள்) தொடர்ந்தும் இருப்பதாகக் கருத முடியாது. அவை இருப்பதாகக் கருதி சபை நடத்த ஆரம்பித்தால் 18ம் நூற்றாண்டில் எட்வர்ட் இர்விங் (Edward Irving) என்ற ஸ்கொட்லாந்து போதகருக்கு ஏற்பட்ட கதிதான் இவர்களுக்கும் ஏற்படும். அற்புத வரங்கள் தொடர்ந்தும் இருப்பதாகக் கருதி அந்த மனிதர் தன்னுடைய ஊழியத்தையே அழித்துக் கொண்டார். சபையில் எல்லோரை யும் பேசவிட்டு பிரசங்கத்தை இல்லாமலாக்கினார். ஆவியின் கிரியைகள் என்ற பெயரில் அலங்கோலங்கள் சபையில் நடக்க ஆரம்பித்தன. இறுதியில் தவறான நம்பிக்கைகளினால் தன் ஊழியத்தையும் இழந்தார். அவருடைய மரணத்தைப் பற்றி எழுதும் சிறந்த பிரசங்கியும் போதகருமாக இருந்த ரொபட் மரே மெக்செயின் (Robert Murray McCheyne), "தன்னுடைய பல் வேறான தவறுகளுக்கும், தவறான நம்பிக்கைகளுக்கும் மத்தியில் இந்த மனிதன் பக்திமானாகத்தான் இருந்தார். இப்போது, தான் எந்தத் தேவனுக்கு முன்பாக அத்தனைப் பெருந்தவறுகளையும் செய்தாரோ அவரிடமே போய்ச் சேர்ந்துவிட்டார்" என்று எழுதியிருக்கிறார். இவ்வார்த்தைகள் எட்வர்ட் இர்விங்கின் பெருந்தவறுகளைச் சுட்டிக் காட்டுகின்றன. அத்தோடு,

*விசுவாசிகளை எச்சரிக்கை செய்யும் வாசகங்களாகவும் இருக்கின்றன.*

*வேதம், வேதம் என்று வேதத்தை முன்வைத்து எல்லாவற்றையும் செய்வதால் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளுக்கு நாம் இடமளிக்காமல் போய்விடுவோம் என்ற தவறான எண்ணம் பலருக்கு இருக்கிறது. ஆவி யானவரின் கிரியைகள் பலர் மத்தியில் இல்லாமலிருப்பதற்கு அவர்கள் வேதத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையல்ல காரணம். அவர்கள் மத்தி யில் நடைமுறை ரீதியிலான பரிசுத்தமும், பக்திவிருத்தியும், ஆவியின் சந்தோஷமும் இல்லாதிருப்பதே காரணம். வேதத்தை முன்னிலைப்படுத்தி வாழ்கிறவர்கள் வேதரீதியிலான பரிசுத்த வாழ்க்கையை அனுதினமும் வாழ்ந்து, ஆவியின் கனிகளும், சந்தோஷமும் தங்கள் வாழ்க்கையில் இருக்கும் படிப் பார்ததுக் கொள்ள வேண்டும். சபை வாழ்க்கை சரியில்லை என்றால் அதற்கு வேதநம்பிக்கைகளைக் குறைகூறக்கூடாது. கோட்பாடுகளை நிராகரிக்க முயலக்கூடாது. வேதக்கோட்பாடுகளின்படி விசுவாச வாழ்க் கையை ஒவ்வொருவரும் வாழும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஆவியின் கிரியைகளும், கனிகளும் நம்மத்தியில் இருப்ப தற்கான அடையாளங்களைக் காணமுடியும். அளவுக்குமீறி உணர்ச்சி வசப் பட்டு கரங்களைத் தட்டுவதும், குதிப்பதும், ஆடுவதும் ஆவியின் கனிகளுக் கும், கிரியைகளுக்கும் ஒருபோதும் அடையாளமாகாது. வேதக் கோட் பாடுகளை நிராகரித்து அனுபவத்தையும், அற்புதங்களையும் மட்டும் அடித் தளமாகக் கொண்டு வளர முயலும் சபைகளும், ஊழியங்களும் வெளியில் பார்ப்பதற்கு ஆவியின் வல்லமையுள்ளவை போலத் தோன்றினாலும் அவை கர்த்தருடைய ஊழியங்களாக இல்லாமலும் இருக்கலாம். புடவைக் கடையில் கண்ணாடிக்கூண்டில் கண்ணைப் பறிக்கும் சேலையோடு நிற்கும் பெண் பொம்மை அழகாகத்தான் இருக்கும், ஆனால் அது உயிரில்லாதது. வேதம் அனுமதிக்காதவற்றைக் கொண்டு ஊழியம் என்ற பெயரில் எதையாவது செய்து நூற்றுக்கணக்கானவர்களைக் கவர்ந்து, மக்கள் மத்தியில் நாடகமாடி சுலபமாகப் பெயர் பெற்றுவிடலாம். ஆனால், அது கர்த்தரின் தண்டனைக் காகக் காத்திருக்கும் ஊழியமாகத்தான் இருக்கும் (மத்தேயு 24).*

*இதையெல்லாம் வாசித்துவிட்டு, கர்த்தர் அற்புதங்கள் செய்வதில்லை என்று நான் சொல்லிவிட்டதாக தவறாக முடிவுசெய்துவிடாதீர்கள். கர்த்தர் அற்புதத்தின் தேவன். இந்த உலகத்தை அவர் அற்புதமாகத்தான் படைத் தார். வேதம் அற்புதமாக நமக்கு எழுத்தில் தரப்பட்டிருக்கிறது. இயேசுவின் பிறப்பும், வாழ்வும் அற்புதமான செயல்கள். இன்றும் கர்த்தர் அற்புதங்களை செய்கிறவராக இருக்கிறார். வரலாற்றில் அவர் சிலவேளைகளில் நடத்தக் கூடிய எழுப்புதலும்* (Revival) *அவருடைய அற்புத செயலே. மனித சிந்தனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட வகையில், மருத்துவர்களின் மருந்து களையும் கைத்திறமைகளையும்மீறி நமக்கு சிலவேளைகளில் நோய்களில் இருந்து விடுதலை கிடைக்கும்போது அது கர்த்தரின் அற்புத செயலாகவே இருக்கிறது. வழமையாக வைத்தியர்களின் மூலமும், மருந்துகளின் மூலமும் நமக்கு விடுதலை கிடைக்கும்போது அதுவும் கர்த்தரின் அற்புத செயலே. கர்த்தரின் துணையில்லாமல் எந்த மருத்துவரோ, மருந்தோ நமக்கு உதவ முடியுமா? மனிதனுடைய பாவச்செயல்கள் அதிகரித்து போரும், நோயும், இயற்கையின் கோரமும் இந்த உலகை அழித்துக் கொண்டு வருகிறவேளை*

*உலகத்தைத் தொடர்ந்தும் தன் சித்தம் நிறைவேறக் கொண்டு நடத்தும் கர்த்தரின் பராமரிப்புச் செயலும் அற்புதமே. ஆகவே, நான் அற்புதத்தை என்றும் நம்புகிறேன். ஆனால், நான் இதுவரை விளக்கியது அப்போஸ்தலர் காலத்தில் தரப்பட்ட அற்புத வரங்கள் வரலாற்றில் தொடர்ந்தும் சபைக் கும், தனிமனிதர்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்பதுதான். அன்று அவை கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள் நிறைவேறியிருப்பதால் அவற்றிற்கு இன்று வரலாற்றில் அவசியமில்லாமல் போய்விட்டது. அவற்றை இன்று நாம் தொடர்ந்தும் எதிர்பார்க்கக் கூடாது. சர்வ அதிகாரமும் கொண்ட கர்த்தரின் சித்தத்தை விளக்கும் வேதம் கிறிஸ்து மறுபடியும் வருகிறவரைக்கும் நமக்குப் போதுமானது; நமது ஆத்மீகத் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற அது மட்டுமே தேவை.*

**பின் குறிப்பு:**

*1. இந்த ஆக்கம் முழுவதும் பெந்தகொஸ்தே/கெரிஸ்மெடிக் குழுக்களை அடையாளம் காண பெந்தகொஸ்தே இயக்கம் என்ற பதத்தையே பயன் படுத்தியிருக்கிறேன். தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள் வாழும் நாடுகளில் பலவிதமாக இந்த இயக்கமும் இதன் கோட்பாடுகளைப் பின்பற்றிவருபவர் களும் அழைக்கப்பட்டு வருகிறார்கள். தமிழகம் முழுவதும் பெந்தகொஸ்தே என்ற பெயரே பெந்தகொஸ்தே மற்றும் கெரிஸ்மெடிக் குழுக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்ரீ லங்காவில் பெந்தகொஸ்தே என்ற பதம் “சிலோன் பெந்தகொஸ்தே” சபைகளைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. பெந்தகொஸ்தே சபைகள் தவிர்ந்த அசெம்பிளிஸ் ஆவ் காட்* (Assemblies of God) *போன்ற சபைகளை கெரிஸ்மெடிக் சபைகள் என்று அந்நாட்டில் அழைப்பார்கள். தமிழில் பொதுவாக இவர்கள் எல்லோரையும் “பரவசக் குழுக்கள்” என்ற பெயரிலும் ஸ்ரீ லங்காவில் அழைப்பார்கள். நாட்டுக்கு நாடு இவ்வாறாக வித்தியாசமான பெயர்கள் பயன்படுத்தப்பட்டுவருவதால் இவையெல்லாவற்றையும் ஒரே பெயரில் பெந்தகொஸ்தே இயக்கம் என்று இந்த ஆக்கம் முழுவதும் குறிப்பிட் டிருக்கிறேன். ஆகவே, வாசகர்கள் இதைப்புரிந்து கொண்டு இந்த ஆக்கத்தை வாசிக்கவும்.*

***“அந்நியபாஷை, தீர்க்கதரிசனம், அற்புதங்கள் ஆகியவை கர்த்தருடைய சாதாரண பராமரிப்புக் காலங்களில் வரலாற்றில் கொடுக்கப்படாத தால்தான் அவை அசாதாரணமான வரங்கள் என்று அழைக்கப் படுகின்றன. தன்னுடைய பிள்ளைகளைப் பராமரிக்கும் கர்த்தர் வழமையாக வரலாற்றில் அவர்களுக்கு இந்த வரங்களை அளிப்பதில்லை. அசாதாரணமான காலங்களில் இத்தகைய வரங்களை அளிக்கின்ற கர்த்தர், வேதம் முழுமையாக தொகுக்கப்பட்டு எழுதி முடிக்கப்பட்ட காலத்துக்கு முன் தன்னுடைய சித்தத்தை வெளிப்படுத்தி இந்த உலகத்தில் ஆதிசபையை நிறுவுவதற்காக தீர்க்கதரிசிகளுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் இந்த வரங்களை அளித்தார்.”*** *– ஜொனத்தன் எட்வர்ட்ஸ்* (Jonathan Edwards, *Charity and its Fruits*, pg, 29-30)

# டிஸ்பென்சேஷனலிசம்

## தோற்றமும், வளர்ச்சியும் (3)

அமெரிக்காவில் டிஸ்பென்சேஷனலிசத்தின் வளர்ச்சி பற்றி கடந்த இதழில் பார்த்தோம். டிஸ்பென்சேஷனலிசத்தைப் பற்றி முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு இதுவரை வந்துள்ள ஆக்கங்களை வாசித்தபின் இந்த இதழில் வருவதையும் வாசிப்பது அவசியம். டீ. எல். மூடி (Dallas Theological Seminary), ஆர். ஏ. டோரி போன்றவர்களால் அமெரிக்காவில் காலூன்றி வளர்ந்த டிஸ்பென்சேஷனலிசம் மேலும் தீவிரமாக எப்படி வளர்ந்தது என்பதை இனிப்பார்ப்போம்.

### ஸ்கோபீல்டின் வேதாகமக் குறிப்புகள்

இப்படியாக வளர்ந்த டிஸ்பென்சேஷனலிசம் 20ம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் அதிதீவிரமாக தன்னுடைய கோட்பாடுகளை பரப்பியது. டிஸ்பென்சேஷனலிசத்தின் சில பத்திரிகைகளும், நூல்களும் இக்காலத்தில் சுவிசேஷ இயக்கத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தின. இவற்றில் ஸ்கோபீல்டின் வேதாகமக் குறிப்புகள் (Scofield Bible Notes) முதலிடத்தைப் பெற்றிருந்தது. சுவிசேஷ இயக்கத்தில் இது ஏற்படுத்திய தாக்கத்தை எழுத்தில் விபரிப்பது கஷ்டமானது. அந்தளவுக்கு ஸ்கோபீல்டின் வேதாகமக் குறிப்புகள் பிரபல்யம் பெற்றன. இப்படியான குறிப்புகளை வேதாகமத்துக்கு எழுதி அதற்குள் நுழைத்து வெளியிடும் நோக்கத்தை ஸ்கோபீல்ட் முதன் முதலாக 1901ல் சீ கிளிப் மாகாநாட்டில் (Sea Cliff Conference) கெபேலின் (Gaebelein) என்பவருடன் விவாதித்தார். 1909ல் அதன் முதல் பதிப்பு வெளிவந்தது. வேதாகமத்தில் திணிக்காமல் இந்தக் குறிப்புகளை ஸ்கோபீல்ட் (Scofield) தனியாக ஒரு நூலாக வெளியிட்டிருப்பாரானால் அவற்றை வெகு சீக்கிரத்தில் மக்கள் மறந்திருப்பார்கள். ஆனால், வேதத்தையும், ஸ்கோபீல்டின் குறிப்புகளையும் ஒப்பிட்டு ஆராயத்தெரியாத ஆயிரக்கணக்கானோர் இதனை வாங்கிப் படித்து இதன் இரசிகர்களானார்கள். இந்தக் குறிப்புகள் லிபரலிசத்துக்கு எதிராக வேதத்தின் பிரதானமான கோட்பாடுகளை வலியுறுத்துகிற நல்ல காரியத்தை செய்திருந்தாலும், வேத அறிவில்லாதவர்களை பாதிக்கக்கூடிய ஆபத்துக்களையும் உள்ளடக்கியிருந்தது. வேத அறிவில்லாதவர்களும், புதிய விசுவாசிகளும் ஸ்கோபீல்டின் வேதாகமக்குறிப்புகளை மட்டும் வாசித்துவிட்டு தங்களை இறையியல் வல்லுனர்களாக கருதுகின்ற நிலையும் உருவாகியது. 1917லும் பின்பு 1967லும் ஸ்கோபீல்டின் குறிப்புகள் திருத்தி வெளியிடப்பட்டன. 1967ம் ஆண்டு திருத்தத்தின் ஆசிரியர் குழுவில் பிரேங் ஈ. கெபேலின் (Frank E. Gaebelein), வில்லியம் கல்பர்ட்சன் (William Culbertson), சார்ள்ஸ் பெயின்பர்க் (Charles Fainberg), அலன் மெக் ரே (Allan MacRae), கிளேரன்ஸ் மேசன் ஜூனியர் (Clarence Mason Jr.,), அல்வா ஜே. மெக்ளேயின் (Alva J. McClain), வில்பர் ஸ்மித் (Wilbur Smith), ஜோன் வெல்வூர்ட் (John Walvoord) ஆகிய எட்டு

பேரும் இருந்தனர். இந்தக்குழுவின் தலைவராக ஈ. சூலர் இங்கிலிஸ் (E. Schuyler English) தலைவராக இருந்தார்.

## டிஸ்பென்சேஷனலிச இலக்கிய வெளியீடுகளும், மகாநாடுகளும்

இதே காலப்பகுதியில் மேலும் இரு டிஸ்பென்சேஷனலிச வெளியீடுகள் பிரபல்யமாகின. டபிள்யூ. ஈ. பிளெக்ஸ்டோனின் (W. E. Blackstone) “இயேசு வருகிறார்” முதலில் 1878ல் வெளியிடப்பட்டது. ஆனால், 1908லேயே பின்குறிப் பொன்றோடு சில ஆயிரம் பிரதிகள் வெளியிடப்பட்டு உலகெங்கிலுமிருந்த கிறிஸ்தவ ஊழியர்களுக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்பட்டது. 1918ல் கிலேரன்ஸ் லார்கின் (Clarence Larkin) “டிஸ்பென்சேஷனல் சத்தியம்” என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார். இது அனேக வரைபடங்களுடன் வெளிவந்தது. இந்த வரைபடங்கள் டிஸ்பென்சேஷனலிசப் போதனையின் கர்த்தரின் திட்டங்கள், நீயாயத்தீர்ப்புகள், இறுதிக்கால சம்பவங்கள், தானியேல், வெளிப்படுத்தல் ஆகியவற்றை விளக்குவதாக இருந்தன. இந்த நூல் 40 தடவைகளாவது மறுபதிப்பு செய்யப்பட்டு வெளிவந்தது.

இதே காலப்பகுதிகளில் டிஸ்பென்சேஷனலிசத்தை வளர்ப்பதற்காக தீர்க்கதரிசன மாகாநாடுகள் நடத்தப்பட்டன. 1914ல் முதலாம் உலகப்போர் ஆரம்பிப்பதற்கு சற்று முன்பாக பெப்ரவரி மாதத்தில் மூடி வேதாகமக் கல்லூரியில் ஓர் தீர்க்கதரிசன மகாநாடு நடந்தது. இதன் தலைவர்களாக ஜேம்ஸ் கிரே (James Gray), டபிள்யூ. பீ. ரைலி (W. B. Riley), ஸ்கோபீல்ட் (Scofield), கெபேலின் (Gaebelein) ஆகியோர் இருந்தனர். இந்த மகாநாட்டில் விளக்கப்பட்டதுபோல் அதுவரை வேறு எந்த மகாநாடுகளிலும் டிஸ்பென்சேஷனலிசம் வெளிப்படையாகவும் ஆணித்தரமாகவும், துல்லியமாகவும் விளக்கப்படவில்லை.

முதலாம் உலகப்போர், தீர்க்கதரிசனத்தில் மக்கள் அதிக ஆர்வம் கொள்ள வைத்தது. உலகப் போர் முடிவு பெறும் தருவாயில் தீர்க்கதரிசன மகாநாடு களில் சொல்ல முடியாத அளவுக்கு மக்கள் கலந்து கொள்ள ஆரம்பித்தனர். 1918ல் பிலடெல்பியாவில் அத்தகைய மாகாநாடொன்று நடந்தது. இது பிரிட்டன் எருசலேமைக் கைப்பற்றியபோது நடந்ததால் அந்த நிகழ்ச்சி தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றுதலுக்கு ஓர் அடையாளமாகக் கருதப்பட்டு மகாநாடு அந்த வெற்றியைக் கொண்டாடியது.

## டல்லாஸ் இறையியல் செமினரி

1929 களிலும் 1930 களிலும் லிபரலிசத்துக்கெதிரான போராட்டத்தை நடத்திய அடிப்படைக்கோட்பாட்டளார்களின் அணியில் டிஸ்பென்சேஷன லிசக்கோட்பாட்டாளர் இணைந்திருந்தபோதும் அவர்கள் ஒரு தனித்துவ முள்ள அணியாக வளர்ந்து வந்ததையும் காண முடிகின்றது. அவர்கள் தங்க ளுடைய போதனைகளை அளிக்கும் வேதாகமக் கல்லூரிகளை நடத்தியது மட்டுமல்லாமல், போதக ஊழியத்துக்கு ஊழியக்காரரைத் தயார் செய்யும் செமினரிகளையும் நடத்திவந்தது. அவற்றில் பெயர் பெற்றது டல்லாஸ் இறை யியல் செமினரி (Dallas Theological Seminary). இது 1924ல் லூயிஸ் ஸ்பெரி ஷேபரால் (Lewis Sperry Chafer) தொடங்கப்பட்டது. அவரே இதன் முதல் பிரசிடன்டாகவும் இருந்தார். 1947ல் லூயிஸ் ஸ்பெரி ஷேபரின் முறைப்படுத்தப் பட்ட இறையியல் நூல் (Systematic Theology) பல தொகுதிகளாக வெளி

*வந்தது. அதேநேரம் இந்த செமினரியோடு தொடர்புடையதாக* Bibliotheca Sacra *என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டது. இதில் பிரபலமான டிஸ்பென்சேஷனலிசக் கோட்பாட்டு இறையியலறிஞர்கள் பலரும் எழுதினர். இன்றும் இது தொடர்ந்து வெளிவருகிறது.*

## டிஸ்பென்சேஷனலிச வேதவிளக்க முறை

*அமெரிக்காவில் டிஸ்பென்சேஷனலிசத்தின் வளர்ச்சி பற்றிய ஆய்வை நாம் முடிக்குமுன்பாக டிஸ்பென்சேஷனலிசத்தின் வேதவிளக்கவிதி பற்றிய ஒரு முக்கிய அம்சத்தைக் கவனிப்பது அவசியம். அதனுடைய இரண்டு மிக முக்கிய இலக்கிய வெளியீடுகளான Scofield Reference Bible-லும் Dispensational Truth-லும் அவ்வேதவிளக்க விதி விளக்கப்பட்டிருக்கிறது. இந்த வேதவிளக்க முறையே டிஸ்பென்சேஷனலிசத்திற்கு அடித்தளமாக இருக்கிறது. இது விழுந்துவிட்டால் டிஸ்பென்சேஷனலிசம் உயிர் வாழ முடியாது. அந்த வேதவிளக்கமுறைதான் என்ன? அதாவது, டிஸ்பென்சேஷனலிசம் வேதத்தில் தரப்பட்டுள்ள விளக்கங்களை தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்து அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விளக்கங்களைத் தருகிறது. டிஸ்பென்சேஷனலிசத்தின் விளக்கத்தில் இந்த ஒவ்வொன்றிற்கும் இடையில் இருக்கும் பிரிவினையில் காணப்படும் ஒற்றுமையே அதிகம். அதாவது வேதவரலாற்றையும், தீர்க்கதரிசனங்களையும் போதனைகளையும் பிரித்துத் தனித்தனியாகக்காட்டி விளக்குவதிலேயே அது முழுக்கவனத்தையும் செலுத்துகிறது. இதன் மூலம் வேத ஒற்றுமையை முற்றாகக் குழைத்துவிடுகிறது டிஸ்பென்சேஷனலிசம்.*

*இவ்வாறாக, டிஸ்பென்சேஷனலிசம் வேதத்தில் பிரித்துக் காட்டுகின்ற பிரிவுகளுக்கு எல்லையே இல்லை. உதாரணமாக, யூதர்களும், புறஜாதியாரும், சபையும்; யெகோவாவின் துணைவியும், ஆட்டுக்குட்டியின் மணவாட்டியும் (இந்த உலகத்து மணவாட்டியும், பரலோகத்து மணவாட்டியும்); ஏழுவிதமான நியாயத்தீர்ப்புகள் (வெளிப்படுத்தல் 20:12ல் ஸ்கோபீல்டின் குறிப்பைப் பார்க்கவும்); எட்டு உடன்படிக்கைகள்; கிறிஸ்துவின் நாளும், ஆண்டவரின் நாளும், நியாயத்தீர்ப்பின் நாளும்; தேவனுடைய இராஜ்யமும், பரலோக இராஜ்யமும் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்தப்பிரிவுகளைவிட பரிசுத்த ஆவியினுடைய கிரியைகளையும் பல பிரிவுகளாக பிரித்து வைத்திருக்கிறது. அதாவது,* “in”, “with”, “upon” *என்ற வார்த்தைகள் ஒவ்வொன்றிற்கும் இலக்கணத்தை மீறிய அர்த்தங்களை கொடுத்து பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் பற்றிய இறையியல் விளக்கங்களைக் கொடுக்கிறது டிஸ்பென்சேஷனலிசம்.*

*டிஸ்பென்சேஷனலிசம், வேதாகமத்தை ஒரு என்சைக்கிளோபீடியாவைப் போலக்* (Encyclopedia) *கருதி அதன் வரலாற்றையும், தீர்க்கதரிசனங்களையும் பகுதி பகுதியாகப் பிரித்து வரைபடங்களைத் தீட்டியிருக்கிறது. ஆர். ஏ. டோரியின் What the Bible Teaches என்ற நூலும் இதேவிதமாகத் தான் அமைந்திருக்கிறது. 500 பக்கங்களுக்கு மேல் இந்தவகையிலான பிரிவுகளுக்கு பொறுக்கியெடுக்கப்பட்ட வேத வசனங்கள் ஆதாரமாகக்காட்டப்பட்டு டோரியின் நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. டிஸ்பென்சேஷனலிஸ்டுகள் வேத விளக்கமளிக்கிறவர்களை விஞ்ஞானிகளைப்போலக் கருதுகிறார்கள். விஞ்ஞானியினுடைய பணி சேகரிக்க முடிந்த எல்லா செய்திகளையும்*

சேகரித்து அவற்றைத் தனித்தனியாகப் பட்டியலிட்டு பின்பு அவற்றின் அடிப் படையில் ஒரு முடிவுக்கு வருவதுதான். இதேவிதமாகத்தான் வேதத்தை விளக்குகிறவர்களும் எல்லா முடிவுகளையும் எடுக்க வேண்டுமென்கிறது டிஸ்பென்சேஷனலிசம். ஆனால், இங்கேயே இவர்கள் பெருந்தவறிழைக்கிறார் கள். ஒவ்வொரு வேதவசனமும், வேதப்பகுதியும் ஓர் வரலாற்று சந்தர்ப்பத்தை யும், ஏதாவதொரு இலக்கிய அமைப்பையும் கொண்டு வேதத்தில் அமைந் திருப்பதை இவர்கள் முற்றாகக் கவனிக்க மறுத்துவிடுகிறார்கள். வரலாற்று அமைப்பையும், வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பலவகை மொழி இலக் கியங்களையும் தள்ளிவைத்துவிட்டு வசனங்களை விளங்கிக்கொள்ளப் பார்ப் பது பெரும் ஆபத்தில்தான் கொண்டுபோய்விடும். அந்த ஆபத்தைத்தான் டிஸ்பென்சேஷனலிசத்தில் பார்க்கிறோம்.

அத்தோடு, கர்த்தரின் சித்தம் வெளிப்படுத்தப்பட்டுள்ள முறையையும் டிஸ்பென்சேஷனலிசம் கவனிக்கத் தவறிவிட்டது. கர்த்தரின் சித்தம் பங்கு பங்காகவும், வகை வகையாகவும் வரலாற்றில வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, கர்த்தரின் சித்தம் ஒரேயடியாக ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் வேதத்தில் விளக்கப்படாமல் வரலாற்றில் வளர்ந்து வருவதாக வெளிப்படுத் தப்பட்டிருக்கிறது (Progressive revelation). கர்த்தரின் பூரணமான சித்தத்தை, அது வரலாற்றில் வளர்ந்து வரும் விதத்தை ஆராய்ந்து விளங்கிக் கொள்ள இந்தக் கோட்பாடு தவறிவிட்டது. மேலும், வேதத்தின் எல்லாப் பகுதிகளும் சமமான தெளிவைக் கொண்டிருக்கவில்லை என்பதை உணர்ந்து தெளிவற்றதாகத் தென்படும் பகுதிகளைத் தெளிவான பகுதிகளைக் கொண்டு விளக்க வேண்டும் என்ற உண்மையையும் இக்கோட்பாடு அலட்சியப்படுத்து கிறது. இக்கோட்பாடு வேதத்தின் எல்லாப் பகுதிகளும் சமமான தெளிவோடி ருப்பதாகக் கருதுவதோடு எல்லாப்பகுதிகளையும் எழுத்துபூர்வமாக மட்டுமே விளக்க வேண்டுமென்று (Strict literal interpretation) முரட்டுத்தனமாக வலி யுறுத்துகிறது. டிஸ்பென்சேஷனலிசம் செயற்கை முறையில் உருவாக்கியுள்ள இந்த வேதவிளக்கமுறை (Artificial interpritive principle) கர்த்தர் வெளிப் படுத்தியிருக்கும் முறைக்கு உட்பட்டு வேதத்தை விளக்கத் தவறுகிறது.

இதுவரை டிஸ்பென்சேஷனலிசம் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு எவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கு காலூன்றி தளைத்து வளர்ந்தது என்பதையும், அதன் ஏஜன்டுகளான இலக்கிய வெளியீடுகளும், இறையியல் கல்லூரிகளும் எப்படி உருவாகின என்றும் பார்த்தோம். டிஸ்பென்சேஷ னலிசத்திற்கு அடிப்படையாக உள்ள அதன் வேதவிளக்க முறையின் குறை பாட்டையும் விளக்கியுள்ளோம். இனி டிஸ்பென்சேஷனலிசத்தில் சமீப காலங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை அடுத்த இதழில் பார்க்கலாம்.

**“ஆத்மீக வாழ்க்கையில் நீங்கள் வெற்றியடைய வேண்டுமானால் கிறிஸ்தவர் என்று உங்களை அழைத்துக் கொண்டால் மட்டும் போதாது, கர்த்தருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் நீங்கள் கட்டுப்பட வேண்டும். அதாவது உங்கள் மனதை வருத்தித் தூங்கவிடாமல் செய்யும் பாவங்களோடு மட்டும் போராடாது சகல பாவங்களுக்கெதிராகவும் நீங்கள் போராடி வெற்றியடைய வேண்டும்.” - ஜோன் ஓவன்.**

# நீதிமானாக்கும் விசுவாசம்

இறையியல் தெரியாமல் இருப்பதும், இறையியல் கோட்பாடுகளில் தவறுவிடுவதுமே நடைமுறையில் நாம் தவறாக நடப்பதற்கும், போலிப் போதனைகள் உருவாவதற்கும் காரணமாக இருக்கின்றன. கிறிஸ்தவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றான நீதிமானாக்குதலைப் (Justification) பற்றிய தவறான விளக்கம் கொடுப்பதில் பலர் இன்று ஈடுபட்டிருக்கின்றனர். ரோமன் கத்தோலிக்க மதத்தோடு உறவாடுவதற்கு ஆசைப் பட்ட சில சுவிசேஷ இயக்கத்தார் சில வருடங்களுக்கு முன்பு கத்தோலிக்க மத விளக்கத்தோடு பொருந்திப்போகும் வகையில் நீதிமானாக்குதலுக்கு விளக்க மளிக்கமுற்பட்டனர். நீதிமானாக்குதலாகிய வேத போதனையில் கைவைப்பது கிறிஸ்தவ விசுவைாசத்தை நிராகரிப்பதற்கு சமமானது.

நீதிமானாக்கும் விசுவாசமா? இது என்ன பெரிய வார்த்தையாக இருக் கிறதே என்று பயப்படுகிறீர்களா? இது நாம் அவசியம் அறிந்திருக்க வேண்டிய சத்தியம் தான். இயேசு கிறிஸ்துவின் மூலம் கர்த்தர் நமக்கு வழங்கும் நீதியை விளக்குகிறது இந்த சத்தியம். நம்மேலிருந்த தேவ கோபத்தை கிறிஸ்து தன்மேல் தாங்கி பாவிகளாகிய நாம் அடையப்போகிற தண்டனையிலிருந்து விடுதலை தர, அவரை நாம் நம்முடைய பாவங்களுக்காக வருந்தி மனந்திரும்பி விசுவாசிக் கின்றபோது அவருடைய கிருபாதாரப் பலியின் அடிப்படையில் கர்த்தர் நம்மை நீதிமான்களாக அறிக்கையிடுகிறார். இந்தவகையில் கர்த்தர் ஆதியி லிட்ட திட்டம் சிலுவையில் நிறைவேறி, நமக்காக மரித்த கிறிஸ்துவை நாம் இரட்சிப்புக்காக விசுவாசிக்கிறபோது நீதிமான்களாகிறோம் (ரோமர் 4:5).

இந்த நீதிமானாக்குதல் தத்துவத்தை ரோமன் கத்தோலிக்க மதம் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் ரோமன் கத்தோலிக்க மதச் சடங்குகளும், சபை சட்டதிட்டங்களும், ஞானஸ்நானமுமே மனிதனை நீதிமானாக்குகின்றன. கர்த்தர் நமக்கு கிறிஸ்து இயேசுவில் அளித்திருக்கும் விடுதலையையும், சமாதானத்தையும், நீதியையும் கொச்சைப்படுத்தி நீதிமா னாக்குதலுக்கு மனிதன் தன்னுடைய நீதியற்ற சொந்தக் கிரியைகளில் தங்கி யிருக்கும்படிச் செய்கிறது ரோமன் கத்தோலிக்க மதம் (எபேசியர் 2:8–10).

### விசுவாசத்தினால் மட்டும்

கத்தோலிக்க மதத்தின் பெருந்தவறைச் சுட்டிக்காட்டுவதற்காகவே மார்டின் லூதர் விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக முடியும் (Faith alone) என்று ஆணித்தரமாகப் பிரசங்கித்தார் (ரோமர் 1: 17, 18). "விசுவாசத்தினால் மட்டும்" என்ற பதங்களை வரலாற்று, இறையியல் அடிப்படையில் நாம் விளங்கிக்கொள்வது அவசியம். "விசுவாசம் மட்டும்" என்று கூறும்போது, கர்த்தர் நமக்கு ஈவாகத் தரும் விசுவாசத்தினாலன்றி வேறு எதனாலும் நாம் இரட்சிப்பை அடைய முடியாது (நீதிமான்களாக முடியாது) என்று விசுவாசிக் கிறோம். நம்மை நீதிமான்களாக்குவது கிறிஸ்துவின் இரத்தப்பலியே. நமக்குக் கிடைக்கின்ற நீதியும் கிறிஸ்துவின் நீதி. ஆனால், அதை நாம் அடையச் செய்வது கர்த்தர் தரும் விசுவாசம் மட்டுமே. ஆகவே, வேதம் விசுவாசத்தை ஒரு கருவி யாகப் பார்க்கிறது. (Faith is the instrument by which we receive our justification).

*இந்த விசுவாசம் நமது சொந்த முயற்சி அல்ல; கர்த்தர் தரும் ஈவு. விசுவாசத்தில் கிரியைக்கு ஒருபோதும் இடமில்லை. அதேவேளை இந்த விசுவாசம் உயிரற்றது மல்ல. பரிசுத்த ஆவியின் கிரியையின் மூலம் நமக்குக் கிடைக்கும் இந்த விசுவாசம் மெய்யான மனந்திரும்புதலையும், அன்பையும், நம்பிக்கையையும் எப்போதும் உள்ளடக்கியிருக்கும். கர்த்தருடைய நீதிமானாக்குதலாகிய கிரியை இந்த விசுவா சத்தை நம்மில் எதிர்பார்க்கிறது. விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாகிறோமே தவிர நீதிமானாக்கப்பட்டிருப்பதனால் நாம் விசுவாசிப்பதில்லை.*

## நீதிமானாக்கும் விசுவாசம்

*தன்னில் எந்த நீதியையும் கொண்டிராத விசுவாசம் நம்மை எப்படி நீதிமானாக்குகிறது? என்ற கேள்வி எழலாம். விசுவாசம் அதற்கு கிறிஸ்துவின் கிரியைகளிலேயே தங்கியிருக்கிறது. மார்டின் லூதர் சொன்னதுபோல, அது வெறுங் கை மட்டுமே* (an empty hand)*. விசுவாசம் இறையாண்மையுள்ள கிருபை யால் கர்த்தருடைய நீதிக்குப் பூரணமாகக் கீழ்ப்படிந்த கிறிஸ்துவில் தங்கியிருந்து அவர் தரும் இரட்சிப்பைப் பெற்று அதை நம்முடையதாக்குகிறது. நம்மை நீதிமான்களாக்க விசுவாசத்தில் எந்தத்தகுதியோ, நீதியோ இருக்கவில்லை. நீதிமான்கள் என்னும் தகுதியை பாவிகள் அடைவதற்கு விசுவாசம் தன்னில் எதையும் கொண்டிருக்கவில்லை. அது கிறிஸ்துவையும் அவருடைய சிலுவைப் பலன்களையும் அரவணைத்து அவற்றை நம்முடையதாக்குகின்றது. இந்தவகை யிலேயே விசுவாசம் நம்மை நீதிமான்களாக்குகிறது.*

## நீதிமான்களாக நாம் எண்ணப்படுகிறோம்

*நீதிமானாக்குதல் பற்றிய இன்னுமொரு உண்மை, கர்த்தருடைய நீதிமன்றத்தில் நாம் நீதிமான்களாக கர்த்தரால் அறிவிக்கப்படுகிறோமே தவிர நாம் நீதிமான்களாக மாறிவிடுவதில்லை. கிறிஸ்து மட்டுமே பாவம் இல்லாத நீதிமான். நாம் பாவத்தில் பிறந்தவர்கள்; நம்மில் நீதி இல்லை. கிறிஸ்துவின் நீதி நமக்கு நீதியான வாழ்க்கை நடத்தக்கூடிய இரட்சிப்பைத் தந்திருக்கிறது. பரிசுத்தத்தோடு வாழக்கூடிய வாழ்க்கையை அளித்திருக்கிறது. கத்தோலிக்க மதம் போதிப்பதுபோல் நீதி ஒரு போதும் நம்முடைய சரீரத்தில் புகுத்தப்படுவதில்லை* (Justification is never infused)*. நீதிமானாக்குதலினால் நமது சரீரம் எந்தவித பௌதீக மாறுதல்களையும் அடைவதில்லை. கிறிஸ்துவைப்போல நாம் பாவமற்றவர்களாகிவிடுவதில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாகக் கர்த்தரால் எண்ணப்படுகிறோம்* (imputed), *அறிவிக்கப்படுகிறோம்* (declared) *என்று மட்டுமே வேதம் விளக்குகிறது. இது நம்மைப் பற்றிய கர்த்தரின் சட்டரீதியான அறிவிப்பு* (a legal, forensic declaration) *மட்டுமே. கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கின்றபோது கர்த்தர் நம்மைத் தொடர்ந்து பாவிகளாகக் கருதாமல் நீதிமான்களாக எண்ணுகிறார் (ரோமர் 4:24).*

## நீதிமானாக்குதலின் காலம்

*நீதிமானாக்குதலைப்பற்றிய இன்னுமொரு உண்மையையும் கவனிப்பது அவசியம். கர்த்தர் குறிப்பிட்ட மக்களைத் தனக்காகத் தெரிந்துகொண்டு, அவர் களைக் கிறிஸ்துவின் சிலுவைப்பலியின் மூலம் பாவத்தில் இருந்து மீட்டு நீதியான வர்கள் என்று அறிவிக்கும் திட்டத்தை அனாதி காலத்தில் தீட்டினார். ஆனால், அந்தத் திட்டம் கிறிஸ்து கல்வாரியில் மரித்தபோதே வரலாற்றில் நிறைவேறியது. கிறிஸ்து தன் மரணத்தினால் சம்பாதித்த இரட்சிப்பை ஒரு மனிதன் தன் வாழ்க்கை யில் கிறிஸ்துவை மனந்திரும்பி விசுவாசிக்கின்றபோதே அடைகிறான். அந்த வேளையிலேயே அவன் நீதிமானாக கர்த்தரால் அறிவிக்கப்பட்டு அவருடைய*

குடும்பத்தில் ஒருவனாக சேர்த்துக்கொள்ளப்படுகிறான். தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரும் இந்த முறையிலேயே நடைமுறை வாழ்க்கையில் நீதிமான்களாகி றார்கள். இந்த சத்தியத்தை நாம் குழப்பமில்லாமல் விளங்கிக் கொள்வது அவசியம். இதனால் நீதிமானாக்குதல் மூன்று முறை (அனாதியிலும், வரலாற்றி லும், பின்பு நம்மிலும்) நிகழ்வதாகப் பொருள் கொள்ளக்கூடாது. கர்த்தரின் ஒரே திட்டம் வரலாற்றில் நிறைவேறி கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்றது. கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு முன்பு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நீதிமானாக்குதலை நடைமுறையில் அனுபவிப்ப தில்லை (1689 அதிகாரம் 11:4). நமக்குரிய சொத்துப்பத்திரம் வங்கியில் இருப்பதால் சொத்தே நம்கையில் இருக்கிறது என்று அர்த்தமல்ல. சொத்து நமக்குத்தான் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கு நாம் உரிமையுடையவர்களாக இருந்தாலும் நடைமுறையில் அதைப் பெற்றுக்கொள்ளும்போதே நாம் அதை அனுபவிக்க முடியும். ஜோன் கில் (John Gill) என்ற பழம்பெரும் பாப்திஸ்து போதகர் நீதிமானாக்குதல் அனாதி காலத்திலேயே நடந்து முடிந்துபோனதொன்றாக (Eternal Justification) தவறாக விளங்கிக் கொண்டார். வேறு சிலர் நீதிமானாக்கு தல் கிறிஸ்து சிலுவையில் இறந்தபோது நடந்ததாகவும் அவ்வேளையிலேயே தெரிந்து கொண்டவர்கள் அதை அடைவதாகவும் விளக்கம் தருகிறார்கள். இதுவும் சரியான விளக்கம் அல்ல. இத்தவறுகளுக்குக் காரணம் இரட்சிப்பின் செயலாக்கத்தை இவர்கள் இறையியல் பூர்வமாக விளங்கிக் கொள்ளாததுதான்.

## நீதிமானாக்கும் விசுவாசமும், இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கும்

நீதிமானாக்குதல், நாம் ஏற்கனவே விளக்கியதுபோல் அனாதி காலத்தில் கர்த்தரால் திட்டமிடப்பட்டு வரலாற்றில் கல்வாரியில் நிறைவேறியபோதும் விசுவாசி "விசுவாசத்தின்" மூலமே நீதிமானாகக் கருதப்படுகிறான். அதற்கு முன் அவன் நீதிமானாக எண்ணப்படுவதில்லை. இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் (Order of Salvation) உள்ள கிருபைகளான திட்ப உறுதியான அழைப்பு, மறுபிறப்பு, மனந்திரும்புதலும் விசுவாசமும், நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல், விடாமுயற்சி, இரட்சிப்பின் நிச்சயம் ஆகிய கிருபைகள் அடுத்தடுத்து வருவதாக வேதத்தில் வாசிக்கிறோம். இந்தப் படிமுறை ஒழுங்கை வேதம் பல பகுதிகளில் விளக்குகிறது (ரோமர் 8:30). நீதிமானாக்கும் விசுவாசம் (Justifying faith) இந்தப் படிமுறை ஒழுங்கில் காணப்படும் கிருபைகளில் இருந்து பிரிக்க முடியாதபடி அவற்றோடு இணைந்து காணப்படுகின்றது. இருந்தாலும் இவற்றில் "விசுவாசமாகிய" கிருபையைத்தவிர வேறு எதனாலும் நாம் நீதிமான் களாக கர்த்தரால் எண்ணப்படுவதில்லை. இரட்சிப்பில் மனந்திரும்புதலும், விசுவாசமும் எப்போதும் இணைந்து செயல்படுகின்றபோதும் விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக அறிக்கையிடப்படுகிறான் என்கிறது வேதம். திட்ப உறுதியான அழைப்பும், மறுபிறப்பும் விசுவாசத்துக்கு முன்பே ஒருவனில் ஏற்பட்டபோதும் விசுவாசம் மட்டுமே அவனை நீதிமானாக்குகிறது. ஒருவன் மறுபிறப்பினால் (Regeneration) நீதிமானாவதில்லை. தன்னுடைய கீழ்ப்படி வினால் நீதிமானாவதில்லை. ஆகவே, கர்த்தர் நியமித்துள்ள விசுவாசமாகிய கருவியைத்தவிர வேறு எந்தக் கிருபையாலும் அவர் ஒருவனை நீதிமானாகக் கருதுவதில்லை. நீதிமானாக்குதலில் கிருபையின் கருவியாகிய "விசுவாசம்" வகிக்கும் பங்கை வேதம் விளக்குகிறபடியே விளங்கிக் கொள்வதும், விசுவாசிக்க வேண்டியதும் அவசியம். இதை நாம் மாற்ற முயன்றாலோ அல்லது நிராகரிக்க முயன்றாலோ கிறிஸ்தவ சுவிசேஷத்தையே அழிக்கிறவர்களாகிவிடுவோம்.

# விசுவாசத்தினால் நீதிமானாகுதல்

## பவுலும், யாக்கோபுவும்

விசுவாசத்தினால் நீதிமானாகுதல் என்ற வேதசத்தியத்தைக் குறித்து பவுலும், .யாக்கோபுவும் முரண்பாடு கொண்டிருப்பதாக பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தையும் யாக்கோபுவின் நிருபத்தையும் வாசிக்கிற சிலர் கருத்துத் தெரிவிக்கிருக்கிறார்கள். அந்த இரு நிருபங்களையும் மேலெழுந்தவாரியாக வாசிக்கும்போது அப்படித் தொன்று கிறது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. சீர்திருத்தவாதியான மார்டின் லூதர்கூட அப்படி எண்ணி யாக்கோபு நிருபம் வேதத்தில் சேர்க்கப்பட் டிருக்கக்கூடாது என்று கருத்துத் தெரிவித்திருந்தார். 16-ம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்க மதத்தின் போதனைகளுக்கெதிராகத் தனியொரு மனிதனாக போர்க்கொடி உயர்த்தி கிரியைகளால் ஒருபோதும் எந்த மனித னும் இரட்சிப்பை அடைய முடியாது என்றும், நீதிமானாக முடியாது என்றும் கர்ஜனை செய்த லூதர் யாக்கோபு நிருபத்தைப் பற்றி இத்தகைய கருத்துக் கொண்டிருந்ததை நம்மால் அனுதாபத்தோடு புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால், பவுலும், யாக்கோபுவும் நீதிமானாகுதலைக்குறித்து முரண் பாடான கருத்துக்களைக் கொண்டிருந்தார்களா? இருவருடைய போதனை களும் ஒன்றுக்கொன்று முரணானவையா? என்று கேட்பது அவசியமாகிறது. இதற்கு பதிலளிக்கும்போது ஆரம்பத்திலேயே நாம் மனதில் வைத்திருக்க வேண்டிய ஒரு உண்மை, வேதம் ஒருபோதும் தனக்கு முரணாகப் பேசாது என்பதுதான். வேதத்தின் எந்தப்பகுதியும் அதன் ஏனையபகுதிகளோடு முரண்பாடுள்ள போதனைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது அடிப் படை வேதவிளக்க விதி. இந்த விதியை மீறினால் நாம் பவுலும், யாக்கோபு வும் ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துக்களை அளித்துள்ளதாகத் தான் முடிவுக்கு வரவேண்டும். அத்தகைய முடிவு வேத ஒற்றுமையைக் குழைப்பதில் போய்முடிவதோடு வேதவிளக்க விதிகளை மீறியதாகவும் அமையும். அப்படியானால் உண்மையில் பவுலும் யாக்கோபுவும் நீதிமா னாகுதலைக் குறித்து போதிப்பதுதான் என்ன என்பதை ஆராய்வது அவசியம்.

**பவுலின் போதனை - விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக முடியும்**

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம் கிறிஸ்தவ சுவிசேஷத்தைப் பற்றியது. ரோமர் 1:16, 17 அந்த சுவிசேஷத்தை விளக்குகிறது. இந்த வசனங்களை இந்த நிருபத்தின் பொருளாகக் (theme) கொள்ளலாம். ரோமாபுரியில் இருந்த சபை பெருமளவில் புறஜாதியிலிருந்து கிறிஸ்துவை விசுவாசித்தவர்களையும், யூதர்களையும் கொண்ட சபையாக இருந்தது. அந்த விசுவாசிகளுக்கு பவுல் தெளிவாக கிறிஸ்தவ சுவிசேஷத்தை இந்நிருபத்தின் மூலம் விளக்குகிறார். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்ற சத்தியத்தை சுவிசேஷம் விளக்குகிறது என்கிறார் பவுல் (1:17). இந்த சத்தியத்தையே முதல் பதினொரு அதிகாரங்களிலும் விளக்கமாகத் தருகிறார் பவுல். இந்த வேதசத்தியத்தை விளக்க ஆரம்பிக்கும் பவுல் முதல் அதிகாரத்தில் தேவ கோபம் சத்தியத்தை

*அநியாயத்தினால் அடக்கி வைக்கிற அனைவர் மேலும் இருப்பதாகக் கூறுகிறார். தேவன் இருக்கிறார் என்று தெரிந்திருந்தும் அவரை நிராகரிக்கின்ற மனித வர்க்கத்தின் தீஞ்செயலை இந்த அதிகாரம் விளக்குகிறது. இரண்டாம், மூன்றாம் அதிகாரங்களில் யூதர்களும், புறஜாதியினரும் நியாயத் தீர்ப்பு நாளில் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் சமமாக நியாயந் தீர்க்கப்படுவார்கள் என்றும், கர்த்தருக்கு முன் அனைவரும் பாவிகளே என்று பவுல் விளக்குகிறார் (2:12-16; 3:23). விருத்தசேதனம் .யூதர்களை ஒருபோதும் நீதிமான்களாக்கவில்லை என்று விளக்கும் பவுல், நான்காம் அதிகாரத்தில் யூதர்கள் தங்களுடைய பெருமகனாகக் கொண்டாடும் ஆபிரகாமும் விசுவாசத்தின் மூலம் மட்டுமே நிதீமானாகினார் என்றும் விளக்குகிறார். இது யூதர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் தருகின்ற சத்தியம். நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பே ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாகினார் என்கிறார் பவுல் (4:3; 4:9, 10; 4:13-22). இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள யூதர்கள் முதலில் சுவிசேஷத்தைக் கேட்பது அவசியம் என்கிறார் பவுல் (9:31, 32; 10:1). விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே நீதி உண்டாகிறதென்றும், அப்படியாக விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டும் நீதி கிடைக்கும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாக இருக்கிறார் என்றும் கூறுகிறார் பவுல் (10:4). அந்த விசுவாசம் சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்பதனால் கிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கிறதென்கிறது பத்தாம் அதிகாரத்தின் 9 முதல் 15 வரையிலான வசனங்கள்.*

*ஆகவே, ரோமர் ஒருவன் எப்படி நீதிமானாவது? என்ற சத்தியத்தை விளக்குகிறது. நீதிமானாவதற்கு விருத்தசேதனத்திலும், நியாயப்பிரமாணத்திலும் அதிதீவிர நம்பிக்கை வைத்திருந்த யூதர்களில் வாதங்களையெல்லாம் தவிடுபொடியாக்கி கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக முடியும் என்பதே ரோமரில் பவுல் அளிக்கும் போதனை. இதை விளங்கிக் கொண்டால் இந்நிருபத்தில் பவுல் தரும் போதனைகளைப் புரிந்து கொள்வது சுலபம். கிரியைகளின் மூலமாக விசுவாசத்தை அடையலாம் என்ற போதனையை அளிக்கும் ரோமன் கத்தோலிக்க மதம் உட்பட உலகிலுள்ள அனைத்து மதங்களின் போதனைகளையும் அம்பலமாக்கும் அற்புதமான நிருபம் பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம்.*

### யாக்கோபுவின் போதனை - விசுவாசத்திற்குரிய நற்கிரியைகளை நீதிமான் தன் வாழ்வில் எப்போதும் செய்வான்

*பவுல், ஒருவன் எப்படி நீதிமானாக முடியும் என்ற போதனையை ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அளிக்க, யாக்கோபு நீதிமான் எந்தவிதமாக வாழவேண்டும் என்பதை விளக்குகிறார். யாக்கோபு நிருபத்தைப் பெற்றுக் கொண்ட விசுவாசிகளுக்கு இது தெரியாமல் இருக்கவில்லை. ஆனால், அவர்கள் மத்தியில் சிலருடைய விசுவாச வாழ்க்கையில் குறைகள் இருந்தன. "இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை பட்சபாதத்தோடு பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக" என்று யாக்கோபு 2:1 ல் வாசிக்கிறோம். இதற்குக் காரணம் ஏற்கனவே விசுவாசிகளாக இருந்தவர்கள் சபையில் பணக்காரர்களை மட்டும் பெரிதுபடுத்தி அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததுதான். இதை யாக்கோபு வன்மையாகக் கண்டிக்கிறார். நீதிமான்களாகிய விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்திற்கு எதிரான செயல்களை வாழ்க்கையில் கடைப் பிடிக்கக்கூடாது என்கிறார் யாக்கோபு. வெறுமனே கர்த்தருடைய வார்த்தை*

களைக் கேட்பவர்களாக மட்டும் இருந்துவிடாமல் அதன்படி வாழ்கிறவர் களாக இருக்க வேண்டும் என்று அறிவுரை செய்கிறார் (1:32).

விசுவாசி என்று தன்னை அழைத்துக் கொள்கிற ஒருவருடைய வாழ்க்கை யில் நற்கிரியைகளைப் பார்க்க முடியாதிருந்தால் அவர் விசுவாசியாக இருக்க முடியாது. நற்கிரியைகளை செய்யக்கூடிய தகுதியையும் வல்லமையையும் விசுவாசம் ஒருவருக்கு அளிக்கிறது. ஆகவே, விசுவாசி நற்கிரியைகளைச் செய்யும் படியாக வேதம் எதிர்பார்க்கிறது. விசுவாசி மட்டுமே பத்துக் கட்டளைகளையும் தன்னுடைய வாழ்க்கையில் பின்பற்றக்கூடியவனாக இருக்கிறான். இதைச் சுட்டிக் காட்டும் யாக்கோபு, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும் அவனுடைய வாழ்க்கையில் கிரியைகளில்லாவிட்டால் அவனுக்குப் பிரயோஜன மென்ன என்கிறார் (3:14). கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும் என்கிறார் (3:17). யாக்கோபுவின் நகைச்சுவை உணர்வை 3:19ல் பார்க்கிறோம். நற்கிரியைகளை வாழ்க்கையில் கொண்டிராமல் சபையில் பாரபட்சம் காட்டிக் கொண்டு தன்னை விசுவாசி என்று சொல்லுகிற மனிதனைப் பார்த்து யாக்கோபு சொல்லுகிறார், பிசாசுகள்கூடத்தான் இயேசுவைத் தேவகுமாரரென்று அறிந்து நடுங்குகின்றன, அதனால் பிசாசுகள் விசுவாசிகளா? என்று நகைச்சுவை யாக கேட்கிறார். ஆபிரகாமை உதாரணம் காட்டும் யாக்கோபு, ஆபிரகாம் தன்னை விசுவாசி என்று மட்டும் அறிவித்துக் கொள்ளாமல் அதைச் செயலில் காட்டினான் என்கிறார். "மனுஷன் விசுவாசத்தினால் மட்டுமல்ல, கிரியை களினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" என்ற வசனத்தை (3:24) அது காணப்படும் பகுதியின் ஏனைய வசனங்களோடு தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். ஆபிரகாமை உதாரணம் காட்டுகிற யாக்கோபு, ஆபிரகாமினுடைய விசுவாசம் மெய்யான விசுவாசம் என்பதை அடையாளம் காட்டக்கூடியதான கிரியைகள் அவனுடைய வாழ்க்கையில் இருந்தன என்று ஏற்கனவே விளக்கியிருக்கிறார். ஆபிரகாம் தன்னுடைய பிள்ளையைப் பலி கொடுக்க முன்வந்தது அவனுடைய விசுவாசத்தைக் காட்டுகிறது. இதைப் பற்றி 24ம் வசனம் விளக்குகிறது. அதாவது, ஆபிரகாமின் விசுவாசம் மெய் விசுவாச மாக, அவன் நற்கிரியைகள் செய்யக்கூடிய விசுவாசமாக இருந்தது என்பது இதன் பொருள். இதைப்போலவே ராகாபும் தன்னுடைய விசுவாசம் மெய்யானது என்பதை துதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பியதன் மூலமாகக் காட்டினாள். ஆகவே, யாக்கோபு ஒருவனை நீதிமானாக்குகிற விசுவாசம் அவன் நற்கிரியைகளை செய்யும்படிச் செய்கிற விசுவாசம் என்பதை விளக்குகிறார்.

இவ்விரு நிருபங்களிலும் பவுலும், யாக்கோபுவும் ஒரே விஷயத்தை வெவ்வேறு கோணங்களில் விளக்குவதைப் புரிந்துகொள்ள வேண்டும். இருவரும் ஒருவருக் கொருவர் முரண்பட்டு விசுவாசத்தைப் பற்றிய முரண்பாடுள்ள போதனைகளை அளிக்கவில்லை. பவுல், ஒருவன் எப்படி நீதிமானாகலாம்? என்பதை விளக்க யாக் கோபுவோ, ஒருவன் நீதிமானாக இருந்தால் அது அவனுடைய வாழ்க்கையில் நற்கிரியைகள் மூலமாக வெளிப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். இரட்சிப்பை ஒருபோதும் எவரும் கிரியைகளின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது. கிரியைகள் ஒருவனை நீதிமானாக்காது. ஆனால், ஒருவன் பெற்றுக்கொண்ட இரட்சிப்பும், நீதியும் அவன் நற்கிரியைகளை செய்யும்படிச் செய்யும். பவுலும் யாக்கோபுவும் நீதிமானாக்குதல் பற்றிய ஒரே நம்பிக்கையையே கொண்டிருந்தனர்.

# பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவம் (3)

பெந்தகொஸ்தே தினம் நாம் அனுதினமும் சபை வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய எழுப்புதலுக்கு உதாரணமாகவோ அல்லது பரிசுத்த ஆவியானவரிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஞானஸ்நானத்துக்கு உதாரணமாகவோ இல்லாமல் வரலாற்றில் ஒரு முறை மாத்திரமே நிகழ்ந்த நிகழ்ச்சியாக இருந்திருக்கிறது என்பதை இதுவரை கடந்த இதழ்களில் விளக்கியிருக்கிறோம். அப்படியாக மீட்பின் வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்து ஒரு தடவை மட்டுமே நிகழ்ந்த பெந்தகொஸ்தே நிகழ்ச்சியின் சில அம்சங்கள் அந்தக் காலத்தில் சபை எல்லா இடங்களிலும் அப்போஸ்தலர்களின் தலைமையில் ஒரேவிதமாக அமைய வேண்டும் என்பதற்காகவும், சமாரியர்கள் சபைக்குள் கொண்டுவரப்படுவதற்காகவும் எருசலேமுக்கு வெளியில் சமாரியர்கள் மத்தியில் அடையாளமாக நிகழ்ந்தன என்பதையும் கடந்த இதழில் பார்த்தோம். அப்போஸ்தலர் 1:8ல் கிறிஸ்து தந்துள்ள வாக்குத் தத்தங்கள் இந்தவிதமாக அப்போஸ்தலர்களின் சுவிசேஷப் பணியின் மூலம் நிறைவேறி வந்தன. இனி கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின்படி புறஜாதியார்கள் சபைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். யூதர்கள் மத்தியிலும், சமாரியர்கள் மத்தியிலும் சுவிசேஷம் போய்ச் சேர்ந்து சபைகள் எழ ஆரம்பித்து விட்டன. யூதர்கள் இதுவரை வெறுத்து வந்த, பழைய ஏற்பாட்டுப் போதனைகளின்படி யூதர்கள் எந்தத் தொடர்பும் வைத்திருக்கக் கூடாத, புறஜாதியினர் மத்தியில் இனி சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும். தேவர் இனத்தைச் சேர்ந்தவனும், பள்ளனும் ஒரே வீட்டில் வாழ முடியுமா? பாகிஸ்தானும், இந்தியாவும் ஒரே நாடாக இருக்க முடியுமா? அது போலத்தான் இதுவரை யூதர்களும், புறஜாதியினரும் இருந்து வந்திருக்கிறார்கள். அதில் பெருமாற்றம் தோன்றப் போகிறது. வரலாற்றில் இதுவரை நடந்திராத அற்புதம் நிகழப் போகிறது. எபேசியர் நிருபத்தில் 2:14ல் பவுல் அப்போஸ்தலன் சொல்லுவது போல், யூதர்கள், புறஜாதியினராகிய “இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்தெரியப் போகிறார்” கிறிஸ்து இயேசு. “இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனிதனாக சிருஷ்டிக்கப்போகிறார்” இயேசு கிறிஸ்து (2:15). இது சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலமாக நடைபெறப்போகிறது. வரலாற்றில் நிகழ்ந்த மேற்கூறிய அற்புதத்தைத்தான் அப்போஸ்தலர் நடபடிகளின் 10–11 அதிகாரங்கள் விளக்குகின்றன. இது வரலாற்றில் ஒரு திருப்புமுனை. அந்தத் திருப்புமுனை எந்தவகையில் நிகழ்ந்தது என்பதை இனி ஆராய்வோம்.

### புறஜாதிக்காரனாகிய கொர்நேலியு

கொர்நேலியு பட்டாளத்தில் முக்கிய பதவி வகித்துவந்த ஒரு மனிதன். ரோம சைனியத்தில் இத்தாலியர்களைக் கொண்ட பிரிவின் நூற்றுக்கு அதிபதியாக செசரியாவில் இருந்தான். கொர்நேலியு ஒரு யூதனல்ல, அவன் புறஜாதியைச் சேர்ந்தவன். இருந்தபோதும் அவன் தன் வாழ்வில் யூதர்கள்

வணங்கும் கர்த்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரை வணங்கி வந்தான். அவனுடைய தேவபக்தி எத்தகையது என்பதை அப்போஸ். 10:2 தெளிவாக விளக்குகின்றது. இந்த வசனத்தில் கூறப்பட்டிருப்பதை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம். தன் வீட்டாரனைவரோடும் விசுவாசமாக கர்த்தரை ஆராதனை செய்து வந்த கொர்நேலியு யொகோவாவை மட்டுமே கேள்விப்பட்டிருந்தான். அவருக்கு பலிகள் செலுத்தி பழைய ஏற்பாட்டு வணக்க முறைகளை முறையாக செய்து வந்தான். அவன் இதுவரையிலும் விருத்த சேதனத்தை அடைந்திருக்கவில்லை (அப்போஸ் 11:3). அவன் எப்பொழுதும் ஜெபம் செய்து வந்தான். யெகோவாவின் மேல் அவனுக்கிருந்த பக்தி மேற் போக்கானதாக இருக்கவில்லை. இருந்தபோதும் அவனுடைய விசுவாசத்தில் குறைபாடுகள் இருந்தன. அவனுக்கு ஆபிரகாமின் விசுவாசம் இதுவரை கிடைக்கவில்லை. அவன் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவர் தரும் இரட்சிப்பைப் பற்றியும் அறிந்திருக்கவில்லை. பழைய ஏற்பாட்டுக்கு வெளியில் அவனுக்கு எதுவும் தெரிய.ாதிருந்தது. இத்தனை தூரம் யெகோவாவை வணங்கி வந்த அவன் புறஜாதியைச் சேர்ந்தவனாகவும் இருந்தான்.

கொர்நேலியுவின் ஆத்மீகத் தாகத்தைக கர்த்தர் கண்டுகொண்டார் என்பதை அப். 10:4 வெளிப்படுத்துகிறது. தேவதூதன் மூலம் கர்த்தரின் செய்தி கொர்நேலியுவுக்கு கொடுக்கப்பட்டது. பேதுருவைப் போய்ப் பார்க் கும்படி கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டார். அதுவரை பேதுரு யார் என்பதுகூட கொர்நேலியுவுக்கு தெரியாதிருந்தது. கொர்நேலியு பேதுருவைப் பார்க்க தன்னுடைய விசுவாசமுள்ள ஆட்களை அனுப்பி வைத்தான்.

## பேதுரு கண்ட தரிசனமும், பேதுரு கொர்நேலியுவைச் சந்தித்தலும்

அதேநேரம், கர்த்தர் யோப்பா பட்டணத்தில் கடலோரத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்த அப்போஸ்தலனான பேதுருவுக்கு ஒரு தரிசனத்தைத் தந்தார். பேதுரு ஞான திருஷ்டி அடைந்தான் என்று அப்போஸ். 10:10ல் வாசிக்கிறோம். ஞான திருஷ்டி அடைந்த பேதுரு ஒரு துப்பட்டி தரையிலிருந்து வருவதாகவும், அதில் பூமியில் காணப்படும் சகலவிதமான ஜீவன்களும் மிருகங்களும், ஊரும் பிராணிகளும், பறவைகளும் இருப்பதைக் கண்டான். அதேவேளை வானத்தில் இருந்து வந்த ஒரு குரல், “பேதுருவே, எழுந்திருந்து அடித்துப் புசி” என்று கூறியது. பேதுரு அதற்குப் பதிலாக, “தீட்டும் அசுத்தமாயிருக்கிற யாதொன்றை யும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். ஆனால், “தேவன் சுத்தமாக் கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே” என்று மறுபடியும் சத்தம் உண்டானது. இவ்வாறாக மூன்று தடவை நடந்தது.

பேதுரு பழைய ஏற்பாட்டு விதிகளின்படி தீட்டானவைகளை எப்போதுமே தொடாதவனாக இருந்தான். அவன் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், புதிய உடன்படிக்கையின்படி ஏற்பட்டுள்ள பெருமாற்றத்தை கர்த்தர் இந்தத் தரிசனத்தின் மூலம் பேதுருவுக்கு உணர்த்தினார். அதாவது, இதுவரை தீண்டத்தகாது என்று எதையெதையெல்லாம் கர்த்தர் விலக்கி வைத்திருந்தாரோ அதையெல்லாம் சுத்தப்படுத்திவிட்டேன் என்ற உண்மை யைக் கர்த்தர் பேதுருவுக்கு உணர்த்தினார். முக்கியமாக தீண்டத்தகாதவர் களாக தள்ளிவைக்கப்பட்டிருந்த புறஜாதி மக்களை தேவ இராஜ்யத்துக்குள் இப்போது சேர்த்துக் கொண்டிருக்கிறேன் என்ற உண்மையை கர்த்தர் இந்தத் தரிசனத்தின் மூலம் பேதுருவுக்கு உணர்த்தினார். ஆனால், இது பேதுருவுக்கு

உடனடியாகப் புலப்படவில்லை. இதைப் பற்றி பேதுரு ஆழமாக சிந்தித்துக் கொண்டிருந்தபோது கொர்நேலியு அனுப்பிய மனிதர்கள் பேதுருவின் வீட்டை அடைந்தார்கள். அதேவேளை பரிசுத்த ஆவியானவர் பேதுருவிடம், நானே இவர்களை உன்னிடம் வரும்படிச் செய்தேன். ஆகவே, அவர்களை நீ வரவேற்று உபசரி என்று கூறினார். பேதுரு, அவர்களைச் சந்தித்தபோது அவர்கள் கொர்நேலியுவுக்கு நடந்த நிகழ்ச்சிகளை பேதுருவுக்கு விளக்கிக் கூறினார்கள். பேதுரு அவர்களை உள்ளே அழைத்து உபசரித்தபின் மறுநாளில் கொர்நேலியுவை சந்திக்க அவர்களுடன் புறப்பட்டுச் சென்றான்.

பேதுருவும், கொர்நேலியுவின் மனிதர்களும் செசரியா பட்டணத்துக்குள் நுழைந்தபோது கொர்நேலியு தன் உறவினர்கள், நண்பர்கள் சகிதம் பேதுருவை வரவேற்கத் தயாராக இருந்தான். இது வரலாற்றிலேயே இதுவரை நிகழ்ந்திராத சம்பவம். இரண்டு சமுதாயங்கள் கூடி வந்த ஒரு அற்புத நிகழ்ச்சி. புதிய உடன்படிக்கை மூலம் கர்த்தர் ஏற்படுத்திய சமூக சீர்திருத்தம். இதை அப்போஸ். 10:28-ல் பேதுரு விளக்குவதைக் காணலாம். அந்நிய ஜாதி யாருடன் கலந்துறவாடுவது யூதர்களுக்கு விலக்கி வைக்கப்பட்டிருந்தது என்றும், அந்தத் தடை முற்றாக நீக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கர்த்தரே தனக்குக் காட்டிவிட்டதாகவும் பேதுரு கூறினான். அதன்பின் கொர்நேலியு தனக்கு நிகழ்ந்த சம்பவங்களை பேதுருவுக்கு விளக்கிக்கூறினான் (30-33). அதன்பின் பேதுரு கொர்நேலியுவுக்கும் அவனோடு கூடி இருந்தவர்களுக்கும் சுவிசேஷத்தை விளக்கிப் போதித்தான் (34-43).

## புறஜாதியினர் மேல் பரிசுத்த ஆவியின் வருகை

இவ்வாறாக பேதுரு சுவிசேஷத்தை விளக்கிப் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போதே பரிசுத்த ஆவியானவர் வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் வந்து இறங்கினார் என்று அப்போஸ். 10:44-ம் வசனத்தில் வாசிக்கிறோம். அங்கிருந்த யூத விசுவாசிகள் இதைப்பார்த்து பெரும் ஆச்சரியமடைந்தார்கள். அவர்கள் ஆச்சரியமடைந்ததற்கான காரணத்தை 45, 46 வது வசனங்கள் விளக்குகின்றன. பரிசுத்த ஆவியின் வருகையைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்படவில்லை. பரிசுத்த ஆவியானவர் புறஜாதியினர் மேல் பொழிந் தருளப்பட்டதைப் பார்த்தே அவர்கள் பிரமித்து நின்றார்கள். அதற்குக் காரணம் யூதர்கள் புறஜாதியினரோடு அதுவரை சேராதிருந்ததுதான். விலக்கி வைக்கப்பட்டிருந்த புறஜாதியினர் மேல் பரிசுத்த ஆவியானவர் தங்களுக்கு நடந்தது போலவே வந்திறங்கியது அவர்களை பிரமிப்படையச் செய்தது. தங்கள் கண்முன் நடப்பதெல்லாம் கனவோ என்றுகூட அவர்கள் எண்ணியிருப்பார்கள். எந்தப் புறஜாதியினரோடு தாம் சேரக்கூடாது என்று கர்த்தர் கூறியிருந்தாரோ அவர்கள் மேலும் பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கியது அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. அது மட்டுமல்லாமல் பரிசுத்த ஆவியானவர் வந்து இறங்கியதும் புறஜாதியினர் அந்நிய பாஷையில் பேசி, தேவனைப் புகழ்ந்தார்கள். அதைப் பார்த்த பேதுரு, நம்மைப்போல பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்காமல் இருக்கலாமா? என்று கூறி அவர்களுக்கு ஞானஸ்நானத்தைக் கொடுத்தான் (45-48).

## இந்தப் பகுதி தரும் போதனை

இந்தப் பகுதியில் கொர்நேலியு முழுமனத்தோடு யெகோவாவை விசுவாசித்த

போதும் இயேசு கிறிஸ்துவை அறியாதிருந்தான் என்று அறிந்து கொண்டோம். கிறிஸ்துவை விசுவாசிக்காமல் ஒருவரும் பரலோகம் போகமுடியாது என்பது புதிய உடன்படிக்கையின் விதிமுறை. பெந்தகொஸ்தே நாளில் பெருந் தொகையான யூதர்கள் அந்த செய்தியைக் கேட்டு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். யூதர் மத்தியில் சபை நிறுவப்பட்டது (அப்போஸ். 2). அதே போல் சமாரியர்கள் அதே செய்தியைக் கேட்டு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் (அப்போஸ். 8). அவர்கள் மத்தியிலும் சபை நிறுவப்பட்டது. இனிமீதமிருந்த புறஜாதியினர் அந்த செய்தியைக் கேட்டு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். இது கொர்நேலியுவுக்கு சுவிசேஷம் போய் அவன் கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் நிறைவேறியது. இந்த மூன்று இடங்களிலும் அப்போஸ்தலர் 1:8ல் கிறிஸ்து அளித்த வாக்குறுதியின் நிறைவேறுதலாக பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார். பரலோக இராஜ்யத்துக்குள் சகல இனத்தவர்களும் கொண்டுவரப்படுவதற்காக நிகழ்ந்ததே பரிசுத்த ஆவியின் வருகையும், அவருடைய வருகையோடு இணைந்த ஏனைய நடவடிக்கைகளும். பரிசுத்த ஆவியின் வருகையைத் தவிர இந்த மூன்று இடங்களிலும் பெந்தகொஸ்தே தினத்தில் நடந்த அனைத்தும் நிகழவில்லை என்பதை உணர்வது அவசியம். அத்தோடு இந்த மூன்று இடங்களிலும் அப்போஸ்தலர்கள் நடந்த நிகழ்ச்சிகளுக்கு சாட்சிகளாக இருந்திருக்கிறார்கள். இதெல்லாம் அப்போஸ்தர் 1:8ல் கிறிஸ்து அளித்த வாக்குறுதியின் நிறைவேற்றத்தைத் தெளிவாக விளக்குகின்றன.

## யோவானின் சீடர்கள்

கடைசியாக நாம் ஆராயவேண்டியது அப்போஸ்தலர் 19:1-6 வரையிலுமுள்ள வசனங்களில் நாம் வாசிக்கும் யோவான் ஸ்நானனின் சீடர்களுடைய அனுபவத்தைப் பற்றியே. இவர்கள் யோவான் ஸ்நானனின் செய்தியைக் கேட்டு ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு பரிசுத்த ஆவி இதுவரை கிடைத்திருக்கவில்லை. பெந்தகொஸ்தேகாரர்கள் இதை விளக்கும் போது "இந்த சீடர்கள் விசுவாசிகள், ஆனால், இதுவரை இவர்களுக்கு ஆவியின் அபிஷேகம் கிடைத்திருக்கவில்லை. அதற்காகவே ஆவியின் அபிஷேகம் அவர்களுக்குத் தரப்பட்டது" என்று கூறுவார்கள். ஆனால், அது முழுத்தவறான விளக்கம். மேலெழுந்தவாரியாக இந்தப்பகுதியை வாசிக்கும்போது அப்படித்தான் தெரியும். ஆனால், இந்தப்பகுதியை கவனத்தோடு ஆராய்ந்து பார்த்தால் பெந்தகொஸ்தேகாரர்களின் விளக்கத்தின் தவறை உணரலாம்.

பவுல் இவர்களை எபேசியாவில் சந்தித்தபோது இவர்கள் விநோதமான சீடர்களாக இருப்பதை அறிந்துகொண்டார். இவர்களுக்கும் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும் பெரும் வித்தியாசமிருந்தது. இவர்கள்மேல் பரிசுத்த ஆவி வராதிருந்தது மட்டுமல்ல இவர்களுக்கு பரிசுத்த ஆவியைப் பற்றியே இதுவரை தெரியாதிருந்தது. பெந்தகொஸ்தே நிகழ்ச்சிகளும் அவர்களுடைய காதுகளை அதுவரை எட்டியிருக்கவில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி தங்களுடைய வாழ்நாளில் அதுவரையிலும் கேள்விப்பட்டிருக்கவேயில்லை. பரிசுத்த ஆவியானவர் இல்லாமல் ஒருவன் விசுவாசியாக முடியாது. அதுமட்டு மல்லாமல் அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கவில்லை. பவுல் அவர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி விளக்கிக் கூறி சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டியிருந்தது. இதிலிருந்து இவர்கள் யோவானின் செய்தியைக் கேட்டு யெகோவாவை விசுவாசித்து தங்கள் தவறை உணர்ந்து மனம் மாறி இருந்தார்களே

*தவிர கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் அறிந்திருக்கவில்லை என்பதை அறிந்து கொள்கிறோம். இவர்கள் யோவானுக்கு மட்டுமே விசுவாசமாத இருந்த சீடர்கள். பவுல் இவர்களுக்கு பொறுமையாக கிறிஸ்தவ விசுவாசத்தைப் பற்றி விளக்கிக் கூற வேண்டியிருந்தது. இவர்கள் மனந்திரும்புதலுக்குரிய யோவானின் ஞானஸ்நானத்தை மட்டுமே தங்கள் வாழ்வில் அறிந்திருந்தார்கள். பவுல் விளக்கிக் கூறிய சுவிசேஷ செய்தியைக் கேட்டு இவர்கள் கிறிஸ்து இயேசுவை விசுவாசித் தார்கள். பவுல் இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அப்போதே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வந்திறங்கினார் என்று அப்போஸ்தலர் நடபடிகள் 19-ல் வாசிக்கிறோம். அதுவும் அப்போஸ்தலனான பவுல் கைவைத்து ஜெபித்த பின்பே பரிசுத்த ஆவியானவர் வந்திறங்கினார்.*

*யோவானின் இந்த சீடர்களும் யூதர்களைப்போலவும், சமாரியர்களைப் போலவும், புறஜாதியினரைப்போலவும் தேவனுடைய திருச்சபையில் சேர்க்கப்படவேண்டுமென்பதற்காகவே பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் அப்போஸ்தலர் 1:8-ன்படி வந்திறங்கினார். இந்த இடத்திலும் இதற்கு ஒரு அப்போஸ்தலன் சாட்சியாக இருக்க வேண்டியிருந்தது. இந்த சீடர்கள் பவுல் மூலமாக சுவிசேஷத்தைக் கேட்காதிருந்திருந்தால் தொடர்ந்தும் யோவானுக்கு மட்டுமே சீடர்களாக இருந்திருப்பார்கள். அதனால் சுவிசேஷம் பற்றியும், திருச்சபை பற்றியும் குழப்பமேற்பட்டிருக்கும். இந்தச் சீடர்கள் சபைக்குள் இணைத்துக் கொள்ளப்பட்டதன் மூலம் யோவானின் சீடர்கள் அனைவரும் சுவிசேஷத்தைக் கேட்டு கிறிஸ்துவை விசுவாசிக்கும் வசதியேற்பட்டது.*

*இந்த முறையில் பெந்தகொஸ்தே நாளில் வந்ததுபோல் வரலாற்றில் நான்கு முறைகள் மட்டுமே பரிசுத்த ஆவியானவர் வந்ததாக அப்போஸ்தல நடபடி களில் வாசிக்கிறோம். அவருடைய வருகைபற்றி அப்போஸ்தல நடபடிகளில் வேறு எங்கும் நாம் வாசிக்க முடியாது. இப்படியான ஆவியானவரின் வருகை திருச்சபை நிறுவப்படுவதற்காக நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சி. கர்த்தரின் மீட்பின் திட்டப்படி கிறிஸ்துவின் சிலுவைத் தியாகங்கள் நிறைவேறி, சுவிசேஷம் சகல இனத்தவர் மத்தியிலும் அறிவிக்கப்பட்டு, அவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் வழிவகை இந்த வகையில் ஏற்படுத்தப்பட்டிருந்தது.*

*அத்தோடு பரிசுத்த ஆவியை இந்த நான்கு இடங்களிலும் பெற்றுக் கொண்ட வர்கள் ஏற்கனவே விசுவாசிகளாக இருந்தார்கள். யோவானின் சீடர்களும் விசுவாசிகளாகி ஞானஸ்நானம் பெற்றபின்பே ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார். இப்படியாக ஆவியானவர் அவர்கள் மேல் வந்தது, அவர்களுக்கு இரண்டாம் ஆசீர்வாதத்தை அதாவது அபிஷேகத்தைத் தருவதற்காக என்ற பெந்தகொஸ்தே விளக்கம் மிகத் தவறானது. ஏனெனில் அப்போஸ்தல நடபடி களில் இந்த நான்கு இடங்களைத் தவிர வேறெங்கும் இந்தவகையில் ஆவியான வரின் வருகை நிகழவில்லை. அப்படி நிகழ்ந்ததாக வேதத்தில் இருந்து பெந்த கொஸ்தேகாரர்களால் ஆதாரம் காட்ட முடியாது. இதிலிருந்து ஆவியானவரின் மூலம் அபிஷேகம் பெறுவது, அதற்கு அடையாளமாக அந்நியபாஷை பேசுவது என்பது பெந்தகொஸ்தேகாரர்களின் செயற்கையான வேதத்தில் காணப்படாத ஒரு போதனை என்பதை விளங்கிக் கொள்வது அவசியம். பெந்தகொஸ்தே தின நிகழ்ச்சிகள் அப்படியொரு போதனையை அளிக்கவில்லை. (இந்த இதழுடன் இந்த ஆக்கம் நிறைவு பெறுகிறது.)*

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

**கேள்வி**: 85 எந்த மனிதனும் கர்த்தருடைய கட்டளைகளைப் பூரணமாகக் கைக்கொள்ளக்கூடியவனா?

**பதில்**: வீழ்ச்சிக்குப்பிறகு எந்த மனிதனும் கர்த்தருடைய கட்டளைகளை இவ்வுலக வாழ்க்கையில் பூரணமாக கைக்கொள்ள முடியாதவனாக இருக்கிறான். ஆனால், அனுதினமும் தனது சிந்தனைகளாலும், வார்த்தைகளாலும், செயல்களாலும் அவற்றை மீறுகிறான்.

(பிரசங்கி 7:20; 1 யோவான் 1:8; கலாத்தியர் 5:17; ஆதியாகமம் 6:5; 8:21; ரோமர் 3:9-20; யாக்கோபு 3:2-12)

**கேள்வி**: 86 நியாயப்பிரமாணத்திற்கெதிரான எல்லா மீறுதல்களுமே கொடியவைதானா?

**பதில்**: சில பாவங்கள் அவற்றின் தன்மையினாலும், அவற்றால் ஏற்படுகின்ற சில பாதகங்களினாலும் ஏனைய பாவங்களைவிட கர்த்தருடைய பார்வையிலே மிகவும் கொடியவையாய் இருக்கின்றன.

(எசேக்கியல் 8:6, 13, 15; யோவான் 19:11)

**கேள்வி**: 87 ஒவ்வொரு பாவமும் எதைத் பெறத்தகுதியானது?

**பதில்**: ஒவ்வொரு பாவமும் இவ்வுலகத்திலும், இனிவரப்போகும் உலகத்திலும் கர்த்தருடைய கோபத்தையும், சாபத்தையும் பெறத்தகுதியானது.

(எபேசியர் 5:6; கலாத்தியர் 3:10; புலம்பல் 3:39; மத்தேயு 25:41)

**விளக்கவுரை:** *கிறிஸ்தவத்திற்கும் ஏனைய எல்லா மதங்களுக்கும் இடையில் உள்ள முக்கிய வேறுபாடு கர்த்தர் மனிதனை இரட்சிக்கிறாரா? அல்லது மனிதன் தன்னுடைய சுயமுயற்சியால் இரட்சிப்பை அடைகிறானா? என்ற கேள்விக்கான பதிலிலேயே தங்கியிருக்கிறது. கத்தோலிக்க மதம் உட்பட உலகில் உள்ள சகல மதங்களும் மனிதன் தன்னுடைய கிரியைகளின் மூலம் இரட்சிப்பை அடைவதாகப் போதிக்கின்றன. கிறிஸ்தவத்தின் பெயரில் தவறான போதனையளிப்பவர்களும் இதையே சொல்லுகின்றனர். ஆனால், வேதபூர்வமான கிறிஸ்தவம் கர்த்தர் மட்டுமே மனிதனை இரட்சிக்கிறவராக இருக்கிறார் என்று விளக்குகின்றது. இரட்சிப்பில் அவருக்கு மட்டுமே எல்லா மகிமையும் சேர வேண்டும் என்பது அதன் போதனை. அதுமட்டுமல்லாமல் வேதபூர்வமான கிறிஸ்தவம், மனிதன் தன்னுடைய ஆத்மீக வாழ்க்கையின் ஆரம்பத்திற்கு மட்டுமல்லாமல், அதன் ஆரம்பமுதல் முடிவுவரையும் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் கர்த்தரிலேயே தங்கியிருக்கிறான் என்று விளக்குகிறது. "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 15:5).*

*மேலே நாம் பார்க்கின்ற வினாவிடைகளில் இருந்து கர்த்தரை விசுவாசிக்கின்ற ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் சிந்தனைகளாலும், வார்த்தைகளாலும், செயல்களாலும் பாவம் செய்கிறான் என்று பார்க்கிறோம். இந்த மனிதன் விசுவாசியான பின்பும் இந்தவிதத்தில் பாவங்களைச் செய்கிறான்.*

இந்த விசுவாசிக்கு பாவத்தை பற்றி நன்றாகத் தெரியும். அவன் பாவம் செய்வதை ஒருபோதும் விரும்பவில்லை. அத்தோடு, அவன் பாவம் செய்யாமல் இருக்க தன் வாழ்க்கையில் சகல முயற்சிகளையும் எடுக்கிறான். அதேவேளை, பவுல் சொல்லுவதுபோல், “நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் நான் விரும்பாத தீமையையே செய்கிறேன்” என்று அவன் தன் வாழ்நாளெல்லாம் தொடர்ந்து அறிக்கையிடுகிறான். இந்தப் போராட்டத்தை விசுவாசத்தில் வளர்ந்த, முதிர்ந்த விசுவாசிகளிலும் நாம் பார்க்கலாம். இதனால்தான் இயேசுவைத் தவிர வாழக்கையில் பூரணமானவர்களாக, பாவம் செய்யாதவர்களாக இருந்த வேறு எவரைப் பற்றியும் நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. அதனால்தான் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய பலவீனத்தைப் பற்றிய அறிவையும், கர்த்தரில் தான் எப்போதும் தங்கியிருக்க வேண்டும் என்ற உணர்வையும் கொண்டிருக்க வேண்டும்.

எந்தவொரு மனிதனும் பாவமில்லாத பூரணமான வாழ்க்கையை இந்த உலகத்தில் வாழ முடியாது என்ற சத்தியத்தின் அடிப்படையில் இரண்டு தவறான போதனைகளை நாம் ஆராய்வது அவசியமாகிறது.

*(1)* **பாவமற்ற பூரணத்துவம்** (Sinless Perfection)

இந்தப் போதனை விசுவாசி இந்த உலகத்தில் தன்னுடைய வாழ்க்கையில் பாவமற்ற பூரணத்துவத்தை அடைய முடியும் என்று போதிக்கின்றது. உதாரணமாக ரோமன் கத்தோலிக்க மதத்தில் சிலரை “புனிதர்களாக” (Saints) அறிவிக்கிறார்கள். இப்படிப் புனிதர்களாக அறிவிக்கப்படுகிறவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்தத்தை அடைந்துவிட்டதாகவும் அதற்கும் ஒருபடி மேலே போய் கர்த்தர் எதிர்பார்த்ததையும்விட அதிகமாக தங்கள் வாழ்க்கையில் செய்திருப்பதாகவும் ரோமன் கத்தோலீக்க மதம் சொல்லுகிறது. அவர்கள் மேலதிகமாக செய்திருக்கும் “நல்லவைகள்” ரோமன் கத்தோலிக்க திருச்சபையினால் சேர்த்துவைக்கப்படுகின்றன. இந்த “மேலதிகமானவற்றை” the works of Supererogation என்பார்கள். ரோமன் கத்தோலிக்க மதத்தை சேர்ந்தவர்கள் அந்த மதத்திற்கு ஏதாவது கிரியைகளைச் செய்து அந்த மதம் சேகரித்து வைத்திருக்கும் புனிதர்களின் புண்ணியங்களில் இருந்து ஒரு பகுதியை பெற்று தங்கள் குறைகளைப் (பாவத்தைப்) போக்கிக் கொள்ளலாம்.

இது தவிர சில புரட்டஸ்தாந்து மதப்பிரிவுகளிலும், பாரம்பரிய சபைப் பிரிவுகளைச் சேராத சில சபைகள் மத்தியிலும் இன்னுமொருவிதமான தவறான போதனை காணப்படுகின்றது. ஒரு விசுவாசி கர்த்தரிடம் பூரணமாக சரணடைந்தால் கர்த்தர் வெற்றியைத் தருவார் என்கிறது இந்தப் போதனை. இதுவே மேலான வாழக்கையின் இரகசியம் என்கிறது இந்தப் போதனை. இப்போதனையின்படி, சில கிறிஸ்தவர்கள் வெற்றிகரமான விசுவாச வாழ்க்கைக்கான இரகசியத்தைப் பயின்று பாவத்திலிருந்து பூரண விடுதலை அடைகிறார்கள். இந்தப் போதனை Higher life teaching, let God and let go doctrine என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்தில் நடக்கும் கெசிக் கொன்வென்சனில் (Keswick convention) இதுவே போதிக்கப்படுகின்றது. இந்தியாவில் சில சகோதரத்துவ பிரிவுகளின் மத்தியில் இந்தப் போதனை காணப்படுகின்றது. பெந்தகொஸ்தே சபைகள் மத்தியிலும் இப்போதனைகளைப் பார்க்கலாம். இந்தப்போதனைக்கு எதிராக வேதம், இந்த உலகத்தில் பாவம் செய்யாத மனிதன் ஒருவனுமேயில்லை என்று


சொல்லுகிறது (பிரசங்கி 7:20). யோவான் சொல்லுகிறார், "நாம் பாவம் செய்யவில்லை என்போமானால், நாம் அவரை பொய்யராக்குகிறவர்களா யிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது (1 யோவான் 1:10). ஆகவே, வேதபோதனையின்படி பாவமே இல்லாது பூரணமாக ஒரு மனித னும் இந்த உலகத்தில் இருக்க முடியாது. பூரணத்துவத்தை இந்த உலகத்தில் அடையளாம் என்ற போலிப் போதனைக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

(2) **அன்டிநோமியனிசம்** (Antinomianism)

நாம் மேலே பார்த்த போலிப்போதனையைப் போலவே ஆபத்தான இன்னு மொரு போதனை "அன்டிநோமியனிசம்" என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. "நியாயப்பிரமாணத்திற்கு எதிரானது" என்று இதற்கு அர்த்தம் (Anti - எதிரான. Nomian - நியாயப்பிரமாணம்). இந்தப் போதனையை ஏற்கனவே சந்தித்திருக் கிறோம். இது, நியாப்பிரணாணத்தை ஒருவராலும் பூரணமாகக் கடைப்பிடிக்க முடியாததாலும், கிறிஸ்து அதனைத் தன் வாழ்க்கையில் நமக்காக பூரணமாகக் கடைப்பிடித்து நிறைவேற்றியிருப்பதாலும் நியாயப் பிரமாணத்திற்கு விசுவாசிகள் கட்டுப்பட்டவர்களல்ல என்று போதிக்கிறது. அதாவது, பத்துக்கட்டளைகளுக்கு விசுவாசிகள் இன்று கட்டுப்பட்டு நடக்க வேண்டிய அவசியமில்லை என்கிறது அன்டிநோமியனிசம். இது கிறிஸ்தவ வாழ்க்கையை அலங்கோலத்தில் கொண்டுபோய் முடிக்கும் மோசமான போதனை.

சில அன்டிநோமியனிச பக்தர்கள், விசுவாசி இரண்டு பேராக (இரண்டு நபர்கள்) இருப்பதாகப் போதிக்கிறார்கள். அதாவது அவனில் " ஆதாமின் பழைய மனிதனும்" "கிறிஸ்துவில் புது மனிதனும்" இருப்பதாக விளக்குகிறார் கள். இந்தப் போதனையின்படி விசுவாசி பாவம் செய்கிறபோது அவனில் இருக்கும் "ஆதாமின் பழைய மனிதனே" அந்தப் பாவத்தைச் செய்கிறான். கிறிஸ்துவின் புதிய மனிதனோ, "நான் என்ன செய்யட்டும், என்னுள் இருக் கும் பழைய மனிதன்தான் இந்தப்பாவத்தைச் செய்கிறான்" என்று சொல்லு வான். இப்படியொரு போதனை வேதத்தில் இருக்கிறதா? என்று ஆராய்ந்து பார்த்தால், வேதம் சொல்லுகிறது, விசுவாசி, இப்போது கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய மனிதன் என்றும், அவன் கிறிஸ்துவை விசுவாசித்த அன்றே தனது பழைய மனிதனை கிரியைகளோடு முற்றாக ஒழித்துவிட்டான் என்றும் விளக்குகிறது (கொலோசெயர் 3:9). அதாவது, கிறிஸ்துவில் புதிய மனிதனாக இருக்கும் விசுவாசி இனிப் பழைய மனிதனாக இருந்து ஆதாமின் பழைய மனிதனுக்குரிய சிந்தனை, செயல்களோடு வாழமாட்டான். அவனில் இப்போது கிறிஸ்து ஜீவிக்கிறார், ஆள்கிறார். இருந்தாலும், நம்மில் பாவத்தின் எச்சங்கள் இன்னும் இருக்கதான் செய்கிறது. அது நம்மைத் தொடர்ந்து இந்த உலகத்தில் பாதிக்கத்தான் செய்யும். அதற்காக நம்மில் இரண்டு நபர்கள் (Two-personalities) ஒரே நேரத்தில் இருப்பதாக விளக்குவது பெருந்தவறு. அப்படியொரு போதனை வேதத்தில் இல்லை. எனவே, விசுவாசியை பாவம் ஆளமுடியாது. அவன் பாவத்தால் ஆளப்படவும் மாட்டான். அதேநேரம், அவன் பாவத்தை செய்துவிட்டால், அதற்குத் தான் பொறுப்பாளியல்ல என்று சொல்லி பழைய மனிதனில் பலியைப் போடவும் மாட்டான்.

உண்மையான விசுவாசி இந்த இரண்டு தப்பான போதனைகளுக்கும் இடம் கொடுக்காமல் வேதம் போதிக்கிறபடி, (1) முதலாவதாக, தொடர்ந்து தன் வாழ்க்கையில் கர்த்தருக்கு விசுவாசத்தோடு கீழ்ப்படிகிறவனாக இருப்பான்.




*(2) இரண்டாவதாக, தொடர்ந்தும் தன்னுடைய பலவீனங்களையும், பாவங்களையும் கர்த்தருக்கு முன் அறிக்கையிடுகிறவனாக இருப்பான். அவன் பரிசுத்தமாக வாழ ஆசைப்படுகிறவனாக இருக்கிறபடியால் “கர்த்தருடைய கட்டளைகளை நேசிக்கிறேன்” என்று சொல்லுவான். கர்த்தருடைய கட்டளைகளில் எதுவும் தனக்கு மனவருத்தத்தை அளிப்பதாக அவன் எண்ணமாட்டான் (ரோமர் 7:22; 1 யோவான் 5:3). மரணத்திலிருந்து விடுதலையாகி ஜிவிக்கிறபடியால் தன்னில் பூரணத்துவத்தை அடைவது அவனுடைய நோக்கமாக இருக்கும். ஆனால், அதைத் தான் இன்னும் அடையவில்லை என்பதையும், அதை இவ்வுலக வாழ்வில் ஒருபோதும் அடைய முடியாதபோதும் அதை அடைவதே தன் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதையும் அவன் எப்போதும் மனதில் வைத்திருப்பான். தன்னுடைய நீதிக்காக அவன் எப்போதும் கர்த்தருக்கு முன் கிறிஸ்துவிலேயே தங்கியிருப்பான். இதுவரை நாம் பார்த்தவற்றை இன்னொருவிதமாக விளக்குவதானால், தன்னுடைய வாழ்க்கையில் எந்தளவுக்கு பரிசுத்தம் அதிகரிக்கிறதோ அந்தளவுக்கு விசுவாசி அடிக்கடி மனந்திருந்தி தன்னுடைய சகல நம்பிக்கைகளுக்கும் கிறிஸ்துவிலேயே தங்கியிருந்து அவரை மேலும் மேலும் விசுவாசிப்பான்.*

*விசுவாசி இந்த முறையில் வாழ்வதற்கான காரணத்தை நாம் விளங்கிக் கொள்வது அவசியம். கிறிஸ்து நிறைவேற்றிய நியாயப்பிரமாணத்தில் அறிவு அதிகரிக்க அதிகரிக்க கர்த்தர் தன்னில் எதிர்பார்க்கும் பரிசுத்தம் எத்தனை பெரியது, மகா விசாலமானது என்பதை விசுவாசி உணர்வான். பரிசுத்தத்தில் வளர வளர அவனுள் இருக்கும் பலவீனமும், பாவமும் அவனுக்கு கண்ணாடியில் தெரிவதுபோல் மேலும் தெளிவாகத் தெரியவரும். இதற்குக் காரணம் மெய்யான விசுவாசி கர்த்தருடைய பரிபூரணப் பரிசுத்த நியமத்தின் அடிப்படையில் தன்னை எப்போதும் ஆராய்ந்து பார்த்துக்கொள்ளுவதுதான். அதனாலேயே அவனால் கிறிஸ்துவுக்குள்ளான கீழ்ப்படிதலில் வளரமுடிகிறதோடு, தொடர்ந்தும் மனந்திரும்பி கிறிஸ்துவில் தன்னுடைய ஆத்மவிருத்திக்காக தங்கியிருக்கவும் முடிகிறது.*

# ஆதி சபையின் அற்புத வரங்கள்

எழுதியவர்:

**ஆர். பாலா**

(ஆசிரியர்: திருமறைத்தீபம்)

## 1 கொரிந்தியர் 12-14 அதிகாரங்களுக்கான தெளிவான விளக்கவுரை

**பின் இணைப்பு:**

1. அப்போஸ்தல வரங்கள்
2. பழைய, புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள்
3. சுவிசேஷ ஊழியத்துக்கு அந்நியபாஷை அவசியமா?
4. விசுவாச ஜெபம்

100க்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்நூல் செப்டம்பர் 2004ல் தமிழ் நாட்டில் வெளிவரவிருக்கிறது. மேலும் விபரங்களுக்கு எழுத வேண்டிய முகவரி:

**சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்**
**22 டி. பி. கே மெயின் வீதி, பைகாரா, மதுரை 04**



# எண்ணங்கள்!

✸ உங்களுடைய அரிய படைப்புகளுக்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன். திருமறைத்தீபம் பத்திரிகையை நண்பர் ஒருவரிடமிருந்து பெற்று வாசித்து உள்ளத்தில் எழுப்புதல் அடைந்தேன். சத்தியத்தை அநியாயத்தின் மூலம் அடக்கி வைக்கிற இந்த கடைசி நாட்களில் வேத சத்தியத்தை உங்கள் மூலம் தேவன் வெளிப்படுத்துவதற்காக தேவனுக்கு மகிமை செலுத்துகிறேன். – ***பாஸ்டர் சவுந்தரராஜன், தமிழ்நாடு***

✸ திருமறைத்தீபத்தை தொடர்ந்து வாசித்து வருகிறேன். தங்களுடைய கட்டுரைகளைப் படிப்பதன் மூலம் கிறிஸ்தவ நல்வாழ்வு வாழவும், கிறிஸ்துவின் உபதேசங்களை மீறிப் போலித்தனமாக நடக்கிறவர்களையும், வஞ்சக அந்திக்கிறிஸ்துகளையும் பகுத்தறியவும் உதவியாக இருக்கிறது. அனேகருக்கு உங்கள் செய்திகள் எச்சரிக்கையாயிருக்கின்றன. எங்கள் சபை விசுவாசிகளின் வாழ்க்கைக்கும் உங்கள் போதனைகள் பயனுள்ளவையாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கின்றன. – ***C. J. ஜோர்ஸ் மனாசா, தமிழ்நாடு***

# பிரசங்கத்தின் "அறிமுகம்"

கடந்த இதழில் பிரசங்கத்தின் இறுதியில் அந்தப் பிரசங்கத்தின் அடிப்படையில் தரப்பட வேண்டிய "பயன்பாடு" களைப் பற்றி ஆராய்ந்தோம். இனிப் பிரசங்கத்தின் அறிமுகம் எப்படி அமைய வேண்டும் என்பதை ஆராய்வது அவசியம். பிரசங்கத்தின் எல்லா அம்சங்களுமே முக்கியமானவை. பிரசங்கத்தின் ஏனைய பகுதிகள் நன்றாய் அமைந்து அதன் அறிமுகம் சரிவர அமையாவிட்டால் அது பிரசங்கத்தைப் பாதித்துவிடும். பிரசங்கத்தின் அறிமுகம் வரப்போகும் செய்தியின் ஏனைய பகுதிகள் எப்படி அமையப் போகின்றன என்பதை விளக்குவதாக இருக்கும். ஆகவே, பிரசங்கம் பலனுள்ளதாக அமைய அதன் அறிமுகம் நன்றாக இருப்பது அவசியமாகின்றது. உதாரணத்திற்கு ஒரு நவீன ஓட்டலுக்கு சாப்பிடப் போனால் நாம் ஆர்டர் செய்யும் பிரதான உணவு வருவதற்கு முன்பாக சிற்றுணவாக சிலவற்றை சாப்பிடத் தருவார்கள் (Entree). அது வரப்போகும் உணவை உண்பதற்கு நம்மைத் தயார் செய்வதாக இருக்கும். அந்த ஆரம்பச் சிற்றுணவே பிரதான சாப்பாடு அல்ல. வரப்போகிற சாப்பாட்டை சாப்பிட நம்மைத் தயார் செய்வது அந்த ஆரம்ப சிற்றுணவுதான். எப்போதுமே அந்த ஆரம்பச் சிற்றுணவு சுவைபடத் தயாரிக்கப்பட்டிருக்கும். ஏனெனில், சாப்பிட வந்திருக்கிறவர்கள் அது பிடிக்காமல் எழுந்து போய்விடக் கூடாதல்லவா. அதைப்போலத்தான் பிரசங்கத்தின் அறிமுகமும் இருக்க வேண்டும். அறிமுகம் பிரசங்கம் கேட்கிறவர்களுடைய ஆர்வத்தை அதிகரிப்பதாய், ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்துவதாய் இருக்க வேண்டும். "பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுடைய மனதில் அது ஓர் நல்ல எண்ணத்தை ஏற்படுத்த வேண்டியிருப்பதால் அதில் ஏதாவது தவறு நேர்ந்துவிட்டால் அதைத் திருத்துவது இலகுவான காரியமல்ல" என்று சொல்லுகிறார் ஆர். எல் டெப்னி (*Lectures on sacred rhetoric*, R. L. Dabney) அத்தோடு அந்தச் சிற்றுணவு பேருணவாய் இருந்துவிடக்கூடாது. அவ்வாறு இருந்துவிட்டால் சாப்பிட வந்தவர்களுக்கு இனி வரப்போகும் உணவைச் சாப்பிட மனமும், வயிறும் இருக்காது. அதேபோல் அறிமுகத்தின் வேலை பிரசங்கத்தை அறிமுகப்படுத்துவது மட்டுமே. அதுவே பிரசங்கமாக நீண்டுவிடக்கூடாது. இந்த வகையில் அமைய வேண்டிய பிரசங்கத்தின் அறிமுகத்தை இனி விவரமாகப் பார்ப்போம்.

### அறிமுகமில்லாத பிரசங்கம் தலையில்லாத சரீரம் போன்றது

முதலில் அறிமுகத்தின் அவசியத்தை உணர்வது அவசியம். ஒரு பிரசங்கம் எத்தனை அழகாக, ஆழமான சத்தியங்களோடு தயாரிக்கப்பட்டிருந்தாலும் கேட்கிறவர்களுக்கு அதைப் பற்றிய நல்ல அறிமுகத்தைக் கொடுக்காவிட்டால் அந்தப் பிரசங்கத்தின் பலன் குறைவாகவே இருக்கும். ஒரு சரீரத்திற்கு தலை எவ்வளவு அவசியமோ அந்தளவுக்கு பிரசங்கத்திற்கு அறிமுகம் அவசியம். தமிழ்ப் பிரசங்கிகளில் இரண்டு வகையினரை நாம் பார்க்கலாம். அருமையான அறிமுகத்தை மட்டும் கொடுத்துவிட்டு உப்புப்புளி இல்லாத பிரசங்கத்தை அளிப்பவர்கள் ஒரு வகையினர். கேட்பதற்கு பரவாயில்லை என்ற வகையில் பிரசங்கத்தைத் தயாரித்து அறிமுகமே இல்லாமல் பேசுகிற

வர்கள் அடுத்தவகையினர். இரண்டு வகையுமே பிரயோஜனமில்லாத பிரசங்கங்கள். நல்ல அறிமுகம் இருந்து பிரசங்கம் பயனுள்ளதாயிராவிட்டால் அதனால் கேட்பவர்களுக்கு எந்த நன்மையுமில்லை. அதேவேளை அறிமுகமே இல்லாததொரு பிரசங்கத்தால் அதிக பயனுமிருக்காது.

பிரசங்கத்தை எந்தளவுக்கு கவனத்தோடு தயாரிக்கிறோமோ அந்தளவுக்கு அறிமுகத்தையும் கவனத்தோடு தயாரிக்க வேண்டும். அறிமுகத்தில் கவனம் செலுத்துகிற பிரசங்கிகள் இன்று மிகவும் குறைவு. புதிய ஏற்பாட்டில் காணப்படும் பிரசங்கங்களை கவனித்துப்பார்த்தால் அவை அருமையான அறிமுகங்களைக் கொண்டமைந்திருப்பதைப் பார்க்கலாம். இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தைக் கவனித்துப் பாருங்கள். அங்கே, இயேசு யார் பாக்கியவான்கள் என்று ஆரம்பித்து பாக்கியவான்களுக்கு உள்ள தகைமைகளை விளக்கி கேட்டுக்கொண்டிருக்கிறவர்கள் மத்தியில் ஆவலைக் கிளப்புகிறார். அது மலைப்பிரசங்கத்தில் தொடர்ந்து வரப்போகிற செய்திகளுக்கு அருமையான அறிமுகமாக இருக்கிறது. சாலமோனின் பிரசங்கம் இன்னுமொரு நல்ல உதாரணம். அதில் “மாயை, மாயை எல்லாம் மாயை” என்று தன்னுடைய பிரசங்கத்தை ஆரம்பிக்கிறான் சாலமோன். அதன்பின் தன்னுடைய செய்தியை விளக்குகிறான். அவனுடைய பிரசங்கத்தின் அறிமுகம் கேட்பவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்ற நல்ல அறிமுகமாக அமைந்திருக்கின்றது. பேதுரு பெந்தகொஸ்தே நாளில் அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்து பிரமித்துப் போய் நின்ற மக்கள் மத்தியில் அந்த நிகழ்ச்சிகளையே தன்னுடைய பிரசங்கத்திற்கு அறிமுகமாகக்கொண்டு யோவேலின் தீர்க்கதரிசனத்தை நினைவுறுத்தி பிரசங்கம் செய்திருப்பதை வாசிக்கிறோம் (அப்போஸ். 2:14-39). இயேசுவும், சாலமோனும், பேதுருவும் தங்களுடைய பிரசங்க அறிமுகத்தில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார்கள்.

பவுல் அப்போஸ்தலனுடைய பிரசங்கங்களும் தகுந்த அறிமுகங்களோடு அமைந்திருப்பதை அப்போஸ்தல நடபடிகளில் வாசிக்கலாம். உதாரணத்திற்கு பவுல் அப்போஸ்தலர் 26ம் அதிகாரத்தில் அக்கிரிப்பா அரசனுக்கு முன்பாக பிரசங்கம் செய்தபோது பின்வருமாறு சொல்கிறார், “விஷேசமாய், நீர் யூதருடைய சகல முறைமைகளையும், தர்க்கங்களையும் அறிந்தவரானதால் அப்படி எண்ணுகிறேன். ஆகையால், நான் சொல்வதை பொறுமையோடு கேட்கும்படி வேண்டிக்கொள்கிறேன்” என்று தன்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறார். அக்கிரிப்பா யூத முறைமைகளையும், தர்க்கங்களையும் நன்கு அறிந்தவன் என்பது பவுலுக்குத் தெரியும். அதைப் பயன்படுத்திக் கொண்டு, அந்த உண்மையைச் சுட்டிக்காட்டி அக்கிரிப்பாவின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பி பேச்சை ஆரம்பிக்கிறார் பவுல். இது அக்கிரிப்பா பவுல் சொல்லப்போவதைக் கேட்பதற்கு அவனைத் தயார் செய்தது. அதேபோல் அப்போஸ்தலர் 17:22ல் மார்ஸ் மேடையில் நின்று, “அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கின்றேன்” என்று ஆரம்பித்து அத்தேனரின் கவனத்தைத் தன்பக்கம் திருப்பினார் பவுல். எந்தக் காரியத்தில் அத்தேனர் அதிக அக்கறை காட்டினார்களோ அதை வைத்தே அவர்களுடைய தவறை உணர்த்த பிரசங்கம் செய்தார் பவுல். இது ஒரு அருமையான அறிமுகம். இவ்வாறாக வேதத்தில் நாம் வாசிக்கின்ற பிரசங்கங்கள் அனைத்தும் நல்ல அறிமுகங்களோடு

அமைந்திருப்பதைக் காணலாம்.

இங்கிலாந்து நாட்டு அரசியை நாம் பார்க்கப்போனால் நம்மை அவருக்கு முன் அழைத்துச் செல்கிறவர் செய்கிற முதல் வேலை நாம் யார் என்பதை அரசிக்கு சொல்லி நம்மை அறிமுகப்படுத்தி வைப்பதுதான். அந்த அறிமுகம் மிக மிக அவசியம். அது இல்லாமல் நாம் அரசி முன் நிற்கக்கூட முடியாது. அதுபோல்தான் பிரசங்கத்தின் அறிமுகமும். நான் இதுவரை சொன்னவை மூலம் அறிமுகம் பிரசங்கத்திற்கு எத்தனை அவசியம் என்பதை விளங்கிக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

## பிரசங்க அறிமுகத்தைத் தயாரிக்கும்போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்

**(1) பிரசங்கி பிரசங்க அறிமுகத்தை எப்போதும் கடைசியாகத் தயாரிப்பது நல்லது**

பிரசங்கத் தயாரிப்பு பற்றி எழுதியுள்ள ஒரு போதகர் பிரசங்கத்தைத் தயாரித்து முடித்தபின்பே அறிமுகத்தைத் தயாரிக்க வேண்டும் என்று ஆலோசனை தருகிறார். அது நல்ல ஆலோசனைதான். ஏனெனில், முழுப் பிரசங்கத்தையும் தயாரித்த பின்புதான் அதன் உள்ளடக்கம் நமக்குத் தெளிவாகப் புரியும். ஆகவே, பிரசங்கத்தை தயாரித்தபின்பு நாம் சொல்லப்போகிற விஷயத்தின் அடிப்படையில் அதற்குத் தகுந்த, பிரசங்கத்தைத் கேட்கிறவர்களை ஈர்க்கக்கூடிய அறிமுகத்தை நம்மால் தயாரிக்க முடியும். பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுக்கும் நமக்கும் இடையில் ஒரு நட்புப்பாலமாக அமையும் பிரசங்கத்தின் அறிமுகத்தை சரிவர தயாரிக்க அதைக் கடைசியில் தயாரிப்பதே உசிதமானது.

**(2) அறிமுகம் எப்போதும் பிரசங்கத்தின் உள்ளடக்கத்தை அறிமுகப்படுத்துவதாக இருக்க வேண்டும்.**

அதாவது பிரசங்க உள்ளடக்கத்தோடு தொடர்பில்லாததாக அறிமுகம் அமைந்துவிடக்கூடாது. ஆத்துமாக்களுடைய கவனத்தை ஈர்க்க வேண்டுமென்பதற்காக எதையாவது சொல்லி பிரசங்கத்தை அறிமுகப்படுத்தக் கூடாது. நாம் எடுத்துக் கொண்டுள்ள பிரசங்கப்பகுதி அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தை (Context) விளக்குவதாக அறிமுகம் இருக்கலாம். அதாவது, நாம் எடுத்துக் கொண்டிருக்கிற வசனங்கள் எத்தகைய சந்தர்ப்பத்தில், எந்த முறையில் அமைந்து காணப்படுகின்றன என்றும் அதன் முக்கியத்துவம் என்ன என்பதையும் அறிமுகமாகக் கொடுக்கலாம். அதன் மூலம் நாம் பிரசங்கத்தை கேட்கிறவர்கள் பிரசங்கப் பகுதியை ஆராய வழி நடத்திச் செல்ல முடியும். நாம் எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதி ஒரு வரலாற்றுப் பகுதியாக இருந்தால் அல்லது இயேசு கிறிஸ்துவின் பூவுலக வாழ்க்கை சம்பவமாக இருந்தால் அந்தப்பகுதிகளின் வரலாற்று அல்லது வாழ்க்கை நிகழ்ச்சி நடந்த சந்தர்ப்பத்தை விளக்குவதை பிரசங்கத்தின் ஆரம்பமாகக் கொள்ளலாம். இந்தமுறையை ஒவ்வொரு பிரசங்கத்திலும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால், இதுவரை குறிப்பிட்ட பகுதிகளைப் பொறுத்தவரை இம்முறை மிகவும் இயற்கையானதாகும். இந்த முறையில் பிரசங்கத்தை அறிமுகப்படுத்துவதால் கேட்பவர்களை நேரடியாக பிரசங்கப்பகுதிக்கு அழைத்துச் செல்கிறோம்.

**(3) அறிமுகம் எப்பொழுதும் பிரசங்கத்தைக் கேட்பவர்களின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்க வேண்டும்.**

டெலிவிஷனில் நாம் பார்க்கும் விளம்பரங்கள் ஒரு சில நிமிடங்களுக்கு

மேல் இருக்காது. அந்த விளம்பரத்தைக் கொடுப்பவர்கள் தங்களுடைய முழுத்திறமையையும் காட்டி அந்த ஒரு சில நிமிடங்களுக்குள் தாங்கள் விற்கும் பொருளின் அருமை, பெருமைகளை விளக்க வேண்டும். அதைப் போலத் தான் பிரசங்கியின் அறிமுகம் இருக்க வேண்டும். பிரசங்கத்தைக் கேட்கிறவர் கள் ஆர்வத்தோடு அதைக் கேட்கும்படியாக சில நிமிடங்களுக்குள் அந்தப் பிரசங்கத்தை ஒரு விளம்பரதாரருக்கு இருக்க வேண்டிய திறமையுடன் அறிமுகப்படுத்த வேண்டும். பிரசங்கத்தைக் கேட்கிறவர்களின் கவனத்தை ஈர்த்து, தொடர்ந்து கேட்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதே நல்ல அறிமுகத்துக்கு இலக்கணம்.

**(4) அறிமுகம் எப்போதும் சுருக்கமாக இருக்க வேண்டும்**

அறிமுகம் எப்பொழுதும் சுருக்கமாக இருக்க வேண்டும். நீண்ட அறிமுகங்கள் பிரசங்கம் கேட்பவர்களுடைய கவனத்தை ஈர்ப்பதைவிட்டு அவர்களை சலிப்படைய செய்துவிடும். அறிமுகத்தைக் கேட்டவுடன் பிரசங்கம் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் அளவுக்கு அது சுருக்கமாக அமைந்திருக்க வேண்டும்.

**(5) அறிமுகத்தை எழுதி வைத்திருப்பது அவசியம்**

பிரசங்கம் கேட்பவர்களுடைய கவனத்தைக் கவருமளவுக்கு சுருக்கமாக அறிமுகம் இருக்க வேண்டுமானால் அதைப் பலதடவைகள் எழுதி வாசித்துப் பார்த்து, சொல்லிப் பார்த்து நமக்கு திருப்திதரும் விதத்தில் அது அமைந்த வுடன் அதைத் தெளிவாக எழுதி வைத்திருப்பது அவசியம். “முதல் கோணி ணால் முற்றும் கோணும்” என்பார்கள். ஆகவே அறிமுகத்தைப் பலதடவை கள் வாசித்து நினைவில் வைத்திருப்பதற்கு வசதியாக எழுதி வைத்திருப்பது பயனளிக்கும்.

**(6) அறிமுகம் பலவிதங்களில் அமையலாம்**

அறிமுகத்தின் அடிப்படை நோக்கமே பிரசங்கத்தில் நாம் சொல்லப் போகிற விஷயங்களை அறிமுகப்படுத்துவதுதான். பிரசங்கப்பகுதியோடு பிரிக்க முடியாத தொடர்புடைய அறிமுகம் பலவிதங்களில் அமையலாம். அதாவது, எடுத்துக் கொண்ட பிரசங்கப்பகுதியின் சந்தர்ப்பத்தை விளக்குவ தாக ஆரம்பிக்கலாம். இல்லாவிட்டால் பிரசங்கப் பொருளோடு தொடர் புடைய நடைமுறை வாழ்க்கையில் ஒரு சம்பவத்தை விவரித்து ஆரம்பிக்க லாம். பிரசங்கப் பொருளோடு தொடர்புடைய பழமொழியொன்றை விளக்கி ஆரம்பிக்கலாம். அதிர்ச்சி தரக்கூடிய ஒரு கேள்வியைக் கேட்டு கேட்பவர் களின் சிந்தனையை நம்பக்கம் திருப்பி ஆரம்பிக்கலாம். இப்படி பலவகை களில் அறிமுகம் அமையலாம். எந்தவகையில் அமைந்தாலும் அது பிரசங்கப் பொருளோடு தொடர்புடையதாக இருப்பது அவசியம்.

**(7) அறிமுகம் மன்னிப்புக் கேட்கிறவிதமாக இருக்கக்கூடாது**

அதிகாரத்தோடு பிரசங்கிக்க வேண்டிய பிரசங்கி ஆத்துமாக்களுக்கு முன் தன்னுடைய செய்திக்காக ஒருபோதும் மன்னிப்புக்கேட்டு பிரசங்கத்தை ஆரம்பிக்கக்கூடாது. பிரசங்க அறிமுகம் எப்போதும் ஆணித்தரமாகவும், அதிகாரத்துடனும், உறுதியோடும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் சலிப்படைந்து ஆர்வமற்று தங்கள் கவனத்தைப் பிரசங்கத்தில் காட்டமாட்டார்கள்.

# எது கிறிஸ்தவம் ?

சமீபத்தில் என் கையில் தமிழில் வெளியிடப்பட்ட ஒரு சுவிசேஷ கிறிஸ்தவ சிற்றிதழ் கிடைத்தது. அதிலிருந்த சில வாசகங்கள் என்னைப் பெருந்திகைப்புக்குள்ளாக்கின. அவ்விதழாசிரியர் இந்திய அரசியல் நிலமைகளையும், வரவிருக்கும் தேர்தலையும் குறிப்பிட்டு, அரசியலில் ஈடுபட்டிருக்கும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக நடந்து கொள்வதில்லை என்று குறைகூறியிருந்தார். அத்தோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. ஆனால், அவர் முன்னாள் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ், முன்னாள் கேரள மாநில முதல்வர் ஏ. கே. அந்தோனி, காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி எல்லோரையும் கிறிஸ்தவர்கள் என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார். இதழாசிரியருக்கு இவர்களில் யாருமே மெய்க் கிறிஸ்தவர்கள் இல்லை என்பது தெரியாமலிருந்தது. அது ஒருவிதத்தில் எனக்கு ஆச்சரிய மேற்படுத்தாவிட்டாலும் கவலையளிப்பதாக இருந்தது. இந்திய கிறிஸ்தவ உலகத்துக்கு ரோமன் கத்தோலிக்க மதத்திற்கும், புரட்டஸ்தாந்து சுவிசேஷக் கிறிஸ்தவத்திற்கும் இடையில் உள்ள இணைக்க முடியாத வேறுபாடு தெரியாமலிருப்பது கவலை தருகின்ற செய்தியே. கிறிஸ்தவம் எது? என்பது தெரியாமல் கிறிஸ்தவ சுவிசேஷத்தை ஒருவரால் எப்படி விளக்க முடியும்? சோனியா காந்தி ஒரு கத்தோலிக்கர். ஏ. கே. அந்தோனியும் ஒரு கத்தோலிக்கர். இவர்கள் இருவருமே கிறிஸ்தவ விசுவாசத்தை தங்களுடைய வாழ்க்கையில் ஒருபோதும் அறியாதவர்கள்; அடையாதவர்கள். கத்தோலிக்க மதத்திற்கும் சுவிசேஷ கிறிஸ்தவத்திற்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை; ஒரு போதும் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. இந்து மதமும், புத்த மதமும் எந்தளவுக்கு கிறிஸ்தவத்தோடு தொடர்பில்லாத புறஜாதி மதங்களோ அதேபோலத்தான் ரோமன் கத்தோலிக்க மதமும். அடிப்படைக் கிறிஸ்தவ வேதபோதனைகளுக்கெல்லாம் முரணானவை ரோமன் கத்தோலிக்க மதப் போதனைகள். இது தெரியாத தமிழ் கிறிஸ்தவ உலகத்தில் சுவிசேஷ கிறிஸ்தவ ஊழியம் எந்தளவுக்கு மோசமானதாக இருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. இந்திய கிறிஸ்தவம் இருண்டகாலத்தில் தொடர்ந் திருக்கிறது என்பதற்கு இதைத்தவிர வேறு ஆதாரம் தேவையா?

"கிறிஸ்தவர்" என்ற வார்த்தையை கிறிஸ்துவையும், வேதம் போதிக்கும் சுவிசேஷத்தையும் விசுவாசிப்பவர்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். மெய் விசுவாசத்தைக் கொண்டிராதவர்கள் கிறிஸ்தவர்களலல்ல. ரோமன் கத்தோலிக்க மதம் கிறிஸ்துவை விசுவாசிப்பதில்லை. வேதம் போதிக்கும் சுவிசே ஷத்தையும் அது விசுவாசிப்பதில்லை. ஆகவே, ரோமன் கத்தோலிக்க மதத்தை கிறிஸ்தவ மதமாகக் கருத முடியாது. மேலும், இரட்சிப்புக்கு கிரியைகள் ஆகாது என்று கர்த்தர் அறவே வெறுத்து ஒதுக்க, கிரியைகள் இல்லாமல் இரட்சிப்பு ஒருபோதும் கிடையாது என்று சொல்லுகிறது ரோமன் கத்தோலிக்க மதம். உலகில் இயேசுவைத் தவிர வேறு எவருமே தெய்வமாகப் பிறந்ததில்லை, பிறக்கப் போவதுமில்லை என்று வேதம் போதிக்க, மனிதர்களை (போப்பும், மேரியும், புனிதர்களும்) தெய்வப் பிறவிகளாகக் கருதி வழிபட வைக்கும் தேவ நிந்தனை செய்யும் மதம் ரோமன் கத்தோலிக்க மதம். வேதத்தின் போதனை

*களை அடியோடு நிராகரித்து வெறும் மனிதப் பிறவியான மேரியையும், பாவத்தின் மொத்த உருவான போப் 2-ம் ஜோன் போலையும் தெய்வமாக எண்ணி வணங்கி, சிலைகளுக்கும், புனிதர்களுக்கும் பூசை, புனஸ்காரங்களை யும், சடங்காச்சாரியங்களையும் நடத்தி வரும் இந்து மதத்தைப் போன்ற சாத்தா னின் கைக்கூலி ரோமன் கத்தோலிக்க மதம். இதை எப்படிக் கிறிஸ்தவத்தின் ஒரு பகுதியாகக் கருத முடியும்? இந்தியாவிலும், இந்தியாவுக்கு வெளியிலும் வாழும் தமிழர்கள் மத்தியில் ரோமன் கத்தோலிக்க மதத்தைக் கிறிஸ்தவத்தின் ஒருபகுதியாகக் கருதி வரும் பேராபத்து தொடர்ந்து நிலவுகிறது. எந்தப் பிசாசை கிறிஸ்து அழிக்க வந்தாரோ அந்தப்பிசாசின் கைக்கூலிக்கு விருந்து வைப்பது போல்தான் ரோமன் கத்தோலிக்க மதத்தைக் கிறிஸ்தவமாக எண்ணுவது.*

*இதற்கெல்லாம் காரணம் முதலில் (1) தமிழர்கள் மத்தியில் கிறிஸ்தவ இறை யியல்* (Christian Theology) *என்ற பெயரில் சமய சமரசக் கோட்பாடு* (Ecumenism) *சபைகளையும், ஊழியங்களையும் ஆண்டு வருவதுதான். கிறிஸ்தவர்களும், சபைகளும் சேர்ந்து இருக்க வேண்டும், உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இறையியல் கோட்பாடுகள் அந்த ஒற்றுமைக்கு இடையூராக இருந்துவிடும் என்ற சாத்தானின் ஆலோசனையால் வேத இறையியலைப் பார்த்து பாம்பைக் கண்டு அலறுவதுபோல் அலறி ஓடுகிறது தமிழ் கிறிஸ்தவம். மெய்யான இறையி யல் கோட்பாடுகளை அறியாதவரையில் பிசாசின் சிந்தனையை சத்தியமாக எண்ணி தொடர்ந்து அழிவை நோக்கியே போய்க்கொண்டிருக்கும் தமிழ் கிறிஸ் தவ சபைகளும், ஊழியங்களும். ஒரே சத்தியத்தை விசுவாசிக்கின்ற, நடை முறையில் சத்தியத்தை செயற்படுத்துகின்ற சபைகளுக்கும், ஊழியங்களுக்கு மிடையில்தான் ஒற்றுமை இருக்கமுடியும்; வளர முடியும். ரோமன் கத்தோலிக்க மதம் சத்தியத்தின் விரோதி. கிறிஸ்தவத்தை அழிப்பதற்கு சாத்தான் பயன் படுத்தும் கருவி அது என்ற உண்மையை இறையியலை வெறுக்கும் சமயசமரசக் கோட்பாட்டின் பிடியில் இருக்கும் தமிழ் கிறிஸ்தவம் உணர மறுக்கிறது.*

*இரண்டாவதாக (2) தமிழ் கிறிஸ்தவம் கிறிஸ்தவ வரலாற்றை அறியாதிருக் கின்றது. தமிழிலுள்ள கிறிஸ்தவ வரலாற்று நூல்கள் எல்லாம் ரோமன் கத்தோ லிக்க மத அடிப்படையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. தமிழர் வாழும் பகுதி களிலுள்ள (சமய சமரச) இறையியல் கல்லூரிகள் அனைத்தும் கிறிஸ்தவ வரலாற்றைப் போதிக்கும்போது கத்தோலிக்க மதத்தைப் பற்றிய உண்மைகளை வெளிப்படையாகப் போதிப்பதில்லை. 6-ம் நூற்றாண்டுக்குப்பிறகு படிப்படியாக கிறிஸ்தவ சபை வேதத்தை விட்டு விலகிப் போக ஆரம்பித்ததால்தான் ரோமன் கத்தோலிக்க மதம் உலகத்தில் தலைதூக்கியது என்பது பெரும்பாலான தமிழ் கிறிஸ்தவர்களுக்கு தெரியாதிருக்கின்றது. 6-ம் நூற்றாண்டுக்கு முன் ரோமன் கத்தோலிக்க மதத்தை வரலாற்றிலேயே பார்க்க முடியாது. (கடந்த இதழில் வந்த சபை வரலாற்றுத் தொடரை வாசித்துப் பாருங்கள்) தேவ குமாரனான இயேசு கிறிஸ்து ரோமன் கத்தோலிக்க மதத்தை உருவாக்க இந்த உலகத்திற்கு வரவில்லை; “என் சபையைக் கட்டுவேன்” என்று சொன்ன இயேசு தன்னுடைய திருச்சபையை, (வேதத்தில் காணப்படும்) தன்னுடைய போதனைகளின் அடிப்படையில் கட்டவே வந்தார். கிறிஸ்தவ வரலாறு தெரியாமலும், சத்தியம் தெரியாமலும் தமிழ் கிறிஸ்தவம் இன்று தள்ளாடிக் கொண்டிருக்கிறது.*

*மூன்றாவதாக (3) தமிழர்கள் மத்தியில் காணப்படும் சபைகளும், ஊழியங் களும் கிறிஸ்தவ சுவிசேஷத்தைப் பற்றிய தெளிவான அறிவில்லாமல் இருக்*

*கின்றன. இயேசு நேசிக்கிறார் என்பதைத் தவிர இவர்களுக்கு வேறு எதுவுமே தெரியாதிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் சத்தியங்களும், மனந்திரும்பி விசுவாசிப்பதன் அவசியமும், இரட்சிப்பு கிரியைகளால் ஏற்படாது என்பதும், மதமோ, சபையோ ஒருவனை மனந்திரும்ப வைக்கமுடியாதென்ற சத்தியங்களும் இவர்களுடைய அகராதியில் இல்லை. வெறும் ஞானஸ்நானத்தை மட்டும் கொடுத்து சபைக்கு ஆள் சேர்த்துக் கொண்டிருக்கின்ற சபைப்பிரிவுகள் இயேசுவின் பெயரில் அது ஒரு போலித்தனமான, பரலோகம் போகமுடியாத கூட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. வெறும் அனுபவத்தையும், ஆட்டத்தையும் மட்டும் நாடி கத்தோலிக்க பாதிரியான பேர்க்மனைத் தம் மேடைகளில் பாடவும், ஆடவும் வைத்து அழகு பார்த்துக் கொண் டிருக்கிறார்கள் அனேகர். கிறிஸ்தவ சுவிசேஷத்தைப் பற்றிய தெளிவான அறிவில்லாமல் தமிழ் சபைப் பிரிவுகளில் அனேகமானவை ரோமன் கத்தோலிக்க மதத்தை கிறிஸ்தவமாக எண்ணி ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இன்று சுவிசேஷக் கூட்டங்களை ரோமன் கத்தோலிக்க மதகுருமார் அன்றாடம் அலங்கரித்து வருகிறார்கள். சி. எஸ். ஐ. சபைகள் கத்தோலிக்க மதத்தை உடன்பிறவா சகோதரனாக எண்ணி ஏற்றுக் கொண்டிருக்கின்றன. கிறிஸ்தவ ஸ்தாபனங்களை எடுத்துக்கொண்டாலும் இதே நிலைதான். இந்தளவுக்கு பிசாசு இன்று தமிழ் கிறிஸ்தவத்தைத் தன் கையில் வைத்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறான்.*

*வெளிப்படுத்தல் 20-ல் நாம் வாசிக்கிறபடி பிசாசு கர்த்தரால் கட்டிப்போடப் பட்டிருந்தாலும், கொட்டம் அடங்காது இன்று செய்துவருகின்ற காரியங்களை தமிழர்கள் மத்தியில் தெளிவாகப் பார்க்கிறோம். விசுவாசிகளே சிந்தியுங்கள்! மெய்க்கிறிஸ்தவத்தை அறியாது கிறிஸ்தவம் என்ற பெயரில் தமிழர்கள் மத்தியில் வளர்ந்து வரும் அனேக திருச்சபைகளும், ஊழியங்களும் கர்த்தரின் ஊழியங்களா? அல்லது கர்த்தரின் பெயரில் நடக்கும் பிசாசின் தந்திரமா? கத்தோலிக்க மதத்தை நியாயப்படுத்துகிற எவரும் வரப்போகிற நியாயத் தீர்ப்பு நாளில் இராஜாவாகிய கிறிஸ்துவுக்கு முன் நின்று பிடிப்பது கஷ்டம்!*


## ஆத்மீக உணவளிக்கும் நூல்கள்

**இந்தியாவிலும், ஸ்ரீ லங்காவிலும் வாழும் நமது வாசகர்கள் நாம் வெளியிடுகின்ற நூல்களை கீழ்வரும் முகவரிகளுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். நூல்கள் பற்றிய விபரங்களுக்கும், விலை விபரங்களுக்கும் இம்முகவரிகளுடனேயே தொடர்பு கொள்ளவும்.**

**சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்**
***22. டி. பி. கே மெயின்வீதி, பைகாரா, மதுரை 625004, தமிழ்நாடு***

**டியாகிறைசிஸ் புக் சர்விஸ் (Diakrisis Book Service)**
***19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா***




அல்பர்ட் என், மார்டின் எழுதிய "கிறிஸ்தவன் யார்?" என்ற நூலின் தமிழாக்கம் மறுபதிப்பாக இந்த வருடம் தமிழகத்தில் வெளிவந்திருக்கிறது. பலரும் வாங்கிப் படித்துப் பயனடைந்திருக்கும் இந்த சிறு நூல் மெய்யான விசுவாசத்திற்கான அடையாளங்களை அப்பட்டமாக, ஆணித்தரமாக விளக்குகிறது. திருச்சபைப் போதகர்கள் ஞானஸ்நான வகுப்புகளில் தவறாமல் பயன்படுத்த வேண்டிய நூல். கிறிஸ்தவ விசுவாசத்தைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறவர்களும், சுவிசேஷத்தை அறிவிப்பவர்களும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

இதன் விலை இந்திய ரூபாய் 14/- 25 நூல்களுக்கு மேல் வாங்குபவர்களுக்கு 25% கழிவு தரப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்
22 டீ, பி. கே. மெயின் வீதி, பைகாரா
மதுரை 625004

மலர் 10 ஜீலை - செப்டெம்பர் 2004 இதழ் 3

1. உப்புச்சப்பில்லாத தியானச் செய்திகள்

2. என் ஆத்மீகப் பயணத்தின் சில அத்தியாயங்கள்

3. “டிஸ்பென்சேஷனலிசம்”
- தோற்றமும் வளர்ச்சியும் (பகுதி 3)

4. நீதிமானாக்கும் விசுவாசம்

5. விசுவாசத்தினால் நீதிமானாகுதல்
- பவுலும், யாக்கோபுவும்

6. பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவம் (பகுதி 3)

7. கிறீஸ்தவ கோட்பாடுகள்

8. பிரசங்கத்தின் அறிமுகம்

9. எது கிறீஸ்தவம்?

Terau Print